பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

ஜிஹாங்கஷ்த்தற்புதம்.

திருநெல்வேலி ஸ்கூல் ஹெட்மாஸ்டராகிய

ஜமாலுத்தீன்கானென்ற

முஹயித்தீன்கான் ஸாஹிபவர்கள்

கைலிகிதப்புத்தகத்தை

மேலப்பாளையம்

விசுவா அப்துர்றஹ்மான்லெப்பை

ஆலிம்ஸாஹிபவர்கள்

உத்திரவின்பேரில்

மேலப்பாளையம்

காளை ஹசன் அலிப்புலவரவர்களாற்

பார்வையிட்டு

மேற்படி காளை

அசன் அலிப்புலவரவர்களின்

முயற்சியால்

சென்னை:

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜுறத்து ௲௩௱௨௰௯ ஹ௵ ஜமாத்தில் ஆகிர்மீ

முதற்பதிப்பு.

Copy Right Registered.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
24 JUL 1911
MADRAS

ரீஜிஸ்த்தர் அறிவிப்பு.

இந்த ஜிஹாங்கஷ்த்தற்புதமென்னும் பெயருள்ள புத்தகத்தை அச்சிட முயற்சிசெய்த மேலப்பாளையங் கிழ வீரராகவபுரம் செய்யிது லெப்பை மூப்பன் தெருவிலிருந்து இப்போது சென்னை திருவல்லிக்கேணியி வந்திருக்கும் காளை ஹாபிலு முஹம்மது அலிலெப்பையவர்கள் குமாரர் காளை ஹசன் அலிப்புலவரவர்களினனுமதியின்றி மேற்படி பெயருள்ள புத்தகத்தையாவது சில பாகத்தைப் பிரித்தாவது மற்றொரு புத்தகத்தோடு கலந்தாவது ஜிஹாங்கஷ்த் தற்புதமென்ற பெயரைமாற்றி மறுபெயரிட்டாவது அல்லது தமிழிலிருப்பதை அறபுத்தமிழாக மாற்றியாவது அச்சுப்பதிப்பவர்களும், அச்சுப் பதிப்பித்துக்கொடுக்கும் அச்சுக்கூடத்தலைவர்களும், இந்த ரீஜிஸ்த்தரிலுள்ள ஷரத்துக்கு விரோதமாயுள்ள புத்தகங்களை வைத்திருப்பவர்களும், சட்டப்படி நடத்தும் பிரியாதுக்கு உத்திரவாதிகளாவார்களென்றியாவர்களுமறிவீர்களாகவும்.

இப்படிக்கு,

பிஸ்மில்லாஹி.

ஜிகாங்கஷ்த் தற்புத

அட்டவணை.

---*---

க. வது	சூரியனைத் தரிசித்தகாட்சி }	க
உ ,,	மதினாவைத் தெரிசித்தகாட்சி }	
ங ,,	பைத்துல் முக்கத்திஸுடையகாட்சி	ங
ச ,,	திமஷ்கு ஜாமிஆ மஸ்ஜிதின்காட்சி }	ச
ரு ,,	கற்பலாவின்காட்சி }	
சா ,,	நாற்பது அப்தால்களிருக்கப்பட்டலப்னான்மலையின்கா	ரு
எ ,,	ஷஹீதான அஸ்ஹாபுகளின்சந்தூக்குகளை வைத்திருக்கிற காட்சி }	
அ ,,	தூர்சீனாமலையின்காட்சி }	சா
கூ ,,	பகுதாதுடைய காட்சி }	
௰ ,,	சரந்தீபுமலையின்காட்சி }	
கக ,,	இஸ்க்கந்தர்பாத்ஷா ஆதம்நபியுடைய வியாறத்துக்குப்போன விபரத்தின்காட்சி }	எ
கஉ ,,	பஸ்றாப்பட்டணத்தின் காட்சி }	அ
கங ,,	பகுதாது ஷரீபுடையகாட்சி }	
கச ,,	காஸ்றானிப்பட்டணத்தின்காட்சி	கூ
கரு ,,	பைத்துல் முக்கத்திஸின்காட்சி }	௰
கசா ,,	மிஸ்றுப்பட்டணத்தின்காட்சி }	
கஎ ,,	நகுஸ்வான்பட்டணத்தின்காட்சி }	கங
கஅ ,,	மன்பயே பாதியாப்பட்டணத்தின்காட்சி }	
ககூ ,,	ஷெய்குஷிஹாபுத்தீன்சஹ்றுவர்தீயவர்களின்காட்சி }	கரு
உ௰ ,,	ஷெய்குஜலாலுத்தீன் தபரேஸர் அவர்களின்காட்சி }	
உக ,,	தம்மியாத்பட்டணத்தின்காட்சி }	கசா
உஉ ,,	காப்மலையின்காட்சி }	
உங ,,	நௌரஸ்த்தான்பட்டணத்தின்காட்சி }	கஅ
உச ,,	கஸ்னீன்பட்டணத்தின்காட்சி }	
உரு ,,	றாம்பட்டணத்தின்காட்சி }	
உசா ,,	ஹமதான்பட்டணத்தின்காட்சி	ககூ

௨௭	வது	லப்னான்மலையின்காட்சி	௨௰
௨௮	,,	ஸஆத் முதலியவர்களின்காட்சி	
௨௯	,,	ஷாம்பட்டணத்தின்காட்சி	
௩௰	,,	கிர்மான்பட்டணத்தின்காட்சி	௨௧
௩௧	,,	ஷீரூஸ்பட்டணத்தின்காட்சி	௨௨
௩௨	,,	சுலைமான் அலைகிஸ்ஸலாமுடைய அரமனையின்காட்சி	
௩௩	,,	பல்குப்பட்டணத்தின்காட்சி	௨௪
௩௪	,,	பஸ்ரூப்பட்டணத்தின்காட்சி	௨௫
௩௫	,,	பற்தாப்பட்டணத்தின்காட்சி	
௩௬	,,	குரூஸான் பட்டணத்தின்காட்சி	௨௬
௩௭	,,	இமாம்களின் ஸியாறத்துக்காட்சி	
௩௮	,,	பத்லாயீப்பட்டணத்தின்காட்சி	௨௭
௩௯	,,	இராயகான் பட்டணத்தின் காட்சி	
௪௰	,,	ஸாத்பட்டணத்தின்காட்சி	௨௮
௪௧	,,	அந்தாக்கியாப்பட்டணத்தின்காட்சி	
௪௨	,,	கஞ்சாப்பட்டணத்தின்காட்சி	௨௯
௪௩	,,	அபூஸஈத் சிம்மாசனக்காட்சி	௩௰
௪௪	,,	ஹமதான்பட்டணத்தின்காட்சி	
௪௫	,,	நஹாவந்துப்பட்டணத்தின்காட்சி	௩௧
௪௬	,,	கைபறுக்கோட்டையின்காட்சி	
௪௭	,,	கஷ்மீர்ப்பட்டணத்தின்காட்சி	௩௪
௪௮	,,	பதக்ஷான்பட்டணத்தின்காட்சி	
௪௯	,,	கார்சம்பட்டணத்தின்காட்சி	
௫௰	,,	ஸீனப்பட்டணத்தின்காட்சி	௩௫
௫௧	,,	அஸ்ஹாபுல்கஹ்புடையகாட்சி	
௫௨	,,	ஹமதான்பட்டணத்தின்காட்சி	௩௬
௫௩	,,	தப்ரேஸ்ப்பட்டணத்தின்காட்சி	௩௭
௫௪	,,	எமன்பட்டணத்தின்காட்சி	௩௮
௫௫	,,	ஹன்ஸலான்பட்டணத்தின்காட்சி	
௫௬	,,	சுல்த்தான் இருக்கியைக்கண்டகாட்சி	௩௯
௫௭	,,	ஸபாஹான்பட்டணத்தின்காட்சி	௪௰
௫௮	,,	ஷீராஸ்ப்பட்டணத்தின்காட்சி	௪௧
௫௯	,,	ஷெய்கு நஜ்முத்தீன் ஷெய்குலியாவுத்தீனுடையகாட்சி	
௬௰	,,	மவுலானாஷஹாபுத்தீன் புகாரியின்காட்சி	௪௨
௬௧	,,	ஷாஜிறுக்னுத்தீன்காட்சி	

௬௨	- வது அஜ்ருப்பட்டணத்தின்காட்சி	௪௪
௬௩	,, கிற்மான்பட்டணத்தின்காட்சி	
௬௪	,, தப்பேரஸ்ப்பட்டணத்தின்காட்சி	
௬௫	,, இஸ்க்கந்தரியாப்பட்டணத்தின்காட்சி	௪௬
௬௬	,, மக்த்தலூ இஸ்க்கந்தர்ப்பட்டணத்தின்கா	
௬௭	,, ஸாவாப்பட்டணத்தின்காட்சி	௪௭
௬௮	,, காமூன்பட்டணத்தின்காட்சி	௪௮
௬௯	,, பகுதாதுப்பட்டணத்தின்காட்சி	௪௯
௭௰	,, இமாம்மஹ்தீறலியல்லாஹு அன்ஹுடையகாட்சி	௫௰
௭௧	,, மதீனாவிலிருந்து பகுதாதுக்குப்போகிறகாட்சி	௫௧
௭௨	,, டில்லிநகரத்தின்சிறப்பு	௫௨.
௭௩	,, அஜ்மீற்பட்டணத்தின்காட்சி	௫௩
௭௪	,, மல்வாப்பட்டணத்தின்காட்சி	௫௪
௭௫	,, கூதின்மாகூதின் என்றபட்டணத்தின்காட்சி	௫௬
௭௬	,, பூரப்புக்குப்பின்னிருக்கிறதேசத்தின்காட்சி	
௭௭	,, மத்யன்பட்டணத்தின்காட்சி	௫௭
௭௮	,, நூஹு அலைஹிஸ்ஸலாமுடையவம்மிசத்தின்காட்சி	௫௯
௭௯	,, பரீகளைப்போலுள்ளபெண்களைக்கண்டகாட்சி	௬௧
௮௰	,, தஜ்ஜாலைக்கண்டகாட்சி	௬௨
௮௧	,, மூன்றுமனுடர்களுடையகாட்சி	
௮௨	,, இஸ்க்கந்தர் அலைஹிஸ்ஸலாமுடைய மதிலின்காட்சி	௬௩
௮௩	,, பசுக்களின்காட்சி	௬௪
௮௪	,, குல்ஸூம் சமுத்திரத்தின்காட்சி	௬௫
௮௫	,, இருளானபூமியின்காட்சி	௬௬
௮௬	,, இன்னெருபட்டணத்தின்காட்சி	
௮௭	,, ஜாமிஆப்பள்ளியின்காட்சி	௬௮
௮௮	,, நிஹால் மந்துப்பட்டணத்தின்காட்	
௮௯	,, கனிவருக்கங்களுள்ளதோட்டங்களின்காட்சி	௬௯
௯௰	,, தென்றிசையிலுள்ளகாட்சிகள்	௭௨
௯௧	,, கோட்டையின்காட்சி	௭௩
௯௨	,, அரண்மனையின்காட்சி	௭௮
௯௩	,, முபாஜாத்தென்னுமிடத்தின்காட்சி	௮௰
௯௪	,, பெருஞ்சிரிப்புமதிலின்காட்சி	௮௧.
௯௫	,, ஹிக்காயத்து	௮௩

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

முகவுரை.

———:*:———

அல்ஹம்துலில்லாஹிறப்பில் ஆலமீன்வல் ஆக்கிபத்துலில்முத்தக்கீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலாறசூலிஹி முஹம்மதின் வஆலிஹிவஅஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

ஹம்து ஸலவாத்திற்குப்பின் அறிந்துக் கொள்ளுங்கள்.

நமக்கெல்லாம் நாயகமாகிய முஹம்மது முஸ்த்தபா றசூல்ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய சிறியதந்தையாகிய அபீத்தாலி பவர்களுக்குக் குமாரரும். மேற்படி நாயகமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய செல்வப் புதல்வியாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் புருடநாயகருமாகிய அமீறுல் முஃமினீன் செய்யிதுனா அலீறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக்குமாரராக, முஃமீன்களுக் கெல்லாம் தாயாராகிய மேலே புகழப்பட்ட பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களீன் றெடுத்த செல்வப் புதல்வரான செய்யிதுனா ஹுஸைன்றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா அலீஸைனுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா முஹம்மது பாக்கிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குமாரர் செய்யிதுனா ஜஃபறுஸ்ஸாதிக் றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா மூசல்காலிம் றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா அலீமூசர்ரிலா றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா முஹம்மதுத் தக்கீறலியல்லாஹு அன்ஹு அவர்கள் குமாரர் செய்யிதுனா அலீத் தக்கீ றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா ஜஃபறுஸ்ஸாதிக்குதானீ அலிய்யுல் அஸ்க்கரீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குமாரர் செய்யிதுனாஅப்துல்லாறலியல்லாஹுஅன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா அஹ்மதுறலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா மஹ்மூதுறலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா முஹம்மது றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா ஜஃபறு றலியல்லாஹு அன்

ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா அலிய்யுல் பகுதாதீ புகாரீ றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குமாரர் செய்யினா அலீறலியல்லாஹு அன்ஹு, அவர்கள் குமாரர் செய்யிதுனா அ்ஹ்மதுல்க்கபீறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குமாரர் செய்யிதுனா வஸனதிநா, வபகுறுனா, வதுதறுனா, குதுபுல் அக்த்தாபு ஷெய்குல் மஷாயிகு மகுதூம் ஜிஹானியான்ஜிஹாங் கஷ்த்தென்னும் பட்டப்பெயருற்ற செய்யிது ஜலாலுத்தீன்ஹுஸைன்கத்த ஸல்லாஹு ஸிர்றஹுல் அஸீஸவர்கள் துறுக்கிஸ்த்தான் தேசத்தைச்சேர்ந்த புகாருப்பட்டணத்தில் ஹிஜுறத்து எழுநூற்றி யேழாம் வருஷம் ஷஃபான்மாதம் பதினேந்தாம்திகதிபற அத்திரவன்று பிறந்து வளர்ந்து அவர்களுடைய சிறிய தந்தையாகிய செய்யிதுனா ஷெய்குஸத்றுத்தீன் புகாரீறஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடத்தில் கிலாபத்தெனும பரிவட்டத்தைப்பெற் றணிந்துக் கொண்டும், ஷெய்குல் இஸ்லாம் ஷெய்கு அபீபுத்தீன் அப்துல்லாஹில் மித்ரீறஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் மக்கமாநகரத்தில்வைத்துத்தொப்பியும், ஜுப்பாவும் பெற்றணிந்துக்கொண் டவர்களுடையசன்னிதானத்தி லிரண்டு வருஷமிருந்து மஃரிபத்துடைய அவாரிபுகளென்ற ஸுலூக்குக் கித்தாபுகளைக் கற்றுணர்ந்துக்கொண்டும், ஹலறத்து இமாம் அப்துல்லாஹில்யாபிஈறஹ்மத்துல் லாஹி அலைஹி அவர்களை மக்கமா நகரில்க்கண்டு முலாக்காத்துச் செய்துக்கொண்டும், இன்னமனேகானேக அவுலியாக்களிடமிருந்து பற்பல விதமான இல்முகளையும், அற்புதவிதமான நிஃமத்துகளையு மடைந்துக்கொண்டும், ஹலறத்து ஷெய்கு நஸீறுத்தீன் ஸிருகே தெஹ்லவீயவர்களுடைய கலீபாவாக இருந்தரசாட்சி செய்தார்கள்.

இவ்விதமான தறஜாக்களையும், இவைகளிலு மேலான நிஃமத்துக்களையுமடைந்த மகாகாரணங்களையுள்ள செய்யிதுனா ஜலாலுத்தீன்ஹுஸைன் புகாரீ யென்ற திருநாமத்துடன் நபிமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய திருவாக்கால் மகுதூம் ஜிஹானியான் ஜிஹாங்கஷ்த்தென்ற பட்டப்பெயரையுங்கொ

டுக்கப் பெற்ற நாயக மவர்கள் ஆகாயத்திலும், பூமியிலும், நீரிலும், நிலத்திலும், காட்டிலும், கனாயிலும், கடலிலும், மலையிலும், இன்னமனுடர்களறியாத அனேக விநோதமான அற்புதமுள்ள தலங்களிலும், யாத்திரைசெய்து தங்களுடைய திருவிருகண்களால் அங்கங்குகண்ட அதிஜயங்களையும், துதிஜயங்களையும் ஹலறத்தவாகள் திருவாயாலருளினதும், பாரிஸிப் பாஷையி லெழுதினதுமான முஸாபற் நாமாவென்ற பாரிசிக்கித்தாபைப் பாரிஸிப்பாஷை தெரியாதத்தமிழ்ப் பாஷையர்களி லனேகர்கள் தமிழில் தறுஜுமாச்செய்யவேணுமென்றுவிருப்புற்றபடியால் ம ா ா ஸ்ரீ திருநெல்வேலிஸ்கூல் ஹெட்மாஷ்டராகிய ஜமாலுத்தீன்சான் என்ற முஹ்யித்தீன் கான்ஸாஹி பவர்கள் மேற்படிப் பாரிஸிக் கித்தாபைத் தமிழ்ப்பாஷையில்த் தறுஜுமாச் செய்திருந்த கைலிகிதக் காப்பியை மேலப்பாளையம் ஹலறத்து விசுவா அப்துர்றஹ்மான் லெப்பை ஆலிம்ஸாஹிபவர்க ளுத்தரவின்பேரில் மேலப்பாளையம் ஹாபிலுமுஹம்மது அலிலெப்பை யவர்கள் குமாரன் யாதொரு கல்வி கல்லாத காளை ஹஸன் அலியென்பவன், முன்பின்னான சொற்களையும், பின்முன்னான சொற்களையும் தமிழ்வாசிப்புக் கொழுங்கு படுத்தியிதற்கு (ஜிஹாங்கஷ்த்தற்புத)மென்று பெயருங் கொடுத்து அச்சிடலானேன்.

ஆகையா லிப்புத்தகத்தை வாசிக்குங் கனவான்கள் எப்பிழைகளைக் கண்டாலும் திருத்தி வாசித்து இவ்வடியேன் மீது துஆச் செய்துக்கொள்ள வேணுமென்று விரும்புகிறேன்.

இதில் ருகூ-வது, பக்கத்தில் வருவது கூதின்மா கூதினென்ற சரித்திரத்தில் உ-வது, வரியில் அகலமென்பதற்குக் கனாயென்று விழுந்துவிட்டது அதை அகலமென்று வாசிக்க விரும்புகிறேன்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஜிஹாங்கஷ்த் தற்புதம்

சரித்திர ஆரம்பம்.

க-வது. சூரியனைக்கண்டு தெரிசித்த காட்சி.

ஹலறத்து குதுபுல் அக்த்தாபு ஷைகுல் மஷாயிகு.

மகுதூம் ஜிஹானியான் ஜிஹாங் கஷ்த் தென்னும் பட்டப் பெயருற்ற மவ்லானு சையிது ஜலாலுத்தீன் ஹுஸைன் றஹிம ஹுல்லாஹு அவர்கள் சொல்லுகிறுர்கள். நான் மக்காவுக்குப் போய் ஹஜ்ஜு செய்யும் பிரயாணங் களில்நின்றும் ஓர் பிரயாணத்தில் நாலாவது வானத்திற்குப் போனேன் மேற்படி வானத்தி லிருக்கப் பட்ட சூரியனைக் கண்டு ஒளிவு பொருந்திய சூரியனே! அஸ்ஸலாமு அலைக்கு மென்று சொன்னேன். அப்போது சூரியனனது யக்கினென்ற பாதைக்கு வழிகாட்டுகிறவர்களே! வஅலைக்குமுஸ்ஸலாமென்று சொல்லினது. அப்பால் முலாக்காத்து முறைகளெல்லா முடிந்தபின்பு. அங்கிருந்து மீண்டு மக்கமா நகரத்திற்கு ஹஜ்ஜு செய்வதற்காகப் போனேன். ஆனல் சூரிய காந்தியால் நான் பச்சை நிறமாகி விட்டேன்.

உ-வது. மதினவைத் தெரிசித்த காட்சி.

மக்கமா நகரில் ஹஜ்ஜு செய்து முடிந்ததின் பிறகு பிரயாணமாகி மதினமா நகரத்திற்குப் போய் ஹலறத்து முஹம்மது றசூல் சல்லல்லாஹு அலைகிவசல்ல மவர்க ளுடைய றவுலாவை ஸியாறத்துச் செய்யப் போனேன் மேற்படி றவுலாவின் வாசற் காவற்காரரிடம் கதவைத் திறங்கள் நான் ஸியாறத்துச் செய்யவேணுமென்று சொன்னேன். அதற்கவர்கள் ஏற்பட்ட காலத்திற் க்தவைத் திற

ப்போமே தவிர மற்றக் காலங்களில் நாங்கள் கதவு திறக்கிறதில்லே. ஆனால் நபிநாயகத்தின் அவுலாதுகளுக்கு மாத்திரம் கதவுதிறப்போம் ஆகையாலிப்போது கதவு திறக்க மாட்டோமென்று சொன்னார்கள் அதற்குநான் செய்யிதென்றும்? நபிநாயகத்தின் அவுலாதென்றும் சொன்னேன். அதற்கவர்கள் உங்கள் நிறம் பச்சையாயிருக்கிறதே நபிநாயகத்தின் அவுலாதுகளுக்குப் பச்சை நிறங் கிடையாதே யென்று சொன்னார்கள். அப்போது நான் சூரியனைத் தெரிசிக்க நாலாம் வானத்திற்குப்போனேன் அந்தச் சூரிய னுடைய காந்தியா லெனது நிறம் பச்சை யாகிவிட்ட தென்று சொன்னேன். அப்போ தந்த வாசற்காவற் காரர்களும் என்னைப் போல் ஸியாறத்துக்கு வந்திருக்கும் ஹாஜிகளும் நான்சொன்னதை யொப்புக்கொள்ள வில்லே. ஹாஜிகளென்ற அனேகனேக பெரியோர்களும் ஆலீம்களும்? முத்தக்கின்களான கலீபாக்களு மான என்னோடு நபி நாயகத்தின் ரவுலாவுக்கு வந்திருந்தவர்க ளடங்கலுக்குங் கதவு திறக்காததினால் மேற்படி றவுலாவின் கதவு தானகத் திறக்கவேணுமென்ற பிரார்த்தனே யுடன் அவர்க ளொவ்வொருவர்களும் சிறப்பான றவுலாவை மும்மூன்று தடவை சுற்றி வந்து மேற்படி கதவுதன் படியாய்த் திறக்கவேணுமென்று துஆ விரந்தார்கள்? அதற்குங் கதவு திறக்கவேயில்லே? யாதொரு ஜவாபுங் கிடைக்கவில்லே: அப்பால் நான் றவுலாவைச் சுற்றி வந்து துஆக் கேட்கும்படியான என்னுடைய முறை வந்த போது நான் முதலாவது வுலூச்செய்து இரண்டு றக்அத்துத் தொழுகையைத் தொழுது முடித்துவிட்டு என்னுடைய ஜத்தே அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலேக்க வென்று வரக்கக் கூப்பிட்டுப் பிரார்த்தனே செய்தேன் உடனே மகா மகிமை பொருந்திய றவுலாவிலிருந்து அலைக்கு முஸ்ஸலாம் யா அஹ்ஸன் வலதீ யென்று சப்தம் வந்தது அதின் பிறகு பறக்கத்தாகிய கதவிலிருந்த பூட்டுப் பூமிமீதுவிழுந்தது கதவுந் தன்படியே திறந்துவிட்டது அப்பால் நான் றவுலாவி னுள்ளே சென்று ஹலறத்தவர்களேத் தாங்களே பஹிரங்கமாக நேரில்வரவேணு மென்று அவர்களிடம் மன்ருடினேன். அப்போது. ஓமக்தூம் ஜிஹானியான் ஜிஹாங் கஷ்த்தே வாருமென்று பாரிசிப் பாஷையி லுத்தரவாச்சுது. அப்போது தான் மக்தூம் ஜிஹானியான் ஜிஹாங் கஷ்த்தென்று பட்டங் கிடைத்தது அதின் பொருளென்ன வெனில் உலகத்தைச் சுற்றி யாத்திரை செய்த நாயகம் மென்பதாம். பின்பு நான் ஸியாறத்துச் செய்து விட்டுத் திரும்பி மதினவுக்கு வந்தேன். மதினவி லுள்ள ஜன

ங்க ளெல்லாம் கூக்குரலிட் டழுது பிரார்த்தித்து ஓ! மக்தூம் ஜிஹானியான் ஜிஹாங் கஷ்த்தே யெங்களை மன்னியுங்கள்? எங்க ளுக்குத் தெரியாது? நாங்க ளுங்களை யறியவில்லையென்று மன்னிப் புத் தேடினவர்களாக ஸஜ்ஜாதா வுடையவர்களும்? ஆலீம்களும்? கலீபாக்களும்? ஸாலிஹீன்களும்? ஊரிலுள்ள எச்சனங்களும் என க்குக் காணிக்கையாக விதவிதமான அனேக நிஃமத்துகளையும், பற் பல விதமான வஸ்த்துகளையுங் கொண்டு வந்து காணிக்கை செலு த்தினார்கள்? நான்ஒரு வஸ்த்தையும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் ஸாஹிபு ஸஜ்ஜாதா விடத்தில் நபிநாயகத்தினுடைய பாதரட்சை யைக் கேட்டேன் அவர்கள் தந்தார்கள். அதைவாங்கி அதிக மகிமை யுடன் எனதிரு கண்ணிலும் வைத்து முத்திக் கொண்டு சிரமீது வைத்துச் சுமப்பதுடன் ஹிந்துஸ்தானுக்குப் புறப்பட்டேன் ஹிந் துஸ்தானுக் கருகே செல்லும்போது என்னுடைய முரீதான டில்லி பாத்ஷா வாகிய சுல்த்தான் பைரோஸ் ஷாஹானவர் சில காதவழிக் கெதிர்வந்து என்னைச் சந்தித்து 'என் தலையி லிருக்கிற நபிநாயகத் தின் பாதத்தை வாங்கித் தன்னுடைய சிரசிலணிந்துக் கொண்டு டில்லிநகரத்துக்குப் போய்விட்டார். பக்கீராகிய 'நான் இரண்டா வது ஹஜ்ஜுக்காக மக்கமாநகருக்கும் புறப்பட்டேன்.

௯-வது. பைத்துல் முக்கத்திஸுடைய காட்சி.

பைத்துல் முக்கத்திசுக்குப் போனேன் அவ்விடத்தில் இலட் சத் திருபதாயிரம் நபிமார்கள் நித்திரை செய்கின்றார்கள். அதா வது அடங்கியிருக்கிறார்கள். அவர்களின் தலைமாட்டில் இபுறுஹீம் கலீலுல்லா நபியவர்களும் நித்திரை செய்கிறார்கள். ஏழையாகிய நானந்த நபிமார்களை ஸியாறத்துச் செய்து விட்டு மிஸ்று ஷாம் தேசங்களுக்குப்போய். அப்பால் மஸ்ஜிது அக்ஸாவின் தவாவு செ ய்து ஹஸனத்துப் பெற்றேன். மஸ்ஜிது அக்ஸாவின் சுவரின்பேரி லெழுதியிருக்கிற தாவது. எந்தமனுட னிர்தப்பறக்கத் துடைய மஸ்ஜிதைத் தவாபு செய்வானோ அந்த மனுட னுடைய. பாவங்க ளெல்லாம். மரத்திலிருந்து காய்ந்த இலைக ளுதிர்வது போ-லுதிர் ந்துவிடு மென் றெழுதி யிருக்கிறது. இந்த பக்கீராகிய நானதை யும் ஸியாறத்துச் செய்து விட்டு திமஷ்குத் தேசத்துக்குப் போ னேன்.

—*—

௪-வது. திமஷ்கு ஜாமிஆ மஸ்ஜிதின் காட்சி.

திமஷ்கு ஜாமிஆ மஸ்ஜிதுக்குப் போனேன் மேற்படி மஸ்ஜிதைக் கட்டுவதற்கு எழுபது ஒட்டகப்பாரமுள்ள இரத்தினாதிகளும், சிகப்புக்கல்களும், வைடூரியங்களும், நவரத்தினங்களும், தங்கங்களும், வெள்ளிகளும் செலவாயிருக்கிறது. அந்தப் பள்ளியில் ஒவ்வொரு றுக்குன் களிலும் பனிரண்டாயிரம் நபிமார்கள் நித்திரை செய்கிறார்கள். இன்ன மந்தப் பள்ளியில் பனிரண்டாயிர மிஹ்றாபுக ளிருக்கின்றன. ஒவ்வொரு மிஹ்றாபிலும் ஒவ்வொரு நபி நித்திரை செய்கின்றார்கள். ஒவ்வொரு நபிக்கு மத்தியில் ஒவ்வொருக்கிந்தீ லென்ற விளக்குப் பிரகாசிக்கிறது. மேற்படி பள்ளியி னொவ்வொரு றுக்குன் களிலும் ஜனங்கள் தொழுகிறார்கள். அனேக ஆறுகளுங் குளிர்ச்சியுடன் செல்லுகின்றன. உலக மடங்கலிலு மிப்பேர்ப் பட்ட ஜாமிவு மஸ்ஜிது எங்குமில்லை? மேற்படி மஸ்ஜிதின் நான்கு திசைகளிலும் பயிர்கள் விளைகிறது? இந்த ஏழை யாகிய நான் வியாறத்துச் செய்து இவ்வதிசய மான எல்லாத் தலங்களையும் வஸ்துக்களையு மென்னுடைய கண்ணால் பார்த்துவிட்டுக் கற்பலாவுக்குப் போனேன்.

௫-வது. கற்பலாவின் காட்சி.

கற்பலாவில் அமீறுல் முஃமினீன் இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதான போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுக்கு ஹக்கதஆலா வுடைய வுத்தரவாச்சுது அதாவது ஓய்-ஜிபுரீலே இமாம். ஹுசைன் றலியல்லாஹு அன்கு அவர்களுடைய திரேகத்தி லுள்ள இரத்தங்களில் நின்றுஞ் சில சொட்டுகள் பூமிமீது விழுந்திருக்கிறது அதுபோக மீதி யிரத்தங்களை யொரு சீசாவி லடைத்துப் பத்திரம் பண்ணிவையு மென்றுத்தரவாச்சுது அதுபோல் ஹக்கதஆலாவி னுத்தரவுப் பிரகாரம் இமாம் ஹுசைன் றலியல்லாகு அன்கு அவர்களுடைய இரத்தத்தைச் சீசாவில் பத்திரம் பண்ணி வைக்கப் பட்டது. ஆனால் மகிமை பொருந்திய மேற்படி திரேகத்தி லிருந்து சில சொட்டுகளை விழப்பெற்ற பூமியின் குணமாகிறது யாருக்காவது கஷ்டம் நேரிட்டால் அதினுதாரணம் நொண்டி, செவிடு, ஊமை முதலியவர்கள் அந்த

விடத்தி லுள்ள சொற்ப மண்ணை யெடுத்து மேற்படி வியாதியுள்ள விடத்தில் தடவினால் நாயனுடைய வல்லமையால் சுஸ்த்தமாய்விடு கிறது. அந்தப் பூமியில் ஒரு கிணற்றைப்போ லிருபத்தினாலு செஜ ஆழ முள்ள வொரு கிடங்குண்டா யிருக்கிறது. அந்தக் கிடங்கானது ஆஷுறு வன்றைக்கொரு பெரிய வார்ப்பு மிடா, அல்லது பெரிய கிடாரத்தைப்போற் கொதிக்கிறது. இந்தப் பக்கீறு அவ்விடத்தை ஸியாறத்துச் செய்து விட்டு இமாம் ஹசன் றலியல்லாகு அன்கு, இமாம் ஹுசைன் றலியல்லாகு அன்கு இவ்விருவர்களுடைய றவுலாவுக்கு வந்தேன் கபுறுகளுக்குக் கால்மாட்டில் ஐந்து சேர் நிறையுள்ள சுறுமா டப்பி யொன்று வைக்கப் பட்டிருக்கிறது அந்த விடத்திற்கு வருகிறவர்கள் மேற்படி சுறுமா டப்பியிலிருந்து கம்பியில் சுறுமாவை யெடுத்துக் கண்களி லிடுகிறார்கள் மேற்படிக் கபறுக்குக் கால்மாட்டி லொரு ஊற்று ஆறாக ஓடிக் கொண்டிருக்கிறது அந்தத் தண்ணீ ராகிறது நஞ்சை யென்னும் பயிர்களுக்குப் பாய்கிறது மிகவும் செழிப்பா யிருக்கிறது.

கூ-வது. நாற்பது அப்தால்க ளிருக்கப்பட்ட லப்னான் மலையின் காட்சி.

மேற்படி யிடத்திலேயே லப்னானென்னும் மலை யிருக்கிறது அந்த மலையி னுச்சியில் நாற்பது அப்தால்க ளொற்றுமையா யிருக்கிறார்கள். அவர்கள் பூலோகத்தி லிறங்கி யுலாவிக்கொண்டு திரிகிறார்கள் அவர்களுடைய தைக்கா அந்த மலையின் மேலிருக்கிறது அந்த மலையின்மேல் நாற்பது மிஹ்றாபுகளு மிருக்கிறது ஒவ்வொரு மிஹ்றாபுக்கு மத்தியி லிருக்கப்பட்ட வொவ்வொரு அப்தாலுக்கு முன்பாக வொவ்வொரு நல்ல தண்ணீ ரூற்று ஓடிக்கொண் டிருக்கிறது. அவர்கள் இரவுகள் முழுவதிலும் குறுஆனை ஓதுவதுடனே அல்லாகுத் தஆலாவை திக்றுஞ் செய்துக் கொண் டிருக்கிறார்கள். ஆனா லொருவரிடத்தி லாவது வெளிப் படுகிறதில்லை அவ்விடத்தில் பலவித மான கனி வருக்கங்க ளுள்ள மரங்கள் கனியால் நிறைந்திருக்கின்றன. இந்தப் பக்கீறாகிய நானந்தப் பட்டணத்திற் போய் ஒவ்வொருவனையுஞ் சந்தித்தேன்.

எ-வது, ஷஹீதான அஸ்ஹாபுகளின் சந்தூக்குகளை வைத்திருக்கிற பள்ளிவாசலின் காட்சி.

ஒரு பள்ளி வாசலிருக்கிறது அதில் நபிநாயகத்தின் அஸ்ஹாபிகளில் நின்றும் இருபத்தி மூவாயிரம் அஸ்ஹாபி மார்களை வைத்திருக்கிறது அவர்களைக் கபறி லடக்கஞ் செய்யவில்லை நித்திரை செய்வதுபோல் படுத்திருக்கிறார்கள். அவ்விடத்திற் போகிற யாத்திரைக் காரர்களுக்குத் தரிசனங் கிடைக்கிறது அவர்களுடைய தலையி துள்ள காயங்களில் பஞ்சுகளை வைத்திருக்கிறது அந்தப் பஞ்சை யெடுத்தால் காயத்தி லிருந் திரத்த மோடுகிறது பஞ்சை வைத்துவிட்டா லிரத்தம் நின்றுவிடுகிறது. ஏனென்று லிவர்கள் உண்மையான ஷஹீதா யிருப்பதா லிவ்விதம் நடக்கிறது நான் தெரிசித்தேன்.

அ-வது. தூர்சீனுமலையின் காட்சி.

தூர்சீனு மலையின் மத்தியில் நபி மூசா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்கள் நித்திரை செய்கிறார்கள் நானவர்களுடைய மக்புருவுக்குள் போனேன் எனக்குத் தரிசனங் கிடைத்தது.

கூ-வது. பகுதா துடைய காட்சி.

பகுதாதில் காஜா உவைசுல் கறனை் அவர்கள் நித்திரை செய்கிறார்கள் அவர்களுடைய மக்புரு மலையின்மே லிருக்கிறது அந்த விடத்தி லனேகனேக ஜனங்கள் வியாரத்துக்காகக் கூடுகிறார்கள் நானும் வியாறத்துச் செய்தேன்.

ய-வது. சரந்தீபு மலையின் காட்சி.

சரந்தீபு மலையின்மே லிருக்கிற கோட்டையிற் போனேன் அவ்விடத்தில் பாவா ஆதம் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்கள் நித்திரை செய்யக் கண்டேன். அவ்விடத்தி லெழுதப்பட்டிருக்கிறது நபி ஆதம் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களைக் காட்டி லிருந்

து பிடித்துக் கொண்டு வந்து பயிர் பச்சைகளில்லாத தலத்தில் வைக்கும் படியாக அல்லாகுத் தஆலா ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுக்குத்தரவு செய்தான் அவ்வுத்தரவின் பிரகாரம் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்கள் ஆதம் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களைப் பிடித்துப் பாழான நிலத்திற் கொண்டுவந்து விட்டார்கள். அவ்விடத்தில் ஆதம் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்கள் ஒற்றைக்காலில் நின் றழுது அல்லாகுத் தஆலாவிடத்தில் தௌபாச் செய்து மன்றாடினார்கள். அதாவது, ஒரு ரிவாயத்தில் நாற்பது வருடமென்றும் மற்றொரு ரிவாயத்தில் எழுபது வருடமென்றும் வருகிறது அவ்வித மழுகையிலிவர்களுடைய கண்ணிலிருந்து கண்ணீரோடிக் கொண்டிருந்தது, அந்தக் கண்ணீரான தண்ணீர்ச் சொட்டுகள் கண்ணிலிருந்து மண்ணில் விழுந்தமாத்திரமே வைடூரியம், சிவப்பு, பச்சை, மரகத முதலிய பற்பல இரத்தினங்களு முண்டாய்விட்டது அதின் பிரகாசமான தவர்களுடைய காலில் சூரியனைப்போற் பிரகாசித்துக் கொண்டிருந்தது அவர்களுடைய பாதத்தின் கீழே யிருந்த கல்லான திரத்தினங்களின் கேணியாய்விட்டது அந்தக்கல்லோ தரையிலிருந்து மூன்று கெஜ முயரமிருந்தது. அதின் சமீபத்தி லொரு ஆறுமோடுகிறது. நான் ஸியாறத்துச் செய்தேன்.

கசு-வது. இஸ்க்கந்தர் பாத்ஷா ஆதம் நபியுடைய ஸியறாத்துக்குப்போன விபரத்தின் காட்சி;

நாம் தேசத் தரசராகிய இஸ்க்கந்தர் பாத்ஷா அவ்விடத்திற்குப் போனார், சமுத்திரங்களில் உறுதியான ஆறுபாலங்களைக் கட்டினார் அங்கிருந்து சென்று சரந்தீபு மலையை விட்டு வெளியானார். சரந்தீபுக் காட்டை நோக்கிப் போகும்போ தொருநாள் வழிதப்பி யிருளான விடத்தி லானார் அவ்விடத்தில் யானை, ஒட்டக முதலிய குரூரமான மிருகங்களைக் கண்டு இஸ்க்கந்தர் பாத்ஷா பயங்கர முற்றுத் தட்டழிந்து தயங்கி மயங்கித் தடுமாறி நாயனிடத்தில் மன்றாடினார், அப்போது நாயனுடைய வுத்தரவால் மயிலைப் போன்ற ரூபமுடைய இரண்டு மனுடர்கள் தோன்றி மரத்தின் மீதுட்காாந்து கொண்டு ஒய் இஸ்க்கந்தரே யேன்கவலை யுடன் படுத்திருக்கிறீர் இங்கே வாரும் நாயனுடைய வுத்தரவு கொண்டுமெக்கு நாம் வழி

காட்டுகிறே மென்று சொன்னூர்கள். உடனே யிஸ்க்கந்த ரெழுந்து வந்தார் அவ்விரண்டு மயில்போன்ற மனுடரும் இஸ்க்கந்தருக்கெதிரே வந்து அவருடைய தலைக்கு மேலே பறந்துபோனூர்கள். இஸ்க்கந்த ரவர்களைத் தொடர்ந்து போனூர் இவ்விதமாக இஸ்க்கந்தரை ஆதம் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுடைய பாத மிருக்கப்பட்ட விடத்திற் கொண்டுபோய் விட்டார்கள். அவ்விரண்டு மயிலுமாகிறது (மறுதான கைபு) அதாவது, மறைவான மனுடர்களென்று பெரியோர்கள் சொல்லுகிறூர்கள். அப்பால் இஸ்க்கந்தர் பாத்ஷா ஆதம் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுடைய பாதத்தை ஸியாறத்துச் செய்தார் அந்த விடத்தி லொரு இரும்புச் சங்கிலியை யூகமாகத் தொங்கவிட்டார். அந்தச் சங்கிலியி னுதவியா லந்த மலையின் மேல் ஜனங்கள் போகிறூர்கள். அதில்லாவிடி லந்த மலையினுச்சியின் மேற்போகிற திடம்பாடாகாது அந்தப்பாத மிருக்கப்பட்ட விடத்தி லொவ்வொரு இரவும் மறைவான மனுடர்கள் வருகிறூர்கள். குறுஆனை ஓதுகிறூர்கள் நாயனுடைய திக்றுச் செய்கிறூர்கள். ஆனூ லொருவருக்கும் வெளிப் படுகிறதில்லை நானவர்களைத் தெரிசித்தேன்.

கஉ-வது. பஸ்ருப் பட்டணத்தின் காட்சி.

நான் பஸ்ருத் தேசத்திற்குப் போனேன் அந்தப் பட்டணத்தைச்சேர்ந்த ஒரு காட்டி லொருதலத்தில் பேரீத்தம் மரங்களிருப்பதையும், காஜா ஹசன் பஸ்ரீ றலியல்லாகு அன்கு - சைனுல் ஆபீதீன் றலியல்லாகு அன்கு - சஅத் றலியல்லாகு அன்கு - சாத் றலியல்லாகு அன்கு - தல்ஹா றலியல்லாகு அன்கு - ஸுபைறு றலியல்லாகு அன்கு இவர்களந்த இடத்தில் நித்திரை செய்கிறதையுங் கண்டேன்.

கங-வது பகுதாது ஷரீபுடைய காட்சி.

பகுதாதுக்குப் போனேன் அந்தப் பட்டணத்தில் ஹலரத்து முஹ்யித்தீன் அப்துல்க் காதர்க் கீலானீ றலியல்லாகு அன்கு அவர்கள் நித்திரை செய்கிறூர்கள் அவர்கள் ஒவ்வொரு நாளிலும் கடையிலிருந்து அடிமைகளை வாங்கி நாயனுக்காக விடுதலை செய்வார்கள். ஒருநாள் மிம்பறின்பேரி லேறி பிரசங்கஞ் செய்ய ஆரம்

பித்தார்கள் பிரசங்கத்நின் மத்தியில் மிம்பறுக்குச் சமீபத்தி லுட்கார்ந் திருந்த ஒரு முரீதுக்கு மலபாதைக்குப் போக அவசரம் நேரிட்டது அப்போ தவர் ஹலறத்தவர்களைப் பார்த்து எனது நாயகமே நான் மலபாதைக்குப் போனல் பிரசங்கங் கேட்க முடியாது? போகாம லிருக்கவு மென்னல் முடியவில்லை யெனக்கிந்த விஷயமாகுநீதி செலுத்துங்க ளென்று கேட்டார் அப்போது ஷெய்கு முஹ்யித்தீ ஞண்டவர்கள் தங்களுடைய போர்வையை அந்த மனுடன் மீது போட்டார்கள் அப்போ தந்த முரீதானவர் பார்க்கிருர் அவ்விடத்தி லொரு வனந்தரமும், ஒரு சிற்ருறு மிருக்கிறது, இன்னுந் தோட்டங்களும், விநோதங்களும், மைதானமு மிருக்கிறது அவ்விடத்தி லவர் மலபாதைக் கிருந்து துப்புரவு செய்து விட்டு உலூவும் செய்துக் கொண்டு தோட்டத்தில் நின்று எவ்விடம் போக வேண்டு மென்று தயங்கிக் கொண்டிருந்தார் அச்சமயத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்க்காதிறு றலியல்லாகு அன்கு அவர்கள் தங்களுடைய போர்வையை அவர்மீ திருந் தெடுத்துக் கொண்டார்கள். அப்போ தந்த முரீதானவர் முன்போலவே மிம்பறின் சமீபத்தி லுட்கார்ந் திருப்பதைக் கண்டார். மேற்படி ஆண்டவர்கள் உலகத்தில் நாற்பது வருடம் வரையிலும் துன்யாவில் வந்ததுபோல் துன்யாவை விட்டும் யாத்திரை செய்தார்கள் துன்யாவி னுடைய யாதொரு வின்பமு மடையவே யில்லை அவர்கள் மிகுந்த ஞானமும் பக்தியும் கருமத்து முடையவர்களா யிருந்தார்கள். அவர்களையும் பக்கீருகிய நான் வியாறத்துச் செய்தேன்.

௧௪-வது, காஸ்றூனிப் பட்டணத்தின் காட்சி.

நான் காஸ்றூனிப்பட்டணத்திற்குப்போனேன் அந்தப்பட்டணத்தில் ஷெய்கு இஸ்ஹாக் கென்பவர்கள் ஒருதரம் விட்ட எண்ணெயும், ஒரே திரியுங் கொண்டு இரவும், பகலுமாக நூற்றி நாற்பது வருடம் தீபமெரித்தார்கள் காற்ருலும், மற்று மெந்தக் காரணத்தாலு மந்தத் தீபமணையவேயில்லை அப்படி யிருக்கையில் ஷீருஸ்த் தேசத்திராஜன் புத்திசாலியா யிருந்தான் அவன் எரிந்துக் கொண்டிருந்த அந்தத் தீபத்தை ஊதியடித்தணைத்து விட்டுப் போய்விட்டான் அவ்விதஞ் செய்து விட்டவன் வாசல்க் கதவுக்கடுத்துப்போய்ச் சேரமுன் மேற்படி தீபம் தன்படியே பிடித்தெரிந்து பிரகாசித்

கிட்டது அப்போதிராஜன் மிகவு மாச்சரிய மடைந்து நான் தப்பி தஞ் செய்து விட்டேனென்று சொல்லிக் கைசேதப் பட்டான். அவ்விதம் நடந்து நாள் ஏழுக்குள்ளாக அந்த இராசன் வேறோர் இராசனால் பிடிபட்டு அவனுடைய கண்களில் பாஷாணக் கம்பிகளைப் போடப்பட்டுக் குருடனாகி விட்டான் பக்கீறாகிய நான் ஸியாறத்துச் செய்தேன்.

௧௫-வது, பைத்துல் முக்கத்திஸின் காட்சி.

பைத்துல் முக்கத்திஸில் யூசுபு அலைகிஸ்ஸலா மவர்களை யஃகூபு அலைகிஸ்ஸலா மவர்களுடைய கால் மாட்டில் நல்லடக்கஞ்செய்யப்பட்டிருந்தது கடைசியாகப் பின் சொல்லிய நபியானவர்கள் வெளிப்பட்டு. யூசுபானவர் துன்யாவி னுடைய இராஜராக யிருந்தார், ஆகையால் இராசருக்கும், நபிமார்களுக்கு மென்ன சம்பந்தமிருக்கிற தென்று சொன்னார்கள். அப்பால் மறுநாள் போயிருந்த ஜனங்கள் யூசுபுநபியைக் கபறுக்கு வெளியே கண்டார்கள். அப்போது அவ்விடத்தின் பணிவிடைக் காரர்களும் மற்றும் பெரியோர்களுமாகச் சேர்ந்து பைத்துல் முக்கத்திஸி லிருந்து வெளியில் கொண்டு வந்து யூசுபு நபியை நல்லடக்கஞ் செய்தார்கள். பக்கீறாகிய நான் ஸியாறத்தும் தரிசனமுஞ் செய்தேன்.

௧௬-வது, மிஸ்றுப் பட்டணத்தின் காட்சி.

மிஸ்றுப் பட்டணத்தில் ஐந்து வக்த்துக்கும் சொல்லப்பட்ட பாங்குச் சப்தம் பதினாறுகாதம் வரையிலும் போய்க்கொண் டிருக்கும் அப்பேர்ப்பட்ட இஸ்லாம் எவ்விடத்திலு மில்லை அவ்விடத்தி லுள்ள பெரியோர்களை நான் ஸியாறத்தும், முலாக்கத்துஞ் செய்தேன் பிறகு குஸ்றூவின் மாளிகையையும், ஷீரீனுடைய சிம்மாசனத்தையும் பார்க்கப் போனேன். குஸ்றூ வென்பவன் இராசன், ஷீரீனென்பவள் அவனுடைய வெள்ளாட்டி, ஹாஜியென்ற பெயரும், பஹ்ஹா தென்ற பட்டப் பெயருங்கொண்ட நெட்டையான ஒருமனுடன் அந்த இராசனிடத்தில் போனான். அப்போது தற்செயலாக ஷீரீனென்ற வெள்ளாட்டியைப் பஹ்ஹா தென்ற மனுடன் பார்க்கும்படி நேரிட்டவளைக் கண்டவுடனே மோகித்து ஆஷிக்காகிவிட்

டான். அப்போ திராசனுக் கிந்தச் சங்கதி தெரிந்து பற்ஹாதை க் கூப்பிட்டு ஓய் பற்ஹாதே நானுனக் கொருவேலை சொல்லுகிறே ன் அதை நீ செய்வாயானால் ஷிரீ னென்பவளை யுனக்குக் கொடுப் பேனென்று சொன்னான் அப்போது பற்ஹா தென்பவன் மேற்படி யுத்தரவுக் கிருதயத் துடனே கீழ்பணிந்து மேற்படி காரியத்தைச் செய்துவிடுகிறேன் உத்தர வாகட்டுமென்று சொன்னான். அதற்கி ராசன் ஓய் பற்ஹாதே நீ யிந்த மலையைவெட்டி ஒரு ஆற்றைத்தி ருப்பித் தண்ணீ ரோடும்படி செய்யென்று சொன்னான். உடனே பற்ஹா தென்பவன் நல்ல தப்படியே செய்கிறேனென் றொப்புக் கொண்டு மலைமீதேறி முதலாவது ஷிரீனுடைய சொரூபத்தை ஒரு கல்லில் வரைந்து மலையைத் துளைக்க ஆரம்பித்தான் அப்பால் சில காலத்திற்குள் துளைத்து விட்டான். இந்த சமாச்சாரம் குஸ்ரூவு க்குத் தெரிந்து மிகவும் வியாகுல மடைந்தான். ஏனென்றால் பற் ஹா தென்பவன் என்னிடம் வந்து ஷிரீனென்பவளைக் கேட்பா னேயென்று மனம் வருத்தப்பட்டு அந்த மனவருத்தமான சஞ்சல ங்களை நீக்கும்பொருட்டு வேட்டைக்குப் போனான் அவ்விதம் குஸ் ரூவென்பவன் வேட்டைக்குப் போனதை ஷிரீனென்பவள் கண்டு தானொரு வேலைக்காரனைத் தனக் குதவியாய்க் கூட்டிக்கொண்டு ப ற்ஹாதிடத்திற்போய் ஓய் பற்ஹாதே நானுன்னிடம் வந்திருக்கி றேன் என்னுடைய ஆசையைத் தீர்த்துவிடு என்னுடைய இருதய த்தி னாட்டத்தை நிறைவேற்று, இப்பேர்ப்பட்ட சமய மெனக்குக் கிடையாது என்று சொன்னாள். அதற்கு பற்ஹாதென்பவன் ஓ ஷி ரீனே நானுன்னை நிக்காஹு செய்கிறவனாயினு முன்மேல் நானெ ன்னுடைய கையை நீட்டமாட்டேன் நீ யெனக்கு ஹலாலில்லை யெ ன்று சொன்னான். அப்போது ஷிரீனென்பவள் இப்பேர்ப்பட்டவா ர்த்தையைக்கேட் டவநம்பிக்கை யுண்டாகி மனம் வருத்தப்பட்டுக் கு திரையிலேறி குஸ்ரூவி னரமனைக்குப்போவதற்காகக் குதிரை யை நடத்தினாள். அப்போ தந்தக் குதிரையானது இடைவழியில் தற்செயலாய் நொண்டியாகி நடக்கவொண்ணாதாகிவிட்டது அதை ப் பற்ஹாதென்பவன் கண்டு ஷிரீனுடைய குதிரையைப் பிடித்துக் குஸ்ரூவி னரமனையிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு திரும்பிவ ந்து விட்டான். அதின் பிறகு குஸ்ரூ வென்பவனும் வேட்டையி லிருந்து வந்து அதிகத் துக்கத்தையும், அதிக வியாகுலத்தையு ம டைந்து, பற்ஹாதென்பவன், ஷிரீனென்பவளைக் கொண்டுபோய்வி டுவானே யென்று கிலேசமுற்றுக் கொண்டிருந்தான்.

அப்போது வயது சென்ற ஒரு கிழவியானவள் கையை யுயர்த்தி பிரார்த்தனை செய்துக் கொண்டு இராஜனுடைய சன்னிதானத்தில் வந்து இராஜாவே நீர் நீடித்த ஆயுளோடிருப்பீராக ஊரெல்லாந் தங்களுடைய துக்கத்தால் வியாகுல மடைந்து கொண்டிருக்கிறது ஆகையா லென்னிடத்தில் ஹல்வாவும், ரொட்டியுங் கொடுங்கள் நான் பற்ஹாதிடத்திற் போய் நீ மோகப்பட்டிருந்த ஷீரீனென்பவள் காலஞ்சென்று போனளென்று சொல்லுகிறேன் அப்போதவனுடைய வுண்மையும், பொய்யுந் தெரியவரு மென்று சொன்னாள். அந்தக் கிழவியினிடத்தி லிருந் தந்தப் பேச்சைக் கேட்டு இராஜன் சந்தோஷமடைந்து அவள் கேட்ட பிரகாரம் ஹல்வாவும், ரொட்டியு மவளிடங் கொடுக்கும்படிக் குத்தரவு செய்தான் அந்தப்படி கொடுக்கப்பட்டு அந்தக் கிழவியானவள் மேற்படி ஹல்வாவையும், ரொட்டியையும் ஒருருமாலில் சுத்திக்கொண்டு மலையிலிருக்கிற பற்ஹாதிடத்திற்போய் ஓய் ஷீரீன்பேரில் மோகப்பட்ட பற்ஹாதே யென்ன வுட்கார்ந்திருக்கிறாய் நீ மோகப்பட்ட ஷீரீன் இந்த துன்யாவை விட்டும் யாத்திரையாகி விட்டாள். இந்த ரொட்டியும், ஹல்வாவு மவளுக்காகப் பாத்திஹா வோதினதா யிருக்கிறது நீ தின்னென்று சொன்னாள். அப்போது பற்ஹா தென்பவன் ஷீரீனென்பவ ளிறந்தா ளென்று தன்னுடைய காதில் கேட்டவுடனே ஒரு பெருமூச்சுவிட்டுக் கையிலிருந்த வுளியைத் தூர வீசிவிட்டு ஒரு கல்லையெடுத்துத் தன்னுடைய ஈறற் குலையி லடித்துக்கொண்டு செத்துப் போனான் அந்தக் கிழவி யந்த வுண்மையுள்ள ஆஷிக்கைக் கொன்றுவிட்டுத் திரும்பி யிராசனிடத்தில் வந்து பற்ஹாதினுடைய சங்கதி பூராவையுந் தெரியப்படுத்தினாள். அப்போது இராசன் இறந்த பிணத்தைக் கொண்டு வந்து ஷீரீனுடைய அரமனையிலன்றிரவு முழுதும் வைக்கும்படியாக வுத்தரவு செய்தான். அவ்விதம் பிணத்தைக் கொண்டுவந்து வைக்கப்பட்டுது அப்போது ஷீரீனென்பவள் பற்ஹா திறந்துபோனா னென்றும், அவனுடைய பிணத்தைத் தன்னுடைய அரமனையில் வைத்திருக்கிற தென்றுங் கேள்விப் பட்டாள். பின்பு குஸ்றூவின் ஊழியத்தி லிருந்து சாவகாசம் பெற்று பற்ஹாதினுடைய பிணத்தி னருகில்வந்து தன்னுடைய முகத்தைப் பற்ஹாதினுடைய முகத்தில்வைத் தழுது வுடனே யவளும் இறந்துபோனாள். இந்தச் சமாச்சாரத்தை யிராசன் கேட்டுச் சிலநாளில் அவனுடைய இராஜாங்கத்தையும், சிம்மாதனத்தையும் விட்டு விட்டு அவனு மிறந்துபோனான். பற்ஹாதென்பவன் மலையி

விருந் தெறிந்த வுளியானது மலைக்கு மத்தியில் விழுந்து அதுவிழுந்தவுடனே யதில் நின்று மொரு மாதுளைமர முண்டாகி யதிலிருந் திரண்டு பழம் வந்தது அதி லொரு கனி மாதுளம் பழம்போலிருந்தது, மற்றொருபழ மிரத்தம் நிறைந்ததா யிருந்தது பக்கீருகிய நானிதைக் கண்ணால் கண்டு தெரிசித்தேன்.

கஎ-வது, நகுஸ்வான் பட்டணத்தின் காட்சி.

நகுஸ்வான் பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் ஷெய்கு முஹம்மது சிந்தக்கி யவர்கள் வசித்துக்கொண் டிருக்கிறார்கள் அவர்கள் தங்களுடைய முகத்தைப் பெரிய ஒரு தொப்பியால் மறைத்துக் கொண்டு நானூறுவருஷமாக ஒரேயிருப்பாக இருந்து ஞானக்கடலில் மூழ்கிக்கொண் டிருந்தார்கள். ஆகார மருந்தவு மில்லை, தண்ணீர்முதல் குடிக்கவுமில்லை, ஒருவரிடத்திலும் பேசுகிறதுமில்லை யிவ்விதமாக யிருந்தார்கள். அவர்களிவ்வித மிருப்பிலிருந்த காலமுதல் அந்நகரில் நாலிராஜாக்க ளரசாண் டிருக்கிறார்கள். அவர்களில் இரண்டு ராஜாக்கள் இரண்டு தடவல் மேற்படி ஷெய்கைக் கபறுக்குள் வைத்து நல்லடக்கஞ் செய்திருக்கிறார்கள். பின்னுமந்த ஷெய்கானவர்கள் தாங்கள் முன்னிருந்த அதே யிடத்தில் அதே யிருப்பாகத்தா னிருக்கக் கண்டார்கள். நான் போகிறபோதும் அவர்களை அந்த விடத்திலேயே அதேயிருப்பிற்று னிருக்கக் கண்டேன்.

கஅ - வது, மன்பயே பாதியாப் பட்டணத்தின் காட்சி.

மன்பயே பாதியாப் பட்டணத்திற்குப் போனேன் அந்நகரில் சுல்த்தான் செய்யிது அஹ்மதுக் கபீறவர்கள் நித்திரை செய்கிறார்கள். நபிநாயகம் திருவுள வுத்தரவு செய்திருக்கிறார்கள். அதாவது என்னுடைய வும்மத்து சுல்த்தான் செய்யிது அஹ்மதுக் கபீருகிறவர் நம்முடைய முரீதா யிருப்பாரென்று இன்ன மவர்களுடைய அவுலாது சிம்மாசனத்தி லுட்கார்ந் திருக்கிறார்கள். அவர்களுடைய வூழியத்திற்காகவும், ஸியாறத்துக்காகவு மிராஜாக்கள் வருகிறார்கள் ஆனாலவர்கள் தங்களிடத்தைவிட் டெழுந்திருக்கிறதில்

லை இராஜாக்க ளெல்லாரும் தலையைப் பூமியில் வைத்துக்கொண்டு தீனுக்கும், துன்யாவுக்கு முதவி கேட்கிறார்கள். அவர்களுடைய சன்னிதானததில் பனிரண்டாயிரம் ஆண், பெண்கள் வந்து திக்று ச் செய்கிறார்கள். எல்லார்களு மொன்றாக ஓரிடத்திற்கூடிக் காலால் நெருப்பை மிதிக்கிறார்கள். ஒருதடவை ஹாறான் றஷீதுப் பாத் ஷாவானவர்கள் தங்களை யாராவ தறிகிறார்களா வென்று பார்க்கவ ந்தார்கள். அப்போது சுல்த்தான் செய்யிது அஹ்மதுக்கபீறு அவு லியா வானவர்கள் அந்தப் பாத்ஷாவுடைய கையைப் பிடித்துக் கொண்டு திக்றுச்செய்கிற மஜ்லிசுக்குக் கொண்டுபோய் மேற்படி திக்று முடிந்ததின் பிறகு நீ நம்மைச் சோதிப்பதற்காக வந்திருக்கி றாயென்று சொன்னார்கள். அப்பால் ஹாறான் றஷீதுப் பாத்ஷா வானவர்கள் பகுதாதுக்குப்போய் ஆலீம்களையும், தீனிற் பெரியோ ர்களையும் வரவழைத்து ஓரிடத்திற் புருஷர்களும் பெண்களு மொ ன்றாய்க்கூடி திக்றுச் செய்கிறது ஷரீ அத்தில் ஜாயிஸாகுமாவென் று கேட்டார்கள். இந்தச் சமாச்சாரம் சுல்த்தான் செய்யிது அஹ் மதுக் கபீறுண்டவர்களுக்குத் தெரிந்து ஒரு பாத்திரத்தில் தீயை யும், பஞ்சையு மொன்றாகப் போட்டு ஒரு முரீதுவசங் கொடுத்து மேற்படி பாத்ஷாவுக் கனுப்பினார்கள். அதை ஹாறான் றஷீதுபா த்ஷா வானவர்கள் வாங்கி அந்தப் பாத்திரத்துள் நெருப்பையும், பஞ்சையு மொன்றாய் வைக்கப்பட் டிருப்பதையும், அந்தப் பஞ்சு வைத்த பிரகாரமே நெருப்புறாது சுத்தமா யிருப்பதையும் பார்த் தாச்சரிய மடைந்து கொண்டிருந்தார். அப்போ தவ்விடம்போயி ருந்த முரீதானவர் பாத்ஷாவைநோக்கி ஓய் பாத்ஷாவே அந்தவிட த்தி லாண் பெண் ஒன்றாய்க்கூடி ஹக்த்த ஆலாவுடைய திக்றைச் செய்கிறார்கள். ஆகையா லொருமனுடர்களுக்காவது ஹக்த்தஆலா வைத் தவிர வேறே நாட்டமுண்டாகிற தில்லை யென்று சொன்னார் பிற்பாடு பாத்ஷா வானவர்கள் பகுதாதி லிருந்து கால்நடையாகப் புறப்பட்டு மன்பயே பாதியாவென்னும் பட்டணத்திற்குவந்து சுல் தான் செய்யிது அஹ்மதுக் கபீறு ஒலியவர்களிடத்தில் முரீதானார் கள். இன்னு மெல்லாத்தேசங்களிலும் சுல்த்தான் செய்யிது அஹ் மதுக் கபீறு ஒலியுடைய முரீதுக ளிருக்கிறார்கள் அவர்கள் வான த்தை நோக்கிப் பார்த்தால் அறுஷு வரையிலும் பார்ப்பார்கள். அவர்கள் பூமியை நோக்கிப் பார்த்தால் தஹ்துஸ்ஸறாவாகிய பூமி யின் ஏழாந்தட்டு வரையிலும் பார்ப்பார்கள். பக்கீறாகிய நானவர் களை ஸியாறத்துச் செய்தேன்.

கக-வது, ஷெய்கு ஷிஹாபுத்தீன் சஹ்றுவற்தியவர்களின்காட்சி.

பகுதாதுப்பட்டணத்தில் ஷெய்குஷிஹாபுத்தீன் சஹ்றுவற்தீறலியல்லாஹு அன்ஹு அவர்கள் நித்திரைசெய்கிறார்கள் அவர்கள் எழுநூறுமுரீதுகளை ஹக்த்த ஆலாவுடைய தறுக்காவுக்கு வாவிலரக்கினார்கள் நானவர்களை வியாபாறத்துச்செய்தேன்.

உ0-வது, ஷெய்குஜலாலுத்தீன் தபரேஸ் அவர்கள் காட்சி.

ஷெய்கு ஷிஹாபுத்தீன் சஹ்றுவற்தீ யவர்களுடையகாலத்தில் ஷெய்கு ஜலாலுத்தீன் தபரேஸெனபவர்கள் தபரேஸ்ப்பட்டணத்திற் கிராஜராயிருந்தார்கள், அவ்விராஜாங்கத்தையும், தங்களிராச்சியத்தையும் தங்களுடைய மகன்வசம் ஒப்பிவித்துவிட்டு எனக்கிராச்சியமும், இராஜாங்கமும் வேண்டியதில்லையென்று சொல்லிவிட்டு மிகுந்தமுதல்களையு மெடுத்துக்கொண்டு ஷெய்கு ஷிஹாபுத்தீன் சஹ்றுவற்தியவர்களிடம்வந்துசேர்ந்தார்க ளந்த முதலை ஷெய்குஷிஹாபுத்தீன் சஹ்றுவற்தியவர்க ளொப்புக்கொள்ளவில்லை. அப்பால் ஷெய்கு ஜலாலுத்தீனைப்பார்த்து நீ ரிந்தப்பணங்களையெல்லாம் ஹக்த்தஆலாவுடைய வழியில் சக்காத்துக்கொடுத்துவிட்டுப் பறக்கத்துப்பொருந்திய பழைய ஜுப்பாவை யுடுத்திக்கொள்ளுமென்று சொன்னார்கள் அப்போதவர்க ளுத்தரவுப்பிரகாரம் அந்தப் பணங்களை ஸக்காத்துக்கொடுத்துவிட்டுப் பழைய ஜுப்பாவை யுடுத்திக்கொண்டு ஷெய்கு ஜலாலுத்தினென்பவர்கள். ஷெய்கு ஷிஹாபுத்தின் சஹ்றுவற்தியவர்களுடைய வூழியத்தில் வந்தார் அப்போதுஷெய்கு ஜலாலுத்தீனைநோக்கி ஷெய்கு சஹ்றுவற் தீயவர்கள் இன்னும் உம்மிடத்தி லிராஜாங்கவாசனை இருக்கிறது ஆகையால் நீர்நாலு வருஷம்வரையிலும் (பைத்துல்கலாவில்) அதாவது பயகானாவில் மண் கட்டியும், தண்ணீருந் தயாறுசெய்து தர்வேஷிகளுக்கு இஸ்த்தின்ஜாவும், உலூவுஞ் செய்வதற்காகக் கொடும் அப்போது நீரிராஜராயிருந் தரசாட்சிசெய்த வாசனையான தும்முடைய திரேகத்தைவிட்டும் போய்விடுமென் றுத்திரவுசெய்தார்கள் உடனே அதுமுதல் நாலுவருஷம்வரையிலும் ஷெய்கு அவர்களுடைய வுத்திர

வுப்பிரகாரம் ஜாக்கிரதையாய் நடந்தார்கள் அதின்பின் உறுதியுள்ளவர்களானார்கள் இன்னமவர்கள் வாஸிலாகவும், ஞானியாகவுமாய்விட்டார்கள் இந்தப்பக்கீருகிய நானவர்களை ஸியாறத்துச் செய்தேன்.

உக-வது தம்மியாத்பட்டணத்தின்காட்சி.

தம்மியாத் பட்டணத்திற்குப்போனேன் அவ்விடத்தில் ஷெய்குஜலால் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுநூற்றைம்பது முரீதுகளுக்குக் கல்வி கற்பித்துக்கொடுத்தார்கள் அவர்களொவ்வொருவர்களும் தக்வாவுடையவர்களாகவும், பத்வாக்கள்கொடுக்குந் திறமையுள்ளவர்களாகவுமாகிவிட்டார்கள். மேற்படி ஷெய்கவர்கள் இரவுகளில் இடிந்துகிடக்கும் பழையக்கபறுகளிற்போய்ப் படுத்துத் தங்களைப் பிணமாக்கிக்கொள்வார்கள் அவர்கள் முரீதுகளடங்கலும் தம்மியாத்பட்டணத்திலேயே நித்திரைசெய்கிறார்கள் அவர்களொவ்வொருவரையும் நான் ஸியாறத்துச்செய்தேன்.

உஉ-வது, காபுமலையின் காட்சி.

றாம்தேசத்தரசராகிய இஸ்க்கந்தரென்னும் துல்க்கர்னைன் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் எழுநூறுகாத துலைதூரம் (உலோகங்களால்) அதாவது செம்பு, இரும்பு, பித்தளை முதலிய தாதுவருக்கங்களால் மதில்க்கட்டியிருக்கிறார்கள். அவ்விதம் அவர்களந்தச் சுவர்கட்டாதிருப்பார்களேயானால் யஃஜூஜு, மஃஜூஜுக் கூட்டக் காரர்கள்வந்து விழுந்த நீதங்கள்செய்து உலகத்தை யழித்து விடுவார்கள். அப்படிச் சுவர்கட்டியிருந்தும் அந்தச் சுவரிடத்தில் வந்து தினந்தோறு மந்தக் கூட்டக்காரர்கள் தங்களுடைய நாவினால் நக்கி, நக்கி அந்தச் சுவரைக் கரைக்கிறார்கள் பொழுது அஸ்தமிக்கிற சமயத்தி லந்தச் சுவரானது ஒரு வஸ்திரத்தைப் போல் மெல்லியதாகிவிடுகிறது அப்போ தவர்கள் நாளைவந் துடைத்துவிடுவோமென்றும், துன்யாவைத் தங்களுடைய புயங்களின் வல்லமையால் பிடித்துக் கொள்வோ மென்றுஞ் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் நாயனுடைய கிருபையால் அவ்விரவு விடியுமுன்னே மேற்படி சுவர் முன்போல் சாரியாகிவிடுகிறது இவ்விதமாகவே நித்தியமும் அவர்கள் நக்குவது கொண்டு மெல்லியதாகிறதும், அன்றி

ன்றிரவுகளி லதுமுன்போற் கெட்டியாக ஆகிறதுமாக மாறி மாறி நடந்துக்கொண்டே யிருக்கிறது.

இனிக் காபுமலையி லிரண்டு சிம்மாசன மிருக்கிறது அதிலொன்று ஆஸ்மான் பரீக் குடையது, மற்றொன்று குற்ஷீத் பரீக்குடையது. இவர்க ளிருவர்களும் பரீகளுக் கரசராயிருக்கும். அவ்விருவர்களில் ஆஸ்மான் பரீயின்பேரில் அப்துல் முத்தலிபுடைய மகனார் அமீற் ஹம்ஸா வென்பவர்கள் ஆஷிக்கா யிருந்தார்கள். அதற்காகப் பனிரண்டு வருஷம் அந்த மலையின்பேரில் பகலெல்லாம் வேட்டையாடிக் கொண்டும், இராத்திரிக ளெல்லாம் ஆஸ்மான் பரீயிடத்தில் தங்கிக்கொண்டு மிருந்தார்கள் அப்படி யிருக்கையி லொருநா ளந்தமலையின்பேரில் ஒரு பெரிய மலைப்பாம்பை யிரண்டு துண்டாக வெட்டி மேற்படி காபுமலையில் கொண்டு வந்தார்கள். இது இவ்விதம் நிற்க,

நானொரு சமமான நிலத்தைக் கண்டேன் அதில் மதியன் என்றபட்டணத்தையும் பார்த்தேன் அந்தப் பட்டணத்தில் நோஷேற்வானென்ற இராஜ னொரு அரமனையைக் கட்டினான் அதற்குத் தாக்குகிஸ்ரா வென்று பெயருண்டா யிருக்கிறது அந்த அரமனை கட்டித் தயாரானபோது அவ்வரசன் சோசியர்களிடத்தில் நபிநாயகம் துன்யாவில் வந்து விட்டார்களா இல்லையா வென்று கேட்டான். அதற்குச் சோசியர்கள் உன்னுடைய இந்த அரமனை யுடைந்து போன அன்றைக்கு நபிநாயகம் பிறந்து விட்டார்களென் றறிந்துக் கொள்ளலா மென்று சொன்னார்கள். அப்பால் தன் னிராஜாங்கத்தை நடத்திக்கொண் டிருந்தான். அவ்விதம் நோஷேற்வான் கச்சேரிசெய்து சந்தோஷமா யுட்கார்ந்திருக்கும்போது பனிரண்டு விரிப்புக ளவ்வரசனுக்கு முன் விரிக்கப்படும் அவ்விதமாய் வாழ்ந்திருக்கையில் அவ்வரசனுடைய அரமனைக் கருகி லொரு கிழவி யிருந்தாள். அவளுக்கொரு பசுமா டுண்டாயிருந்தது அவள் இந்த நோஷேற்வான் சிம்மாசனத்தி லுட்கார்ந் திருக்கும்போது பசுவை யவிழ்த்துவிட்டு விடுவாள். அந்தப் பசுமாடானதுபோய் மேற்கூறிய விரிப்புகளின்பேரில் சாணிபோடுகிறதும், மூத்திரம் பெய்கிறதுமான அசங்கியங்களைச் செய்துவிடும் அதனா லவ்வரசன் மனவருத்தப்பட்டு அந்தக் கிழவியை யழைத்து ஓய் பெண்பிள்ளையே நானுனக்கொரு பெரியவீடு தயாறு செய்து தருகிறேன் இந்த வீட்டை நீ விட்டு விடென்று சொன்னான். அதற் கவள் ஒப்புக்கொள்ளவில்லை.

அவ்வரசன் மிகவும் நீதிமானு யிருந்ததால் அதைப் பொறுத்துக் கொண்டிருந்தான். நோஷேற்வா னுடையநீதி யிப்பேர்ப்பட்டதா யிருந்தது. நான் தாக்கு கிஸ்ருவையும், காபுமலையையும், மேற்கூறிய இரண்டு சிம்மாசனத்தையும் பார்வையிட்டேன்.

உங-வது, நௌரஸ்த்தான் பட்டணத்தின் காட்சி.

நௌரஸ்த்தான் பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் அதாபுக் என்னு மிராஜனிருந்தான் அவனுக் கெண்ணி லடங்காத தேசங்க ளுண்டாயிருந்தன. அவ்வரசன் யாத்திரைக் காரர்களுக் காகவும், ஏழைகளுக்காகவும் நானூறு சத்திரங்கள் கட்டியிருந் தான். அச்சத்திரங்களிற்போன ஒவ்வொரு யாத்திராக்காரர்களும் ஏழைகளும் நேர்த்தியான ஆகாரங்களும், வித்விதமான தீனிகளும் புசிப்பார்கள். இவ்வளவு தருமம் ஒரு அரசனும் செய்யவில்லை நான் கண்டேன்.

உச-வது, கஸ்னீன் பட்டணத்தின் காட்சி.

கஸ்னீன் பட்டணத்தில் சுல்த்தான் மஹ்மூது அரசர் நித்தி ரைசெய்கிறார். அவருடைய மந்திரியின்பெயர் ஹுஸைன்மைமந்தீ. இன்ன மவருடைய மக்பறுவில் பனிரண்டாயிரம் அவுலியாக்கள் நித்திரை செய்கிறார்கள். அவர்களுடைய மக்பறுவின் பக்கத்தில் அஹ்மது என்னும் பெயர்கொண்ட பனிரண்டாயிரம் அவுலியாக் கள் நித்திரை செய்கிறார்கள் இந்தப் பக்கீறுகிய நான் அவர்கள் ஒவ்வொருவரையுஞ் சந்தித்தேன்.

உரு-வது, றூம்பட்டணத்தின் காட்சி.

றூமிராச்சியத்துக்குப் போனேன் அவ்விடத்தில் மவுலானு ஜலாலுத்தீன் றூமீ யிருந்தார்கள். அவர்களுக்குப் பனிரண்டாயிரம் முரீதுக ளிருந்தார்கள். அவர்களுடைய சத்திரத்தில் நாள் ஒன்று க்கு நாற்பது தங்கக்காசு செலவாகிக்கொண் டிருந்தது மேற்படி மவுலானு அவர்கள் சுல்த்தான் அஹ்மதுக் கபீறவர்களுடைய முரீ தாயிருந்தார்கள் அவர்களிடத்தில் ஒரு செம்புப் பாத்திரமாகிய

பெரிய டேக்சாயிருந்தது அதில் ஐம்பது கிடாய்களின் மாமிசங்கள் சமயலாகும்படியான பெரிய பாத்திரமா யிருந்தது மேற்படி ஜலாலுத்தீன் ஷெய்கானவர்கள் அந்தப் பாத்திரத்தின் நிறம்ப யிறைச்சிகளைச் சமயல் செய்தும், நாள் ஒன்றுக்கு நானூறுமணங்கு கோதுமை மாவுகளைப் பலவிதப் பதார்த்தங்களாய்ச் செய்தும் ஏழைகளுக்கும், மிஸ்கீன்களுக்கும் நாயனுக்காகக் கொடுப்பார்கள் நான் ஸியாறத்துச் செய்தேன்.

உகூ-வது, ஹமதான் பட்டணத்தின் காட்சி.

நான் ஹமதான பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் ஐனுல்குலாத் ஹமதானீயவர்கள் நித்திரை செய்கிறூர்கள் அவர்களுக்கு ஹக்த்தஆலா பதினாறு வயதுமுதல் மிகுதியான கல்விகளைக் கொடுத்திருந்தான் அவர்க ளெப்போதும் எழுநூறு அருத்தமுள்ள பாடத்தைக்கற்பித்தார்கள் ஒருமனுஷன் மஸ்அலாக்களின் ஒருக் கித்தாபை வைத்துவிட் டிறந்துபோனான் அக்கித்தாபுக் கருத்தப்படுத்த ஒருவராலும் முடிந்ததில்லை இச்சங்கதியை ஐனுல் குலாதென்பவர்கள் கேள்விப்பட்டு அந்தக் கித்தாபுக் கெழுநூறு மஃனாக்களைக்கொண் டருத்தப்படுத்தி அவைகளை யொன்று சேர்த்து அம் மனுடனுடையக் கபறுகிற்போய் ஓய் கித்தாபுடையவரே. யும்முடைய மஸ் அலாக்களைத் தீர்த்துக்கொள்ளுமென்று கூப்பிட்டார்கள் இந்தப் பேச்சைக் கேட்டவுடனே அந்த மையித்தானது தன்னுடைய கபறிலிருந்து வெளியேவந்து நானிறந்து ஐம்பதுவருடமாச்சுது வொருவரு மென்னுடைய மஸ் அலாக்களை அருத்தப்படுத்தவில்லை யென்று சொல்லிவிட்டுக் கபறுக்குள் மறைந்துவிட்டது மேற்படிக் கபறு முன்னிருந்ததுபோல் தானாகவே செவ்வையாகிவிட்டது ஐனுல்குலாத் என்பவர்கள் அந்த மஸ் அலாக்களை யெல்லாம் நன்றாய் அருத்தப் படுத்தினார்கள். அப்பா லவ்விடத்திலுள்ள மனுடர்க ளெல்லாம் அந்த மையித்தானது கபறிலிருந்து உயிர்பெற்று வெளியில்வந்து பேசினதையும், பிறகு முன்போல் கபறுக்குள் மறைந்து போனதையும் பார்த்துவிட்டு ஐனுல்க் குலாதுடைய மகிமையைப்பற்றி மிகவு மாச்சரியப்பட்டார்கள் நான் ஸியாறத்துச் செய்தேன்.

உஎ-வது, லப்னூன்மலையின் காட்சி.

நான் லப்னூன்மலைக்குப் போனேன் அங்கே ஷெய்கு புறுஹானுத்தீன் நித்திரை செய்கிறார்கள். அவர்கள் துன்யாவி லிருக்கும் போது ஹாஜிக ளவர்களிடத்திற்குப்போனால் நீ ஹாஜியாயிருந்தா லென்னுடைய தலைப்பக்கம் பாரென்று சொல்வார்கள். அந்தப்படி அந்த ஹாஜிகள் பார்த்தா லவர்களுடைய தலைக்குமேல் ஹஜ்ஜைக் காண்பார்கள் அவர்கள் நாற்பதுவருஷம் வரையிலும் தூங்கவேயில்லை எப்போது முஷாஹிதாவில்தா னிருப்பார்கள் அவர்களுடைய மக்பறாவுக்குப்போய் நான் ஸியாறத்துச் செய்தேன்.

—*—

உஅ-வது, ஸஅத் முதலியவர்களின் காட்சி.

நான் ஸஅத் றலியல்லாகு அன்கு, ஸஈத் றலியல்லாகு அன்கு தல்ஹா றலியல்லாகு அன்கு, ஸுபைறு றலியல்லாகு அன்கு முதலியவர்கள் நித்திரைசெய்கிற ஊருக்குப்போனேன் அவர்கள் நானூற்றி நாற்பத்திநாலுத்தாயிபாக்களாயிருக்கிறார்கள் அவர்களுடைய இரைத்தல்கள் நாலாவது வானம்வரையிலு மெட்டிக்கொண் டிருந்தது. அந்தப் பட்டணத்துக்காக இமாம் ஹசன் றலியல்லாகு அன்கு அவர்களும் இமாம் ஹுசைன் றலியல்லாகு அன்கு அவர்களும் அபீசுபியான் மகனாராகிய மஆவியாவிடத்தில் சண்டைசெய்திருக்கிறார்கள் நான் ஸியாறத்துச் செய்தேன் அவ்விடத்திலுள்ள பெரியோர்களையெல்லா முலாக்கத்துச் செய்தேன் நன்றாகப்பார்த்தேன்.

உகூ-வது; ஷாம்பட்டணத்தின் காட்சி.

ஷாம்பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தி லொரு கல்லானது தூணைப்போலாகக் கீழேபடாம லந்தரத்தில்நிற்கிறது மிஃறாஜிரவில் நபிநாயகம் உயரப்போ யிருந்தபோது தங்கள்பாதத்தை அந்தக் கல்லின்மேல் வைத்திருந்தார்கள். அந்தக்காலத்தி லந்தக் கல்லானது பைத்துல் முக்கத்திஸ் அகஸாப் பள்ளியின் பூமியில் கிடந்தது நபிநாயகத்தின்கா லந்தக் கல்லின்மேல் பட்டவுடனே அந்தக் கல்லானது அழத் துடங்கினது அப்போது நாயகம்வர்கள் அந்தக் கல்லைப்பார்த்து ஏன் அழுகிறாயென்று கேட்டார்கள். அதற்கந்தக்கல் நாயகமே நான் பாவியாயிருந்தேன் இப்போது தங்க

ளுடைய ஒருபாதத்தை யென்மீதுவைத்தது கொண்டு சொற்கத்துக்குத் தகுமானேன் ஆகையால் நாயகமே தங்களுடைய மற்றொருபாதத்தையும் என்மீது வைக்கவேணுமென்று மன்றாடி யழுகிறேனென்று சொல்லினது அப்போது நபிநாயகம் திருவுளமானார்கள் கல்லே நீ மனதுதிருப்தியாயிரு உனக்காக நாயனுடையசமுகத்தில் துஆச் செய்வேனென்று சொல்லிவிட்டுத் தங்களுடைய பறக்கத்துப் பொருந்திய கையாலெடுத்து ஆகாயத்தில் நில்லென்று நிறுத்தினார்கள். அந்தக் கல்லின்பெயர் ஆகாயத்தில் ஸகுறென்று சொல்லப்படுகிறது. நான் பார்வையிட்டேன் ஸியாறத்துச் செய்தேன்.

௩௰-வது, கிற்மான்பட்டணத்தின் காட்சி.

கிற்மான் பட்டணத்திற்குப்போனேன் அது பெரிய ஒரு பட்டணமாயிருக்கும் அந்தப் பட்டணத்தில் ஷாஹுஷுஜாகிற்மானீயென்பவர்கள் நாற்பதுவருஷம் நித்திரை செய்யவில்லை யிரவும்பகலு முழித்துக்கொண் டிருந்தார்கள். ஒரு பாத்திரத்தில் உப்பை வைத்துக்கொண்டு நித்திரை அதிகமாக வருதபோது அந்த வுப்புக்கிண்ணத்தி லொருகம்பியை முக்கிச் சுறுமாவைப் போடுவதுபோற் கண்ணிற் போட்டுக்கொள்வார்கள் அவர்களுடைய தொழிலாகிறது புஸ்தகங்களை யெழுதுகிறதும் அதில் கிடைக்கிற வரும்படியால் தங்களுடைய ஆகார முதலியவைகளுக்குச் செலவுசெய்துக் கொள்கிறதுமா யிருப்பார்கள் உலகத்தி லுள்ளவர்களுக்கு நீதி செலுத்துவார்கள். அவர்களுடைய சமீபத்தி லொருயிரும்புச் சங்கிலியைக் கட்டித் தொங்கவிட் டிருந்தது யாராவது ஒருவன் மனுச்செய்துக் கொள்ளவேணுமானல் அந்தச் சங்கிலியைப்பிடித் தசைத்து விடுவான் அப்போ தவ்வரசருக்குத் தெரிந்துவிடும் அவ்வரசர் அவனைக் கூப்பிட்டு விசாரணைசெய்து அவனுடைய சங்கதிதெரிந் தவனுக்கு நீதிசெலுத்துவார்கள். ஒருநாள் ஒரு குருவியானது வந்து அந்தச் சங்கிலியின்மேலுட்கார்ந்து பிரியாதுசெய்தது அப்போதந்தச் சங்கிலியசைந்தது அவ்வரசருக்குத்தெரிந்து வெளியேவந்து பார்க்கக் குருவியானது சங்கிலியின்மே லுட்கார்ந்து பிரியாது செய்கிறதைக்கண்டார்கள் அப்போ தவ்வரசர் குருவியைப் பார்த்து வுனக்கென்ன தேவையென்று கேட்டார்கள். அதற்கந்தக் குருவியானது தன்னுடைய பாஷையில் நானநியாயத்திற்குள் அகப்பட் டிருக்கிறேனென்று சொல்லினது உடனே அவ்வரசர் போர்ச் சேவகர்களைய

மைழத்து அந்தக் குருவியுடன் போகும்படி யுத்தரவு செய்தார்கள். அந்தப் பிரகாரம். குருவி முன்னும், போர்ச்சேவகர்கள் பின்னுமா கப்போனார்கள். அப்பா லந்தக் குருவியான திந்தப்போர்ச்சேவகர் களைத் தன்னுடைய கூட்டினிடமாய்க் கூட்டிக்கொண்டு போனது அந்தக் கூட்டின் வாசலில் ஒரு பெரியபாம்பு உட்கார்ந்து கிடக்கக கண்டு இந்தப் போர்ச்சேவகர்கள் அந்தப் பாம்பையடித்துக் கொ ன்று விட்டார்கள். அந்தக் குருவியும், அந்தக் குருவியின் குஞ்சுக ளும் ஆபத்தில் அகப்படாமல் தப்பிக்கொண்டதுகள். மேற்படி அரசராகிய ஷாஹ ஷுஜாஃகிர்மானீ றஹமத்துல்லாஹி யவர்க ளுக்கு இப்பேர்ப்பட்ட ஞானமும், கருமத்தும், நீதியு மிருந்தது அப்பால் மறுநா ளொருமனுடன் ஓ யிராஜாவே ஒருமனுடன் என் வீட்டில் நடுராத்திரியில் வந்து புகுந் தென்னுடைய பெண்சாதி யைக் கொண்டுபோய்விடுகிறான் அவ னின்னானென் றெனக்குத் தெ ரியவில்லை யென்று சொன்னான். அதற் கரசர் அந்த மனுடன் உன் னுடைய வீட்டில்வந்து புகுந்தவுடன் எனக்குத் தெரியப்படுத்தெ ன் றுத்தரவு செய்தார்கள். அதுமுதல் மூன்றிராத்திரி யரசர் நித் திரை செய்யவில்லை யந்தத் துஷ்டன் வந்தானா, வந்தானாவென்று கேட்டுக்கொண்டே யிருந்தார்கள். அப்பால் நாலாவதிரவில் நடுநே ரத்தில் வந்தான் அக்கணமே யந்தவாதிவந் தரசருக்குத தெரியப் படுத்தினான், உடனே அவ்வரசரானவர்கள் ஒருவருக்குந் தெரியா மல் வாளாயுதத்தைக் கையி லணிந்துக்கொண்டு அவனுடைய வீட் டினுட் புகுந்து அந்தத் துஷ்டனை வெட்டிக் கொன்றுவிட்டார்கள் பின்பு அம்மனுடனைப் பார்த்து அரசரவர்கள் ஓய் மனுடனே நான் மூன்றுநாளாக யாதொன்றும் தின்னவில்லை உன்னுடைய வீட்டில் ரொட்டியிருந்தால் எனக்குப் பசியாறுவதற்காகக் கொண்டுவாவெ ன்று கேட்டார்கள். உடனே அந்த மனுட னிரண்டு கோதுமை ரொட்டிகளைக் கொண்டுவந்து வைத்தான் அந்தரொட்டியை அர சரவர்கள் மிகவு முருசியாகத் தின்று பசியாறினார்கள். அப்பாலரச ரவர்கள் தங்கள் அரமனைக்கு வந்துவிட்டார்கள். இப்பேர்ப்பட்ட நீதியுடையவர்களா யிருந்தார்கள். அவர்கள் புஸ்தகங்களையெழுதி அந்த வரும்படியைக் கொண்டு ஆகார முதலியவைகளுக்குச் செல வுசெய்துக்கொண் டிருந்தார்கள். இன்னும் அனேக வூர்களையும், சொத்துகளையுந் தங்களுடைய சொந்த முதல்களிலிருந்து வாங்கி யேழைகளுக்காக ஆகாரஞ்செய்யத் தருமமாக விட்டிருக்கிறார்கள் அவ்விடத்தி லந்த அரசரால் கட்டப்பட்ட சத்திர மிருக்கிறது

அதில் சாதங்கள் சமைத்தவுடனே நகரா முழக்கினுர்கள் அதுகேட்டு உடனே ஏழைகள்வந்து ஆகாரங் கொண்டுபோகிறுர்கள் புசிக்கிறுர்கள் நான் கண்டேன் ஸியாறத்துச் செய்தேன்.

———:❋:———

௩க-வது, ஷீறுவ்ஸ பட்டணத்தின் காட்சி.

நான் ஷீறுஸ் பட்டணத்திற்குப் போனேன் அந்நகரின் கடைத்தெருவில் நானூறு அவுலியாக்கள் தராசுகளைக் கையில்வைத்து வியாபாரஞ் செய்துக்கொண் டிருந்தார்கள். வெள்ளியை யுரைத்து மாற்றுப்பார்க்கிறதில்லை. யாராவது கற்கம் வெள்ளியைக்கொடுத்தாலும் அவனுக்கும் வேண்டிய சரக்குகளைக் கொடுத்து விடுவார்கள். ஹக்த்த ஆலாவுடைய வுத்தரவாலும், அவர்களுடைய அற்புதத்தாலும் அந்தக் கற்கம் வெள்ளிகளெல்லாம் சுத்தக்கட்டியாக மாறிவிடுகிறதென்று அவர்களுடைய காரணங்கள் வெளியாயிட்டுது. அவர்களிடத்தில் இரண்டு பசுக்களுண்டாயிருந்தன அவர்களிடம் யாராவது ஏழைகள்,மிஸ்கீன்கள் பசியுடன்போனுல் தங்களுடைய வஜீபனத்தாலும், கொடையாலு மவர்களைப் பரிபூரண மாக்கிவிடுவார்கள். அவர்களை நான் ஸியாறத்துச் செய்தேன்.

———

௩உ-வது, சுலைமான் அலைஹிஸ்ஸலா முடைய அரமனையின் காட்சி.

———

நான்சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய அரண்மனைக்குப்போனேன் அந்த அரண்மனையானது சமுத்திரத்தில் மிகவுமுயரமாகக் கட்டப்பட்டிருக்கிறது அவர்களுடைய பறக்கத்துப்பொருந்திய சரீரத்தைக் கபறுக்குள்ளே வைக்கப் படவில்லை அவர்களுடைய அரண்மனையில் இரத்தினங்கள் பதித்த வொரு சிம்மாசனத்தின்மேல் நித்திரைசெய்கிறுர்கள் தேவுகளும் பரிகளும் கைகட்டிக் கொண் டூழியஞ் செய்யத் தயாருய் நிற்கிறுர்கள். அந்தஅரண்மனையானது தூரத்திலிருந்தே உயரமாய்த் தெரிகிறது•பக்கிருகியநான் ஸியாறத்துச் செய்தேன் அப்போது நாலு போர்ச் சேவகர்க ளிரண்டு காத வழிக்குத் தூரத்தி லிருந்து வேகமாயோடி யென்னிடத்தில்வந்து ஒய்-செய்யிதே? யுங்கள் விஷயத்தில் எங்களுக்கு சுலைமான்•அலைஹிஸ்ஸலாமவர்க ளுத்தரவு செய்திருக்கிறுர்கள். அந்தா

வது நானிந்த செய்யிதை யென்னுடைய குழந்தையாக வொப்புக் கொண்டேன் நானவரை பூமியில் கலீபாவாக்கினேன்? அவருக்கு விசறியால் வீசும்படிக் கென்னுடைய பரிகளை நியமித்திருக்கிறேன் ஆகையால் நீங்கள் போய்ப் பதினாலு காந்தான் மார்களுடையதொப்பிகளை யவருக்குக்கொண்டு கொடுங்களென் றுத்தரவு செய்தார்களென்று சொல்லிக் கொண்டுவந்து தந்தார்கள் நானவைகளைப் பெற்றுக் கொண்டு மேற்படி சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் நித்திரை செய்கிறதையும் வியாறத்துச் செய்தேன்.

௩௩-வது, பல்குப் பட்டணத்தின் காட்சி.

பல்குப் பட்டணத்திற்குப் போனேன் அவ்விராச்சியத்தில்சுல்த்தான் இபுருஹீமுபுனு அத்ஹம்றஹிமஹு்ல்லாஹு் அவர்கள் இராஜராயிருந்தார்கள் அப்பால் தங்களுடைய இராஜாங்கத்தைத் தங்களுண்டய மகனுக்குக் கொடுத் தொப்பிவித்துவிட்டுத் தாங்கள் தருவேசாகப் போனார்கள். ஒருநாள் சுல்த்தான் இபுருஹீமுபுனு அத்ஹம்றலியல்லாஹு் அன்ஹு் அவர்கள் கடற்கரையி லுட்கார்ந்துக் கொண்டு தங்களுடைய கம்பளியைத் தைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போதவர்களுடைய குமாரர் பிதாவைத் தேடிக்கொண்டுவந்து தம்முடைய தகப்பனாரவர்கள் கம்பளி தைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார் அப்போது எனது பிதாவே யிது நல்லதா? தாங்கள் அரசை யொப்புக் கொள்ளுங்க ளென்று சொன்னார் அச்சொல்லைக் கேட்ட மாத்திரமே சுல்தான் இபுருஹீமுபுனு அத்ஹமவர்கள் தங்கள் கையிலிருந்த வூசியைக் கடலி லெறிந்து விட்டு மகனே யிப்போது நான் கடலி லெறிந்த வூசியைக் கடலி லிருந்தெடுத்துக் கொண்டுவாவென்று சொன்னார்கள் அதற்கு மகன்பிதாவைப் பார்த்து இதுமகா ஆச்சரியம்! கடலி லெறிந்த ஊசி யினி கடலிலிருந்து திரும்பக்கிடைக்குமாவென்றுகேட்டார். அப்போது சுல்தான் இபுருஹீமுபுனு அத்ஹம் றஹிமஹு்ல்லாஹு் அவர்கள் சமுத்திரத்திலுள்ள மீன்களைப் பார்த்து மீன்களே யென்னுடைய வூசியைச் சமுத்திரத்திலிருந் தெடுத்துக் கொடுங்க ளென்று கேட்டார்கள். உடனே அந்தமீன்களுக்கு வெள்ளிதங்கத்தால் செய்யப்பட்ட வூசிகளைச் சமுத்திரத்திலிருந் தெடுத்துக் கொடுங்களென்று அல்லாகுத் தஆலாவுடைய உத்தரவாச்சுது அதுபோலவே மேற்படி மீன்களெல்லாம் வெள்ளி தங்கத்தால் செய்த வூசிகளை ஒவ்

வொரு மீன்களும் ஒவ்வொரு ஊசிகளை வாயி லெடுத்துக் கொண்டு சுல்த்தான் இபுருஹீ முபுனுஅத் ஹம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்தில்வந்தன அப்போது சுல்த்தான் இபுருஹீமுபுனு அத் ஹம் றஹிமஹுல்லாஹு அவர்கள் அல்லாஹுத்தஆலாவிடத் தில் முனாஜாத்துச் செய்தார்கள். அதெப்படி யெனில் நாயனே யெனக்கிந்த ஊசிகளெல்லாந் தேவையில்லை யென்னுடைய இரும்பு ஊசியைத்தான் கேட்கிறே னென்று மன்றாடினார்கள். பிறகு ஒரு மீன் அதே ஊசியை யெடுத்துக்கொண்டுவந்து கொடுத்தது அதை வாங்கிக் கொண்டார்கள். அதுகண்டு குமாரர் துன்யாவுடைய் இராஜாங்கம் பிரயோசனமில்லை, தீனுடைய இராஜாங்கம் தங்களு க்குக் கிடைத்திருப்பது மிகவும் விசேஷமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவரும் சுலத்தான் இபுருஹீமு புனு அத் ஹம் றஹிமஹுல்லாஹு அவர்களுக்குப்பக்கத்தில் நித்திரை செய்கிறார் நான் ஸியாறத்துச் செய்தேன்.

ருச-வது, பஸ்ருப்பட்டணத்தின் காட்சி.

நான் பஸ்ருப்பட்டணத்திற்கும் போனேன் அந்நகரில் காஜா ஹஸன் பஸரீ றஹிமஹுல்லாஹு அவர்களும், இமாம் ஸைனுல் ஆபிதீன் றஹிமஹுல்லாஹு அவர்களும்தேசத்தரசர்களாகவும்,விலாயத்துடையவர்களாயு மிருந்தார்கள். அவர்களை வனாந்தரத்தில் மூன் றரண்மனைக்கு மத்தியில் தபன்செய்யப்பட்டிருக்கிறது. ஜனங் களெல்லாம் அந்த அரண்மனைகளில்போய் ஸியாறத்துச் செய்கிறா ர்கள் நானும் ஸியாறத்துச் செய்தேன்.

ருரு-வது, பற்தாப்பட்டணத்தின் காட்சி.

நான் பற்தாப்பட்டணத்திற்குப் போனேன் அந்தப் பட்டண த்தில் கேமலிக் ஹுஸைன் மக்த்தூப் பற்தீ யிருந்தார்கள் அவர் கள் நாற்பது வருஷம் வரையிலும் உலூச்செய்யாமல் வானலோகத் தைப் பார்த்திருப்பதில்லை யெப்போதும் மஸ்ஜிதில் தொழுகிறவர் களையும், தொழாதவர்களையுந் தேடிக்கொண் டிருப்பார்கள் தொ ழாதவர்களைச் சிட்சை செய்வார்கள் எச்சமயமும் நாயனுடைய திக்றே செய்துக்கொண் டிருப்பார்கள். நானவர்களை ஸியாறத் துச் செய்தேன்.

௩௬-வது, குருசான்பட்டணத்தின் காட்சி.

—*—

நான் குருசான் பட்டணத்திற்குப் போனேன் அவ்விராச்சியத்தில் காஜா அபூஸஈத் அபுல்கைறு அரசரா யிருந்தார்கள் அவர்கள் தங்களுடைய குதிரைகளுக்கு லாடங்கள் தங்கத்தினா லடிப்பார்கள் ஏனென்றால் அந்த லாடங்கள் விழுந்து யாருக்காவது கிடைத்தால் அவன் பணக்கார னாகட்டுமென்ற நல்லெண்ணத்துடனே அப்படிச் செய்வார்கள். இன்ன மவர்களுடைய கூடாரங்களுக்கு ஆணிகளும் மற்றுஞ் சாமான்களும் தஙகத்தாலும் கயிறுகள் பட்டாலும் செய்து வைத்திருந்தார்கள். அதிலிருந்து ஏதாவது தவறினால் மனுடர்கள் தேடியெடுத்துக் கொள்வார்கள் அந்தச்சாமான்கள் யாரிடத்திலாவது கிடைத்துக் கொண்டுவந்து கொடுத்தாலும் அதை மீளக் கொடுத்து விடுவார்கள் காஜா அபூசஈத் றஹ்மத்துல்லாஹி யவர்கள் பெரிய தறஜா வுடையவர்களா யிருந்தார்கள். ஹக்த்த ஆலா வுத்தர வெப்படியாகுமோ அப்படியே நடப்பார்கள். மனதுடன் நாற்பதுவருஷம் கீழ்ப்பணிந்து நடந்தார்கள். ஹக்த்த ஆலாவிடத்தி லெதை நாடினார்களோ அது நிறைவேறிக் கொண்டே யிருநதது நான்போய் ஸியாறத்துச் செய்தேன்.

௩௭-வது, இமாம்களின் ஸியாறத்துக்காட்சி.

ஹலரத்து ஜுனைதுல்பகுதாதீ றலியல்லாஹு அன்ஹு, காஜா மஃறாபில் கறுகீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு ஷிபுலீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு ஸரீயிஸிக்தி றலியல்லாஹு அன்ஹு, இமாம்ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு, இமாம் மாலிக் றலியல்லாஹு அன்ஹு, இமாம் அஹ்மதுபுனு ஹன்பல்றலியல்லாஹு அன்ஹு, இமாம் மூசாக்காலிம் றலியல்லாஹு அன்ஹு, காஜா காதிம் றலியல்லாஹு அன்ஹு, இமாம் ஜஃபறுஸ்ஸாதிக் றலியல்லாஹு அன்ஹு, இமாம் முஹம்மதுபாக்கிறு றலியல்லாஹு அன்ஹு, செய்யிது அப்துல்க் காதிறுக்கீலானீ றலியல்லாஹு அன்ஹு இவர்க ளடங்கலையும் நானொவ்வொருவர்களுடைய கபுறையும் ஸியாறத்துச் செய்தேன்.

௩அ-வது, பத்லாயீப் பட்டணத்தின் காட்சி.

நான் பத்லாயீப் பட்டணத்திற்குப்போனேன் அந்நகரில் முந்நூற்றி அறுபது கதவுகளை யுடைய ஒரு பெரிய கோவிலிருக்கிறது அதில் துன்யாவிற் பிறந்த எல்லா நபிமார்களுடைய படங்களையும் அந்தக்கோவிலில்வைத்திருக்கிறது அதைப்புத்துகளென்னும் விக்கிரகஸ்த் தலமாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த விடத்தில் நஸாருக்களே ஆதிமுதல் வசிக்கிறார்கள். ஈஸா அலைகிஸ்ஸலா மவர்களைத் தேவகுமார னென்று வணக்கஞ் செய்கிறார்கள். இன்ஜீலை ஓதுகிறார்கள், நாலுமாதம் நோன்புவைக்கிறார்கள், நாளெல்லாம் நல்லெண்ணெயும் அரிசியும் சாப்பிடுகிறார்கள். அவ்விடத்திலுள்ள ஸ்ரீமான்களும், ஏழைகளு மிவைகளைத்தான் சாப்பிடுகிறார்கள். இரத்த மூறுகிற வஸ்துக்களைச் சாப்பிடுகிறதில்லை, பிணத்தைத் தீயில்வைத்தெரிக்கிறதில்லை. கல்லறையுள் புதைக்கிறார்கள் நான் பார்வை யிட்டேன்.

௩௯-வது, இராயகான் பட்டணத்தின்காட்சி.

இராயகான் பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் ஷெய்கு பிறுகி பரீத் நித்திரை செய்கிறார்கள். அவர்கள் கால்நடையாக வழிநடந்து மக்காவுக்குப்போய் மூன்றுதடவை ஹஜ்ஜு செய்திருக்கிறார்கள். நாலாம் தடவை ஹஜ்ஜுக்குப் போகும்போது ஒருபூனையைத் தங்களுடன் கொண்டுபோனார்கள் அந்தப்பூனையும் ஷெய்கவர்களுடன் ஹஜ்ஜு செய்தது. ஷெய்கவர்களுடைய பறக்கத்தால் பூனைக்குங் கருமத்துக் கிடைத்தது. மேற்படி ஷெய்கவர்களிடத்தில் வரப்பட்ட முஸாபர்களையும், விருந்தாளிகளையும் தெரிந்தந்தப் பூனையானது ஷெய்கவர்களுக்கு முன்னறிக்கை செய்யும் அதின்மூலமாக ஷெய்கவர்கள் வருகிற ஆள்களின் தொகையையறிந்து அவ்வளவு ஜனங்களுக்குத் தக்கபடி வஜீபனங்கள் தயாறு செய்யும்படி ஊழியக்காரர்களுக் குத்தரவு செய்வார்கள் அப்படி யிருக்கையில் ஒருநாள் பதினொரு சனங்கள் வந்தார்கள். அந்தப் பூனையானது பத்துப்பேர்கள் வருகிறதா யறிவித்தது ஷெய்கவர்கள் பத்துமனுஷர்களுக்குச் சமயல்செய்யும்படிக் குத்தரவு செய்தார்கள். ஊழியக்காரர்க ளவ்விதமே செய்துவைத்திருந்தார்கள். அப்பால் பதினொ

ருபேர்கள் வரவே ஷெய்கா னவர்க ளந்தப் பூனையைக் கொண்டுவ ரும்படிக் குத்தரவு கொடுத்தார்கள் அதுபோற் கொண்டுவரப்பட் டபோது ஷெய்கவர்கள் பூனையைப்பார்த்து பதினொருபேர்கள் வந் திருக்கிறார்களே நீ பத்துப்பேர்கள்மட்டும் வருவதாக ஏன் சொன் னாயென்று கேட்டார்கள். அப்போ தந்தப் பூனையானது தன்னு டைய வாலை யுயர்த்திக் கொண்டு பதினோராவது மனுடனைச் சுற்றி வந்தது உடனே ஷெய்கானவர்கள் அந்த மனுடனுடைய சட்டை யைக் கழற்றும்படிக் குத்தரவு செய்தார்கள் அவ்விதஞ் சட்டை யைக் கழற்றிப் பார்க்கும்போது அந்த மனுடன் பூணூல் போட்டி ருந்தான் அப்போது வந்திருந்த பக்கீறுகள் இந்தமனுடன் அனே கவருஷங்களாகத் தன்னை பக்கீறென்று சொல்லிக் கொண்டு எங்க ளுட னிருக்கிறான் இவன் காபிறென்று எங்களுக்கு இன்றைக்குத் தான் தெரியுமென்று சொன்னார்கள். பிறகு அந்த மனுடன் ஷெய் கானவர்கள் முன்புக்கு இஸ்லாத்தில் சேர்ந்து பெரிய பெரிய தற ஜாக்களையெல்லா மடைந்துக் கொண்டார். பக்கீறாகிய நான்போய் அந்த வூரிலுள்ள பெரியோர்களையு மற்றும் ஜனங்களையும் ஸியாற த்துச் செய்தேன்.

சO-வது; ஸாத்பட்டணத்தின் காட்சி.

நான் ஸாத்பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் உம று அமலா நித்திரை செய்கிறார்கள். அவர்கள் துன்யாவில் வித்தை களின் வழிகளை அனேகமா யுண்டாக்கி யிருக்கிறார்கள் நான்ஸியா றத்துச் செய்தேன்.

சக-வது; அந்தாக்கியாப் பட்டணத்தின் காட்சி.

நான் அந்தாக்கியாப் பட்டணத்திற்குப் போனேன் அந்தப் பட்டணத்தில் மூன்றுகோடியே அறுபதிலட்சத்திப் பனிரண்டாயி ரம் பேர்ச்சேவகர்க ளிருந்து ஹபஷிகளுடன் சண்டை செய்துக் கொண்டிருந்தார்கள். அந்தவூர் ஜனங்கள் முப்பதுகாதத் தூரத் திலிருந்து தொழுகையின் பாங்குச் சப்தத்தைக் கேட்கிறார்கள். அந்தப்பட்டணத்தின் கதவுக் கருகில் ஒரு பெரிய மரமிருக்கிறது. அது அதிக நிழலைத்தருகிறது அந்தமரத்தின் அடியிலொருபெண் பிள்ளை ஒரு குழந்தையைப் பெற்றிருந்தாள் அப்போது தாறுவெ

ன்னு மரசன் தற்செயலாகக் காட்டில் வேட்டையாடிக்கொண்டு வந்தவன் அந்த மரத்தடியில் ஒரு பெண்பிள்ளை ஒரு ஆண் குழந்தையைப் பெற்றிருப்பதைக் கண்டு அந்தத் தாயையும், பிள்ளையையும் தன்னுடன் கொண்டுபோனன் அந்தக் குழந்தைக்கு இஸ்கந்தரென்று பெயர்வைத்தான் அப்பால் அக்குழந்தை பெரியவனானபோது அக்த்தஃ என்னும் பட்டணத்தைக் கொடுத்ரசாளும்படி செய்தான். பின்பு இஸ்க்கந்தர் அக்த்தஃ என்னும் பட்டணத்தில் பொக்கிஷங்களையும், ஆடம்பரங்களையும் சம்பாதித்து அரசாண்டுக்கொண் டிருந்தான். அப்படி யிருக்கையில் தாருவென்னு மரசன் அனேக தடவையாக இஸ்க்கந்தனைக் கூப்பிட்டும் வரவில்லை. அதின்பின் இஸ்க்கந்தர் தன்னுடையசேனைகளைத் திரட்டிக்கொண்டு தாருவுடன் சண்டைசெய்ய எத்தனித்தான் அவ்விதமேத்தனித் தொருநாள் தாருவின் சேனையுடன் இஸ்க்கந்தர் சண்டைசெய்யப் போனன் இஸ்க்கந்தரும, தாருவும் அதிகமா யுத்தஞ்செய்து கடைசியாய் இஸ்க்கந்தர் தாருவைக்கொன்றுவிட்டு அவனுடைய வூரையுங் கைவசப்படுத்திக் கொண்டான் நான் வியாறத்துச் செய்தேன்.

சஉ-வது, கஞ்சாப் பட்டணத்தின் காட்சி.

நான் கஞ்சாப்பட்டணத்திற்குப் போனேன் அந்தப்பட்டணத்தின் கதீபு எப்போதும் சாராயத்தைக் குடித்துக்கொண்டு மிம்பற்மே லுட்கார்ந்து பிரசங்கஞ் செய்துக் கொண்டிருந்தார் அவர் மரணமாகும்போது ஜனங்களுக்குச் செய்த வஸியத்தாவதென்னவென்றல் ஓய் ஜனங்களே நானிப்போது துன்யாவைவிட்டும் யாத்திரை செய்கிறேன் என்னைச் சாராயத்தால்க் குளிப்பாட்டி யடக்க வேண்டும் எந்தமனுடனுக்காவது சாராயக் குடியை விட்டு விடவேணுமென்று பிறியமிருந்தால் அவனொரு கூசாவின் நிறையச் சாராயத்தைக் கொண்டுவந்து என்னுடைய கப்றின் பேரில்த் தெளித்துவிட்டால் சாராயங் குடிக்கிற வழக்கம் நின்றுபோகும் அதின்பிறகு சாராயங் குடிப்பதற் கவனுடைய மனம்வரவே மாட்டாதென்று வஸியத்துச் செய்தார் அந்தப்பிரகாரம் அவருடையக்கபறின்பேரில் நாளொன்றுக்கு-ஐம்பது, அறுபது கூசாச் சாராயந் தெளிக்காத நாள்கிடையாது ஜனங்க ளெல்லா மவருடைய ப்றக்கத்தால்

சாராயங் குடிப்பதைவிட்டு விடுகிறார்கள் பிறகு சாராயத்தின்பேரி லிச்சையுண்டாகிறதேயில்லை-அந்தகத்தீபு இப்பேர்பட்ட மேன்மை யும், மகிமையும் வைத்துக் கொண்டிருந்தார் நானவருடையக் கப றை வியாறத்துச் செய்தேன்.

௩௩-வது, அபூஸஈத் சிம்மாசனக் காட்சி.

ஒருபட்டணத்தில் சுல்த்தான் அபூசஈதுபாத்ஷாவுடைய சிம் மாசன மிருக்கிறது அவ்வரசர் உலகத்தில் ஞானம்? இராக மிவை களை யுற்பத்தி செய்திருக்கிறார்கள் அவர்கள் வலதுகையில் நாற் பது வாத்தியங்களும்? இடதுகையில் நாற்பது வாத்தியங்களும் வை த்து வாசித்துக் கொண்டிருப்பார்கள் அவைகளுந் தவிர எத்தனை யோ இராகக்கல்விகளைத் தங்கள் யூகத்தாலுற்பத்தி செய்திருக்கி றார்கள். இன்னம் ஹாஜிகளும் அந்தப் பட்டணத்தில் நித்திரைசெ ய்கிறார்கள் வியாளக்கிழமைகள் தோறும் ஹாஜி அஹ்மதுடைய கூ டத்தில் இராகவாத்தியம் பஜனையாகிறது ஆயிரம் ஜனங்கள் வரை யிலும் வந்து கூடுகிறார்கள் இன்னம் ரொட்டிகளைச் சாப்பிடுகிறார் கள் ஷெய்குபுறக் என்பவர்களும் அதேபட்டணத்தில்தான் நித்தி ரை செய்கிறார்கள் வெள்ளிக்கிழமை யன்று அவர்களுடைய கான் காவாகிய வணக்கஸ்த்தலத்தில் மூவாயிர ஜனங்கள்கூடி வஜீபனங் கள் புசித்துப்பசியாறுகிறார்கள் ஸயலின் வரும்படியாலந்தச் சிலவு கள் நடக்கிறது ஷெய்குபுறக் என்பவர்கள் உயிரோடிருக்குங் கா லத்தில் நானவர்களை வியாறத்துச் செய்தேன்.

௩௪-வது, ஹமதான் பட்டணத்தின் காட்சி.

நான் ஹமதான் பட்டணத்திற்குப் போனேன் அந்தப்பட்ட ணமாகிறது அல்வந்தென்னும் பெயருள்ள மலையின்மே லிருக்கிறது அந்தமலையிலொரு ஊறணியிருக்கிறது அது ஒவ்வொரு வெள்ளிக் கிழமை யிரவும் அந்த ஊறணியில்த் தண்ணீர் பொங்கி வருகிறது எல்லா ஜனங்களும் அதின் தண்ணீரைக் குடிக்கிறார்கள் மொண்டு கொண்டு போகிறார்கள் வஸ்த்திரங்களைக் கழுவுகிறார்கள் அன்றி ராத்திரி முழுவதுமந்த ஊறணியில்த் தண்ணீரிருக்கிறது அதின்பின் மறுவெள்ளிக்கிழமையிரவு வரையிலுந் தண்ணீரில்லாமல் போய் விடுகிறது அந்த ஊரிலுள்ளவர்களுக் கந்தத் தண்ணீரைத்தவிரவே

றுதண்ணீர் கிடையாது-அந்தத் தண்ணீராகிறது சொற்கலோகத்தி லிருந்துவந் தோடுகிறது ஷெய்குபாபாத்தா ஹிறு ஷெய்கு ஹாஜி ஹாபிலு ஆகிய இருவர்களும் அந்தப் பட்டணத்தில் வைக்கப் பட் டிருக்கிறுர்கள் அந்தப்பட்டணத்திலொரு சத்திரத்தி லவ்விரு பெரி யோர்களும் நித்திரைசெய்கிறுர்கள். அந்த இரண்டுபெரியோர்களு டைய அன்னதானங்கள் அந்தச்சத்திரத்தில் இரவும் பகலு மெப் போதும் நடந்துக்கொண்டேயிருக்கிறது-எல்லா அரசர்களும் குடி ஜனத்தில் ஸ்ரீமான்களும் எளியவர்களும் வந்து சாப்பிடுகிறுர்கள். நான் போய் ஸியாறத்துச் செய்தேன்.

௪௫-வது. நஹாவந்து பட்டணத்தின் காட்சி.

நான் நஹா வந்துப்பட்டணத்திற்குப்போனேன் அவ்விடத்தி லொரு குகையாகிய புடையிருக்கிறது அதில்சர்ப்பங்களின் அரச னுகிய வொரு பாம்பு இருக்கிறது? அதைச் சிறையில்ப்போடப்பட் டிருக்கிறது, அதின்வாயிலிருந்து புகைவருகிறது, அந்தப்புகையா னது மேற்படி குகையிலிருந்து மூன்று காததூரம் வரையிலுந் தெ ரிகிறது அதின் வாயிலிருந்து நெருப்புச் சுவாலைகளும் வெளிப்படுகி றது அதின் நீளமோ இலட்சத்தி யெண்பதிணுயிரத்தி நாற்பத்தை ந்து கெஜ மிருக்கிறது பக்கீருகிய நான்போயழந்தேன்

௪௬-வது; கைபறுக் கோட்டையின் காட்சி.

நான்கைபறுக் கோட்டை க்குப் போனேன் அதின்கதவாகிறது பனிரண்டாயிரத்தி யெழுநூற்றியாறு மணங்கு நிறையுள்ளதாயிரு க்கிறது அது இரும்பும் துத்தநாகமும் சேர்த்துருக்கி வார்த்திருக் கிறுன் ஒன்றைச் சுற்றி யொன்றுக ஏழுகோட்டை யிருக்கிறது அ தின் அகழ் ஏழு கெஜம் ஆழ மிருக்கிறது அந்தக் கோட்டையின் கதவிலொரு வெடிப்பாவதில்லை. ஒருகாபிறுன பெண்பிள்ளை அதிற் கதிகாரியா யிருந்தாள் அப்படி யிருக்கையில் நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அந்தக் கோட்டையைப் பிடிப்ப தற்காக அஸ்ஹாபி மார்களைப்பெரிய பெரிய சேனைகளுடன் அனு ப்பினுர்கள் மேற்படி அஸ்ஹாபிமார்கள் எவ்வளவுகாலமோ அந்தக் கோட்டையைச் சுற்றி யிருந்துவிட்டு வந்துவிட்டார்கள் அவர்களு

க்கு ஜெயம்கிடைக்கவில்லை கடைசியாக நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அலீறலி யல்லாஹு அன்ஹு அவர்கள் கையில் ஈட்டியைக்கொடுத்தொப்பிவித்து அஸ்ஹாபிமார் கூட்டத்தையுமனுப்பித்தாங்களும் போனார்கள் அவர்கள் அந்தக் கோட்டைக்கருகே சென்றபோது அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் (நாரு) வென் றொரு சப்த்த மிட்டார்கள் அந்தசப்தத்தின திர்ச்சியில், அந்தக் கோட்டையில் நின்றும் பனிரண்டு மனூருக்கள் முறிந்திடிந்து அந்தக்கோட்டையனருகிலுள்ள அகழில்விழுந்து பாலங்களைப்போல்க் கிடந்தன இனன மதிடிந்து விழுந்த துண்டுக்கற்களின் குவியலால் அந்தக் கோட்டையின் கதவு மறைந்துபோய்விட்டது-அப்போது அமீறுல் முஃமினீன் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய இரு புயங்களையு மந்தக் கோட்டைக் கதவின் கீழ் வைத்துச் சுவர் முழுவதையு மெடுத்துக் கொண்டார்கள். இன்னமந்தச் சுவரைக் கொண்டு போய் அகழின் மேலொரு பாலத்தைப்போல்ச் செய்து தங்களுடைய கைகளால்ப் பிடித்துக் கொண்டிருந்தார்கள் அவர்களுடன் வந்திருந்த சேனைக ளெல்லாம் அந்தச்சுவரின் பேரிலே நடந்து போனார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களந்தச் சுவரின் மீது செல்லும் போது-ஹலறத்து அலிறலியல்லாகுஹு அன்ஹு அவர்களுடையகைகள் நடுங்கிவிட்டது அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைப் பார்த்து அல்லாவுடைய றசூலே தாங்கள் தயவு செய்து விரைவாய்ச் செல்லுங்கள் என்கைக்குத் தங்கள் பாரத்தை யெடுக்கும்படியான சக்த்தி யில்லை யென்று அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் அப்பால் நபிநாயக மவர்கள் விரைவாகச் சென்றதின் பிறகு அமீறுல் முஃமினீன் அலிறலி யல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு பெரிய கல்லைக் கேடயமாக எடுத்துக் கொண்டு கைபறுக்கோட்டைக்குள் சென்றூர்கள் ஹக்த்த ஆலாவின் பேரிலும் நபிநாயகத்தின் பேரிலும் ஈமான் கொண்டு இசுலாத்தில் வந்தவர்களை வெட்டாமல் விட்டுவிட்டார்கள். ஈமான் கொள்ளாமல் மறுதலித்தவர்களைக் கொன்றுவிட்டார்கள் இந்தநடபடிக்கைகளை யெல்லாம் ஏழுகோட்டைகளிலுமுயர்ந்த கோட்டையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த் அதிகாரியாகிய அந்தப் பெண்பிள்ளையானவள் ஹலறத்து அமீறவர்களுடைய பலத்தைப்பார்த்து மதிமயங்கி பூமியிலடித்து விழுந்தாள். அப்படி விழுந்ததி லவளுடைய மோவாய்க் கட்டை நாடி கல்லிலடித்து காயமாகிவிட்டது அப்போதந்தப் பெ

ண் பிள்ளையை நபிநாயகத்தின் சமுகத்திற் கனுப்பினர்கள் ஹல றத்து அமீறுல்முஃமினீன் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தக் கோட்டையில் தீனுல் இஸ்லாமுடைய கொடியை நிறுத்தி ஞர்கள் பின்பு நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் அந்தப் பெண்பிள்ளையைக் கண்டபோது அவளை யெதற்காக அடி க்கப்பட்டதென்று கேட்டார்கள். அதற்கந்தப் பெண்பிள்ளைதானே சொன்னாள் நபிநாயகமே யென்னை யொருவருமடிக்கவில்லை ஆனல் சிவப்புநிறமுள்ள அந்தக் குட்டையான மனுடனுடைய பயங்கரத் தால் மதிமயங்கிப் பூமிமீது விழுந்தேனென்று தான்கண்ட சங்கதி களை யெல்லாம் சொன்னாள். அப்போது நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் அலிறலி யல்லாஹு அன்ஹு அவர்களு டைய விசேடங்களைக் கேட்டபோது ஆச்சரியப் பட்டார்கள்.

அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாமவர்கள் நபி நாயகத்தின் சமுகத்தில்வநது நபிகளுக் கெல்லாம் நாயகமே அல் லாவுடைய றசூலே அல்லாஹுத்தஆலா உங்களுக்கு சலாம்சொல் லியிருக்கிறான் இன்னு முங்களுக்கு சலவாத்தென்ற காணிக்கையு மனுப்பிச் சொல்லுகிறான் என்னுடைய புலியாகிய அலியில்முறுத் தலாவுடைய இவ்வளவு பலத்தைப் பற்றி யேன் ஆச்சரியப்பட்டீர் கள். இந்தப் பெலமாகிறது இஸ்லாத்துக்காக வெளியாகிறது அவ ர்களுடைய பெலத்தால் பூமியைத தாங்கிக்கொண் டிருக்கிற பசு வின் பித்தான துடைந்துபோய்விட்டது அந்தப் பசுவுக்குப் பதி லாக வேறுபசுவை யேற்படுத்த, அல்லது அந்தப் பசுவைச் சுகப்ப டுத்த விரும்புகிறேன். என்று திருவுளமாகிறு னென்றார்கள். இன் னம் அந்தக்கோட்டையில் ஹலறத்து அலிய்யில் முறுத்தலா அவர் களுடைய கைகளால் ஒரு லட்சம்பேர்கள் கொல்லப்பட்டார்கள். ஏனென்றால், அவர்களெப்போதும் மக்காவிலுள்ள ஜனங்களைக் க ஷ்டப்படுத்திக்கொண்டே யிருந்தார்கள். ஆகையால், அமீறுல்முஃ மினீன் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தக்கோட்டை யை நாசப்படுத்திவிட்டு மீண்டு நபிநாயகத்தின் சமுகத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்போதும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்கள் நபிநாயகத்தினிடத்தில்வந்து சொன்னார்கள். ஓய் முஹம் மதே அல்லாஹுத்தஆலா தங்களுக்கு சலாமும் சொல்லி ஸலவா த்தென்ற காணிக்கையு மனுப்பிச் சொல்லுகிறான். இஸ்லாத்தினு டைய வேராகிறது ஹைதறுடைய கையால் ஊன்றப்பட் டிருக்கிற

தென்று திருவுளமாகிறு னென்று சொன்னூர்கள். அப்படிப்பட்ட கைபறுக் கோட்டையை பக்கீருகிய நான் வியாறத்துச்செய்தேன்.

சஎ-வது, கஷ்மீற் பட்டணத்தின் காட்சி.

நான் கஷ்மீற் பட்டணத்திற்குப் போனேன் அந்தப்பட்டணத்தில் நபிசுலைமான் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களால் சிம்மாசனம் கட்டப்பீட்டு அவர்களுடைய சிம்மாசன மந்தப்பட்டணத்தி லிருக்கிறது அந்தப்பட்டணத்தி லொருமலையு மிருக்கிறது அந்தக் கஷ்மீற்பட்டணத்தி லுள்ள ஜனங்க ளெல்லாருங்கூடி உற்சாகமாக உற்சவம் நடத்துகிறூர்கள். மேற்படி சிம்மாசனத்தையும் வியாறத்துச் செய்கிறூர்கள் நானந்தச் சிம்மாசனத்தை மேலுங்கீழும்பார்த்து வியாறத்துச் செய்தேன்.

சஅ-வது, பதக்ஷான் பட்டணத்தின் காட்சி.

நான் பதக்ஷான் பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் சிவப்புக் கற்களால் நிறைந்த ஒரு மலையிருக்கிறது, ஆனூல் அந்தமலையி லேறிப்போக வொருவராலு முடியாது இரவுகளி லந்தச் சிவப்புக் கற்களெல்லாம் தூரத்திலிருந்து பார்க்கத் தீபங்களைப் போல் பிரகாசிக்கின்றன. நானந்த மலையிற்போய்ப்பார்த்தேன்.

சகூ-வது, கார்சம் பட்டணத்தின் காட்சி.

நான் கார்சம் பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் ஷெய்கு நஜமுத்தீனில் குப்றுக்கார் சமீ நித்திரை செய்கிறூர்கள். முகல்களின் சேனைகள் அவ்விடத்தில் வந்து மேற்படி ஷெய்கவர்களுடைய தலையைக் கழுத்திலிருந்து துண்டித்து ஷஹீது செய்துவிட்டார்கள். அப்போது ஷெய்கவர்கள் தங்கள் தலையைத் தங்களுடைய் கையில் வைத்துக்கொண்டு சுபுஹா னல்லாவென்று சொல்லிக்கொண்டு ஜைஹூன் நதிகடந்து சென்றூர்கள கார்சம் பட்டணத்திற்குப்போய்ச் சொற்கபதி யடைந்தார்கள். இந்தக் காரணத்தைக் கண்டு மேற்படி முகல்களும், காபிறுகளும் எல்லாரும் இஸ்லாமாய்விட்டார்கள். இன்னமந்த ஷெய்கவர்களைக் கார்சம்பட்ட

ணத்தில் தபன்செய்து அவர்களுடைய தறுக்காவைப் பெரிதாகக் கட்டிவிட்டார்கள். சனங்களெல்லா மங்கேபோய் வியாறத்துச் செய்கிறார்கள். நானும்போய் வியாறத்துச் செய்தேன்.

௫௦-வது, லீனுப்பட்டணத்தின் காட்சி.

நான் லீனுப்பட்டணத்திற்குப் போனேன் அது ஹிந்துஸ்தேசத்தி லிருக்கிறது அதைப்போல் வேறுபட்டணங் கிடையாது அதின் கடைவீதிமட்டும் பதினாலுகாத நீளமிருக்கிறது. அந்தப்பட்டணத்தில் ஒரு ஜாமிஆப் பள்ளி யிருக்கிறது அதாகிறது சுல்த்தான் சன்ஜ றென்பவரால் கட்டப்பட்டது, அதற்கு அறுநூற்றியறுபது மிஹ்றாபுக ளிருக்கிறது எப்பேர்ப்பட்ட அரசனு மிப்பேர்ப்பட்ட பள்ளிகட்டவில்லை அந்தப் பள்ளியி னுட்புறத்தில் தங்கக்கிலீட்டுப் பூசியிருக்கிறது, அதின் ஸஹனிலொரு ஹவுலிருக்கிறது அதிலிருக்கிற தண்ணீரால் எல்லா ஜனங்களும் உலூச் செய்கிறார்கள். இன்னமொரு ஹவுலிருக்கிறது அதில் எல்லா ஜனங்களுந் தொழுகிறார்கள். மேற்படி பள்ளியின் மிஹ்றாபுகளெல்லாந் தங்கத்தால் செய்திருக்கிறது. அதை யெப்போது முறைபோட்டு வைத்திருக்கிறார்கள். அதைச் சொல்லுகிறார்கள் ஒருநாள் நாயனுடைய வுத்தரவுகொண்டு தங்கமழைபெய்ததாகவும், அதனால் அந்தப்பட்டணத்திற்குக் காலூன்லீனுவென்று பெயர்சொல்லப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். அந்தப் பட்டணத்திலுள்ள பெரியோர்களடங்கலையும் சந்தித்து நான் வியாறத்துச் செய்தேன் அந்தவிடத்தில் ஷெய்கு அலாவுத்தீன் நாமான் தஷீனென்று ஒரு பெரியவர்களிருக்கிறார்கள். அவர்கள் இராஜாக்களுடைய வஜீபனங்களை யொப்புக்கொள்கிறதில்லை அந்தப் பெரியோர்களுக்கு கஷ்பிலிருந்து நிஃமத்துகளும், ஆகாரங்களும் கிடைத்துக்கொண் டிருந்தது, அப்பேர்ப்பட்ட வொலி ஹிந்துஸ்த்தானிலில்லை நான் அந்த வொலியானவர்களைக் கண்டு முலாக்காத்துச் செய்தேன்.

௫௧-வது, அஸ்ஹாபுல் கஹ்புடைய காட்சி.

அஸ்ஹாபுல் கஹ்புகளாகிறவர்கள் மலாயிக்கத்துக ளிருக்கப்பட்ட நாலாவது வானத்தி லிருக்கிறார்கள் நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு அல்லாஹுத்தஆலாவிடத்தில்

னின்றும் ஓய் முஹம்மதே யென்னுடைய வுவப்பானவர்கள் மலாயிக்கத்துகளுடைய ஸ்தலத்தி லிருக்கிறார்கள். நீர் அவர்களைச் சந்தித்துக்கொள்ளுமென் றுத்தரவாச்சுது அந்தப் பிரகாரம் நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் அந்தயிடத்திற்குப்போய்க் கைதட்டினார்கள். அதற் கவ்விடத்தி லிருந்து நீயாரென்று சப்தமுண்டாச்சுது அப்போது நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் நான் முஹம்மதுர் றசூலுல்லாவென்று சொன்னார்கள. அதற்கவ்விடமிருந்து இந்த விடமாகிறது பெருமைகொண்டாடக்கூடிய இடமில்லையென்று சப்தம்வந்தது. அப்போது நபிநாயகமவர்கள் பலமாய்க் கைதட்டினார்கள். பிறகும் தாங்கள் யாரென்று சப்தமுண்டாச்சுது அதற்கு நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் நானொருக் கவுமுகளுக்குத் தலைவனாகவும், பக்கீறுகளுக்கு ஊழியஞ் செய்யப்பட்டவனாகவு மிருக்கிறேனென்று சொன்னார்கள். அதின்பின் அஸ்ஹாபுல் கஹ்பானவர்கள் நபிநாயகமவர்களை உள்ளேவரும்படிசொன்னார்கள். அதுபோல் நபிநாயகமவர் உள்ளே போனார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு அல்லாகுத் தஆலாவில் நின்றும் ஓய் ஜிபுரீலே நீர்போய்ச் சொர்க்கலோகத்திலிருந்து ஒரு சேப்பழத்தைக் கொண்டுவந்து அதை அஸ்ஹாபுல் கஹ்பிடத்தில் கொடுமென் றுத்தரவாச்சுது அந்த உத்தரவுப்படி ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் கொண்டுவந்து அஸ்ஹாபுல் கஹ்பிடத்தில் கொடுத்தார்கள். அந்தப்பழத்தை அஸ்ஹாபுல் கஹ்புவாங்கி நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களிடத்தில் கொடுத்து விட்டார்கள். அந்தப் பழமானது தானாகவே யிரண்டு துண்டாகிவிட்டது. அதி லொருதுண்டு துல்பக்காற் ஆய்விட்டது மற்றொருதுண்டு செய்யி துன்னிசா பீவி பாத்திமத் துஸ்ஸஹறாவாக ஆய்விட்டது. அதனால்தான் ஹலறத்து அலிறலி யல்லாஹு அன்ஹு அவர்களுக்கு துல்பக்காறுங்கிடைத்தது. பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் புருஷநாயகமாகவு மாய்விட்டார்கள் நான்போய் ஸியாறத்துச் செய்தேன்.

௫௨-வது, ஹமதான் பட்டணத்தின் காட்சி.

—:*:—

நான் ஹமதான் பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் ஷெய்கு அப்துல்லா றஹிமஹுல்லாஹு அவர்களைக் கண்டேன்

அவர்கள் ஹமதானுடைய மலையில் நாற்பது குகைகளி லிருந்தார்கள். அதாவது ஒவ்வொரு குகைகளில் ஒவ்வொரு வருஷமிருந்து அல்லாஹுத் தஆலாவை வணங்கினார்கள். அவர்கள் ரொட்டி தின்னவுமில்லை, தண்ணீர் குடிக்கவு மில்லை, ஒருநா ளிரவு நாயனிடத்தி லிருந்து ஓய் அப்துல்லாவே நீரென் னவஸ்தை விரும்புகிறீரென்று சப்தமுண்டாச்சுது. அதற் கவர்கள் என்னுடைய நாயனே கியாம நாள் பரியந்தமும் என்னுடைய அன்னதானச் சத்திரம் நடந்துவரவேணுமென்றும், இன்ன மதின்விளக் கணைந்துபோகக் கூடாதென்றும் விரும்புகிறே னென்றார்கள். அப்போது அல்லாஹுத்த ஆலாவிடத்திலிருந்து ஓய் அப்துல்லாவே நீரெழுந்திரும், அந்த மலையி லும்முடைய அஸாவென்னுங் கோலை அடியும், இன்ன மதிலென்னுடைய வல்லமையைப் பாருமென் றுத்தரவாச்சுது. உடனே ஷெய்கானவர்கள் கோலை மலையின்மே லடித்தார்கள். அந்தமலையிலொருதுவாரம்விழுந்து அந்தத் துவாரத்தில் நவச்சாரமான கனியுண்டாய் விட்டது தினந்தோறும் நாள் ஒன்றுக்கு ஆயிரம்பவுன் கிறையமுள்ள நவச்சாரங்கள் அதிலிருந்து வெளியாய்க்கொண் டிருக்கிறது அதை வர்த்தகர்கள் கொண்டுபோய் வியாபாரம் செய்கிறார்கள் அதின்விற்று முதலிலிருந்து தினசரி அன்னதானம் நடக்கிறது பக்கீராகிய நான்போய் ஸியாறத்துச் செய்தேன்.

௫௩-வது, தப்ரேஸ்ப் பட்டணத்தின் காட்சி.

நான் தப்ரேஸ்ப் பட்டணத்திற்குப் போனேன் அந்நகரில்ஷெய்கு ஷம்ஸுல் ஹக்த்தப்ரேஸ்க்கத்த ஸல்லாஹு ஸிர்றஹுல் அஸீஸவர்களும், அவர்களுடைய முரீதாகிய மவுலானா ஜலாலுத்தீன் றாமீயவர்களு மிருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தப்ரேஸ்ப் பட்டணத்தில் ஷஹீதானார்கள். ஆனால் தாம்பிரமானது இரசவாத பஸ்பத்தா லெப்படித் தங்கமாக மாறிவிடுகிறதோ அப்படிப்போல் தப்ரேஸ்ப்பட்டணமானது அவர்களுடைய கோரியின் பறக்கத்தால் மேன்மைபெற்றது தப்ரேஸ் மிகவும் நல்ல பட்டணமாயிருக்கிறது அதில் சுல்த்தான் முஜாஹிதென்னு மரசரிருந்தார். அந்தப் பட்டண மிராஜதானியாக யிருந்தது அந்தப் பட்டணத்தின் கஜானாவில் உயர்ந்த முத்துகள் சேருகின்றன அவ்வூர் ஜனங்கள் பனிரண்டுகாத தூரத்திலிருந்து பாங்குச் சப்தத்தைக் கேழ்க்கிறார்கள் அவ்விடத்தி லுள்ள அவுலியாக்களும், ஆணும், பெண்ணும் எல்

லோர்களுந் தொழுகிறார்கள். எல்லாப் பள்ளிகளிலும் ஒரேகாலத்தில் பாங்குசொல்லி முடிவுசெய்யப்படுகிறது. அவ்வூரில் ஆலிம்களும், வணக்கமுடையவர்களும் மிகுதமாயிருக்கிறார்கள். அவர்கள் தொழில்முதலிய பாடுபட்டு ஹலாலான முதல்கள் சம்பாதித்து வஜீபனம் புசிக்கிறார்கள் நான் வியாறத்துச் செய்தேன்.

ருச-வது, எமன்பட்டணத்தின் காட்சி.

நான் எமன்பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் ஷெய்கு இஸ்மாயில், ஷெய்கு மஹ்மூது, ஷெய்கு அப்துல்லா இப்படிப்பட்ட அனேக அவுலியாக்கள் ஹக்த்த ஆலாவுடைய வணக்கத்தில் முயற்சியா யிருக்கிறார்கள். அவர்களில் ஒருவருடைய ஆகாரங்களில் மற்றொருவர் கையைப் போடுகிறது மில்லை, ஒருவருடைய ஆகாரத்தை மற்றொருவர் சாப்பிடுகிறதுமில்லை, அவர்களில் ஒருவராவது ஙாச்சியத்தை ஒப்புக்கொள்ளவுமில்லை, அவர்கள் மிகவும் நல்லவர்கள் அவர்கள் பள்ளிகளின் ஹுஜ்றுக்களி லுட்கார்ந்து வணக்கஞ் செய்துக்கொண் டிருக்கிறார்கள். நான் வியாறத்துச் செய்தேன்.

ருரு-வது, ஹன்ஸலான் பட்டணத்தின் காட்சி.

நான் ஹன்ஸலான் பட்டணத்திற்குப் போனேன் அவ்விடத்தில் ஷெய்கு இஸ்மாயீல் அத்தாற் நித்திரை செய்கிறார்கள். ஒவ்வொருவருஷமும் மூன்றுநாள் இரவும் பகலும் ஜனங்கள் மேற்படி ஷெய்கு அவர்களின் முன்பு இராகம்பாடிக்கொண் டிருக்கிறார்கள் ஒவ்வொருமனுடனுந் தன்போதம் தனக்குளில்லாமற்றானிருப்பான் ஒருநாள் மேற்படி ஷெய்கு இஸ்மாயீல் அவர்கள் தங்கள் வலதுபுறமும் இடதுபுறமும் பிரிந்து திரும்பிப் பார்த்தார்கள். அந்தவுடனே யிரண்டு பறவைக ளிரண்டு தங்கமுட்டைக ளிட்டிருந்தன. அப்போது யாதொரு வுருத்தோற்றமின்றியே மலாயிக்கத்துகளால் ஒய் இஸ்மாயீலே, இந்த யிரண்டுபறவைகளு மாகிறது உமக்குக் கியாமபரியந்தமும் தினந்தோறும் இரண்டிரண்டு முட்டைகளிட்டுக் கொண்டே யிருக்கும் அதைக்கொண்டும் உம்முடைய அன்னதானச் செலவுகள் நடக்குமென்று சப்தமிட்டார்கள் அந்தப்படியே நடந்துக்கொண் டிருந்தது இன்னம் அவ்விடத்தில் மிகுந்த ஜனங்

கள் பறக்கிற பறவைகளின் படம்செய்கிற தொழிலாளியா யிருக்கிறார்கள் அந்தப் பறவைகளிருக்கிற பிரகாரம் வரைந்துவிடுகிறார்கள் நான் வியாறத்துச் செய்தேன்.

௫௬-வது. சுல்த்தான் இருக்கியைக் கண்ட காட்சி.

—*—

நான் சுல்த்தான் இருக்கியைப் பார்த்தேன் அவர்கள் தப்ரேஸ்ப் பட்டணத்தில் அரசாட்சி செய்கிறார்கள். அவர்கள் குதிரையிலேறும்போது இலட்சத்தெண்பதினாயிரம் போர்வீரர்க ளவர்களுக்குப் பின்செல்லுகிறார்கள். அந்தப் பட்டணத்தில் பனிரண்டாயிரம் சாராயக்கடைகளிருக்கிறது. இன்னம் அவ்விடத்தில் பட்டாளங்களும் மிகுதியாயிருக்கிறது. அந்த அரசர் தங்களுடைய மக்புறாவுக்காக ஒரு குமிழ்மண்டபங்கட்டி யிருக்கிறார்கள். அந்த மக்புறாவில் பனிரண்டாயிரம் கபறுக ளிருக்கின்றன. அப்படி யிருந்தும் அந்த மண்டபத்தில் அதிகமான விடங்கள் காலியாயிருக்கிறது அந்தமண்டபத்திற்குச் சமீபத்தில் ஹலறத்து அமீறுல் மூஃமினீன் இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு இவர்களுடைய ஸ்தலமொன்றிருக்கிறது அதற்கு இமாம்படா வென்று பெயர் சொல்லுகிறார்கள். ஆஷூறா வன்றையில் ஜனங்களெல்லா மவ்விடத்திற் கூடுகிறார்கள். இன்னம் ஷெய்கு குத்புத்தீன் ஹைதரீ யென்பவர்களும் அவ்விடத்தில்நித்திரை செய்கிறார்கள் அந்த ஷெய்கானவர்கள் ஒருநாள் தினத்தில் கிறுத்தக் என்ற கொல்லனிடத்திற்போய் ஒருமணங்கு நிறையுள்ள இரும்பைக் காயவைத்துப் பழுக்கக் காய்ச்சினபிறகு அந்த இரும்பைத் தங்கள் கையில்வாங்கி வளைத்து அதைக் காறையைப்போ லுண்டாக்கித் தங்களுடைய கழுத்தில் போட்டுக்கொண்டு மேற்கூறிய இமாம்படாவில் ஹைதரீக் கூட்டத்திற் போனார்கள். மேற்படி ஷெய்குடைய மாதிரியாக இன்னுமந்த ஹைதரீக் கூட்டத்தில் நடந்து வருகிறது.

இன்னம் அதேபட்டணத்தில் ஷெய்கு ஸத்றுத்தீன் இருக்கிறார்கள் அவர்கள் ஒரு நேரம்செய்த உலூவைக்கொண்டு ஒருநாள் முழுவதிலும் வருகிற ஐந்து வகத்துத் தொழுகையையுந் தொழுவார்கள் நாற்பது வருஷம் அன்னம், தண்ணீர்முதலிய உணவுக ளருந்தா திருந்தார்கள். மாதாவின் வயிற்றிலிருந்து பிறந்தபடியே

துன்யாவிலிருந்து சென்றூர்கள். அவர்கள் துன்யாவின் இன்பசுக ங்களை யறியவேயில்லை, மேற்படி அந்த நாற்பது வருஷத்தில் ஒரு நாளாவது வானத்தைநோக்கிப் பார்க்கவேயில்லை எந்தமனுடர்க ளும் கடினமான மஸ் அலாக்களிருந்தால் மேற்படி ஷெய்கிடத்தில் வருவார்கள் அவர்க ளந்த மஸ்அலாக்களை விளக்கிக் காட்டுவார் கள். அந்தப் பட்டணத்தினருகே ஒரு மலையிருக்கிறது ஒருநா ளந் த ஷெய்கவர்களுக்கு அல்லாகுத் தஆலாவிடத்தில் நின்றும் ஓய் ஸத்றுத்தீனே நீர் இந்த மலைக்குள்போய் உம்முடைய அஸாவா ல டியுமென் றுத்தரவாச்சுது. அவ்வுத்தரவான வுடனே மேற்படிஷெ ய்கவர்கள் அந்தமலையில்போய் அவ்விதமடித்தார்கள் அவ்விதமடித் தவிடத்தில் நின்றும் நப்து என்ற எண்ணை வெளியாய்விட்டது அந் த நப்து எண்ணையை வியாபாரிகள் நாலாபக்கங்களிலு மிருந்து வாங்கிக்கொண்டுபோய் வியாபாரஞ் செய்கிறூர்கள் அதில் வசூலா கிற முதல்களில் நின்றும் ஊழியக்காரர்கள் மேற்படி ஷெய்குடைய அன்னதானமுதலிய தருமச்செலவுகள் நடத்துகிறூர்கள். அந்தவி டத்தில் எப்போதும் பனிரண்டாயிரம் ஸூபிக ளிருக்கிறூர்கள் அ ன்னம் புசிக்கிறூர்கள், ஐந்து வக்த்துந் தொழுகிறூர்கள், அந்தத் தொழுகைகள் ஜமாஅத்துடன் நடக்கிறது, அந்த ஜனங்களெல் லாம் நாயனிடத்தி லுவப்பா யிருக்கிறூர்கள். அனேகனேக பொக் கிஷங்களைத் தருமஞ் செய்கிறூர்கள் மிகுந்த சாமர்த்திய முடைய வர்களா யிருக்கிறூர்கள். பறக்கின்ற பட்சிகளின் படங்களை வரைந் துக் கொள்கிறூர்கள், நான் விபாறத்துச் செய்தேன்.

௫௪-வது, ஸபாஹான் பட்டணத்தின் காட்சி.

நான் ஸபாஹான் பட்டணத்திற்குப் போனேன் அந்தப் பட் டணத்தின் கோட்டையானது மகாப் பலமுள்ளது விரோதிகளால் யுத்தஞ்செய்து ஜெயிக்க ஒண்ணுது. அந்தவூரில் ஷெய்கு அலீஸ ஹீலிருக்கிறூர்கள். அவர்களுக்கு நாள்தோறும் ஐந்துபொன் செல வுடன் சமயல்செய்து விருந்தளிக்கிறூர்கள். மேற்படி ஷெய்கவர் கள் வாயில் பொன்னை வைத்துப் பக்கீறுகளுக்குக் காட்டி மற்றெவ ருக்குந் தெரியாமல் தருமஞ்செய்கிறூர்கள் நான் விபாறத்துச் செய்தேன்.

௫அ-வது, ஷீராஸ்ப் பட்டணத்தின் காட்சி.

நான் ஷீராஸ்ப்பட்டணத்திற்குப் போனேன் அந்தப்பட்டணத்தில் ஷெய்கு அப்துல்லா அவர்களுக்குப் பெரிய ஒரு தோட்டமிருந்தது அந்தத் தோட்டத்தை ஷெய்கு ஹுஸைனவர்களிடத்திலொப்பிவித்து அதைக் காவந்துசெய்யச் சொன்னார்கள். பின்பு ஒருநாள் ஷெய்கு ஹுஸைன் அவர்களிடத்தில் ஷெய்கு அப்துல்லாவானவர்கள் காணிக்கை கேட்டார்கள் உடனே ஒரு மாதுளம்பழத்தைப் பறித்துக்கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைஷெய்கு அப்துல்லாவாங்கித் தின்று ருசிபார்த்தார்கள் அது புளிப்பாயிருந்தது அப்போது ஓ ஷெய்கு ஹுஸைனே யேன்புளிப்பான பழத்தைக் கொண்டுவந்தீ ரென்று கேட்டார்கள். அதற்கவர்கள் ஓய் ஷெய்கு அப்துல்லாவே நீங்கள் எனக்கு மேற்படி தோட்டத்திலுள்ள கனிகளை ருசிபார்க்கும்படிக் குத்தரவு கொடுக்கவில்லை நான் நாற்பது வருஷமாக மேற்படி தோட்டத்தை மேற்பார்க்கிறேன். ஆனால் எந்தக்கனிகளுடைய ருசிகளு மெனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் அவைகளைத் தின்றுபார்க்கவில்லை யென்று சொல்லிவிட்டார்கள். இப்போ தந்தப் பட்டணத்தில் போகிறவர்க ளெல்லாம் இரண்டு நடவை ஷெய்கு ஹுஸைன் அவர்களுடைய ஸியாறத்தும், ஒருதடவை ஷெய்கு அப்துல்லா அவர்களுடைய ஸியாறத்தும் செய்கிறார்கள் ஷெய்கு சஃதியு மவ்விடத்தில் நித்திரை செய்கிறார்கள் நான் ஸியாறத்துச் செய்தேன்.

௫௯-வது, ஷெய்கு நஜ்முத்தீன், ஷெய்கு ஸியாவுத்தீனுடைய காட்சி.

ஷெய்கு நஜ்முத்தீன் ஸபாஹானீ யவர்கள் நாற்பது கித்தாபுகள் எழுதியிருந்தார்கள். அப்படி யிருக்கையில் ஒருநாள் மௌலானா ஸியாவுத்தீன் ஸபாஹானீ யவர்கள் மக்காவுக்குப் போனார்கள் அப்போது ஜனங்க ளெல்லோர்களும் ஷெய்கு ஸியாவுத்தீ னவர்களைப் பார்த்து தாங்கள் ஹிந்துத் தேசத்தி லுள்ளவர்களாக யிருக்கிறீர்கள். ஆகையால், மிம்பறின்பேரிலே றிக்குறு ஆனேதுங்க ளென்று சொன்னார்கள். அப்போது மவுலானா ஸியாவுத்தீ னென்பவர்கள்,

ஷெய்கு நஜ்முத்தீ னவர்களின் முன்புக்குக் குறுஆனை யோதினார்கள். அப்போது மவுலானு லியாவுத்தீ னவர்கள் குறுஆ னோதின தை, ஷெய்கு நஜ்முத்தீ னவர்கள் மிகவும் புகழ்ந்தார்கள். ஏனென்றால் ஷெய்கு நஜ்முத்தீனுனவர்கள் தேர்ந்த ஞானியாயிருந்தார்கள் மேற்படி யிரண்டு ஷெய்குமார்களும் மக்கமாநகரில் நித்திரை செய்கிறார்கள். நான் ஸியாறத்துச் செய்தேன்.

சூO-வது, மவுலானு ஷஹாபுத்தீன் புகாரியின் காட்சி.

மவுலானு ஷஹாபுத்தீன் புகாரீ யவர்களுக்கு முப்பதுவயதாயிருக்கையில் அவர்கள் மிம்பறிலேறி நஸீஹத்துச் செய்வார்கள் அப்போதிருந்து நஸீஹத்துக்கேட்கும் எல்லாஞானிகளும் தங்கள் தங்களுடைய வஸ்திரங்களைத் துண்டு துண்டாகக் கிழித்துக் கொண்டவர்களாக திக்றுச் செய்வார்கள் அப்போற்கொற்ற மகாயூகியாயிருந்தார்கள். அப்பா லவர்கள் மிஸ்றுக்குப் போனார்கள் அவ்விடத்தி லிருந்து புறப்பட்டு ஷீராஸுக்குப் போனார்கள் நானவர்களை ஸியாறத்துச் செய்தேன்.

சூக-வது, ஹாஜி றுக்னுத்தீன் காட்சி.

ஹாஜி றுக்னுத்தீன் ஷீராசியென்பவர்கள் எட்டு ஹஜ்ஜை செய்தார்கள். அவர்கள் மிகவு மறிவுள்ளவர்கள். அவர்கள் எழுபதுவருஷம் நஸீஹத்துச் செய்தார்கள் ஷீராஸ்ப் பட்டணத்தி லுள்ளவர்களெல்லா மவர்களிடத்தில் முரீதானார்கள், மழைபெய்யா திருந்தால் அவர்கள் மலையின்மீதேறி அல்லாகுத் தஆலாவிடத்தில் முனாஜாத்துச் செய்வார்கள். அவர்களுடைய பறக்கத்தா லுடனே மழை பெய்யும் அவர்கள் அவ்வளவு வல்லமையுடையவர்கள். அந்தயிடத்தில் மவுலானு ஷஹாபுத்தீன் புகாரீ யவர்கள் நஸீஹத்துச் செய்யத் துடங்கினார்கள். ஹாஜி றுக்னுத்தீன் ஷீறாசி யவர்கள் ஷெய்கு ஷஹாபுத்தீனைப் பார்த்து ஓய் ஷஹாபுத்தீனே நீர் மிம்பற்மீதேறி நஸீஹத்துச் செய்யுமென்று சொல்லிவிட்டுத் தாங்கள் கீழேயிறங்கி நின்றார்கள். அப்போது மவுலானு ஷஹாபுத்தீன் புகாரீயவர்கள் மிம்பற்மீதேற நஸீஹத்துச் செய்தார்கள். அந்த நஸீஹத்தைக் கேட்டிருந்த ஷீறாசிலுள்ள எல்லாஜனங்களும், ஷெய்கு றுக்னுத்

தீன் ஷீறாசியவர்களும் அழத் துடங்கினார்கள். அப்பால் எல்லார்களும் மவுலானா ஷஹாபுத்தீன் புகாரீ யவர்களிடத்தில் முரீதாய்விட்டார்கள். பின்பு அந்த மவுலானா ஷஹாபுத்தீன் புகாரீயவர்கள் தங்களுடைய தகப்பனா ரவர்களை மக்கமாநகரில் வைத்துக் கொலைசெய்த இராஜனைக்கண்டு ஓய் இராஜனே கியாமநாளையில் உனக்கு அதாபுண்டாகும் நீயேன் என்னுடைய தகப்பனாரைக் கொலைசெய்தாயென்று சொல்லி யந்த இராசனுக்கு மிகுந்த நஸீஹத்துகளும், மகா நன்மையான புத்திகளையும் சொன்னார்கள். இன்னு மந்த இராஜனுடைய முன்பில் இந்த மவுலானா ஷஹாபுத்தீன் புகாரீயவர்களைத் தவிர வேறே யாரால் வாய்திறந்து பேசமுடியும் அவ்விதம் சொன்ன நஸீஹத்துகளையும், புத்திகளையுங் கேட்டு அவ்விராஜன் அழுதுக்கொண்டு பள்ளியைவிட்டு வெளியே வந்து தன்வீட்டுக்குப்போனான் அப்போது அழுதுக்கொண்டிருக்கு மாசனை யவனுடைய மந்திரிகண்டு ஓய் இராசரே நீர் வீட்டைவிட்டு வெளியேவாரும் உம்முடைய ஊர் ஜனங்களெல்லாம் கலகஞ்செய்துக்கொண்டிருக்கிறார்கள். மிகுந்த கூக்குரல் செய்கிறார்கள். ஒருவேளை யும்மையுங் கொன்றுவிடுவார்க ளென்று சொன்னான். அப்போ தவ்வரசன் மந்திரியைப்பார்த்து அந்த ஜனங்களை யெல்லாம் ஷெய்கு ஸஃதீயுடைய கதீருத் தறுக்காவி லிறக்குங்களென்று உத்தரவு செய்தான் அந்தப்படி செய்யப்பட்டது மேற்படி மவுலானா ஷஹாபுத்தீன் புகாரீயவர்கள் புகாறாவி லிருந்து வந்தபோது இந்தப் பக்கீறாகிய நான் அவர்களிடத்தில்போய் அவர்களுடன் இரண்டுவருஷ மிருந்தேன் அவர்களிப்போது ஷீறாஸிப்பட்டணத்தில் நித்திரை செய்கிறார்கள். அவர்களுடைய ஸியாறத்திற்கு வெகுதூரங்களி லிருந்து எல்லாஜனங்களும் வருகிறார்கள். அந்த மவுலானா ஷஹாபுத்தீன் புகாரீயவர்கள் பெரிய ஆலீமாகவும், மகா ஞானியாகமிருந்தார்கள் இன்னமிந்த ஷீறாஸிப்பட்டணத்தைப்போல நல்லபட்டணம் வேறில்லை ஆனால் ஹார்றாவெனும், பற்தாவெனு மிரண்டுபட்டண மிருக்கிறது அவைகளும் ஷீறாஸிப்பட்டணத்தைப்போ லிருக்கும் வேறே எந்தப்பட்டணமுங் கிடையாது. இன்னம் அந்த ஷீறாஸிப் பட்டணத்தின் ஜாமிஆப்பள்ளியி லொருமாடக்குழி ஹிக்மத்தாய்ச் செய்திருக்கிறார்கள். அந்த மாடக்குழியில் ஒருதுவாரமிருக்கிறது, அந்தத்துவாரத்தில் ஒருசேவல் ஹிக்மத்தால் செய்திருக்கிறது, மேற்படி துவாரத்தில் ஒருகுதிரையும் வைத்திருக்கிறது பாங்குசொல்லுகிற நேரமானவுடனே அந்தச் சேவலானது தன்னுடைய சொ

ண்டால் ஒரு உருண்டைக் குண்டையெடுத்து அந்தக்குதிரையின் வாயில் போடுகிறது, உடனே யந்தக்குதிரையானது ஒரு சப்தமிடுகிறது. அதைக் கொண்டு வக்த்தறிந்து பாங்குசொல்லப்படுகிறது. அப்பால் ஜமாஅத்துத் தொழுகைக்காக நிற்பதற்கு நேரமானபோது அந்தச் சேவலானது முன்போல் மூன்றுதடவை அந்தக் குண்டையந்தக் குதிரையின் வாயிற்போடுகிறது அந்த்வுடனே யந்தக் குதிரை மூன்றுசப்தமிடுகிறது அதைக் கொண்டு எல்லா ஜனங்களும் தொழுகைக்கு நிற்பதை யறிந்துக்கொள்கிறார்கள். இவ்வித்மாகவே தொழுகைக்காக ஐந்துவக்த்துக்கும் அந்தச் சேவலப்படியே செய்கிறது நான் தெரிசித்தேன்

௪௨-வது, அஜ்ருப்பட்டணத்தின் காட்சி.

நான் அஜ்ருப்பட்டணத்திற்குப் போனேன் அந்தவூர் சனங்களெல்லாம் பதினாறுகாதத்திற் கப்பாலிருந்து பாங்குச்சப்தங் கேட்கிறார்கள். ஆனாலவ்விதங் கேட்கிறார்களென்பதில் ஒரு ஆச்சரியமில்லை ஏனெனில் அவ்வளவு தூரத்திலிருக்கிற என்னுடைய அடியார்களுக்குப் பாங்குசப்தத்தை யவர்களுடைய காதிற்போட்டுவிடுங்களென்று அல்லாஹுத் தஆலா மலாயிக்கத்துகளுக் குத்தரவுசெய்கிறான். ஏனென்றால் அந்தவிடத்தில் எல்லா அவுலியாக்களுக்குந் தலைமாட்டில் சருவ அவுலியாக்களுக்கும், மஷாயிகு களுக்கும், குதுபுகளுக்கும், உலகத்தா ரனைவர்களுக்கும் நாயகமாகிய செய்யிது மீறான் முஹ்யித்தீன் சுல்த்தான் ஷாஹ் அப்துல்க்காதிறுக்கீலானீ றஹ்மத்துல்லாஹி அலைஹி யவர்கள் நித்திரை செய்கிறார்களே யாங்கயால்.

௪௩-வது, கிற்மான் பட்டணத்தின் காட்சி

கிற்மான் பட்டணமாகிறது திரையில் மறைந்துபோயிருக்கிறது. அவ்வித மறைந்து நானூறுவருட மாகிவிட்டது அந்தப் பட்டணம் புதன்கிழமை யன்று வெளியாகிறது அதை அவ்விடத்திலுள்ள ஜனங்கள் வியாறத்துச் செய்கிறார்கள். அந்த வியாறத்திற்காக ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் ஆயிரம் பெட்டிப்பணம் செலவாகிறது புதன்கிழமை யிரவுமுழுவதும் பெரியலாந்தல்க ளிருப்

தும், பெரிய குத்துவிளக்குக ளிருபதும் பிரகாசிக்கின்றன. ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் இரவும், பகலும் ஹாபிஜுகள் கலாமுல்லாவென்ற குறுஆனை யோதுகிறார்கள். அந்தப்பட்டணத்தின் கோட்டையி னருகில் ஒரு ஊறணியிருக்கிறது அதிலிருந்து எல்லாஜனங்களும் தண்ணீ ரெடுத்துக்கொண்டு போகிறார்கள். இன்னம் அதில் உலூச்செய்கிறார்கள் இப்படிப்பட்ட பட்டணத்தில் ஒரு கிழமையன்று காஜாமுன் இம் றஹிமஹு ல்லா அவர்க ளந்த வூறணிக்குப் போனார்கள் தங்கள் கையிலிருந்த பணப்பையை யந்தவூறணிக் கரையில் வைத்துவிட்டு அந்த வூறணியில் உலூச்செய்துவிட்டுத் தாங்கள் வைத்த பணப்பையை யெடுக்க ஞாபகமில்லாமல் வந்து விட்டார்கள். அதுமுத லந்தவூறணிக்குப் போகிறவர்க ளெல்லாரும் அந்தவிடத்தில் பெரிய ஒரு பாம்பைப் படுத்திருக்கக் காண்பார்கள் அந்தப் பாம்பின் பயங்கரத்தா லதுமுத லந்த வூறணிக் கொருவரும் போகாமல் நின்றுவிட்டது இதனால் சனங்கள் அந்த வூறணியின் கதவைபடைத்து ஒருவரும் போகாதபடி செய்துவிட்டார்கள். அப்பால் மூன்றுவருஷத்திற்குப் பிறகு மேற்படி காஜாமுன் இம் றஹ்மஹு ல்லா அவர்க ளந்தவிடத்திற்கு வந்தார்கள். அந்த வூறணியின் கதவை யடைத்திருப்பதைக் கண்டு ஏன் வூறணியின்கதவை யடைத்தீர்க ளென்று ஜனங்களிடத்தில் கேட்டார்கள். அதற் கவர்கள் அந்த வூறணியி லொருபெரிய பாம்புவந்துபடுத்திருக்கிறது ஆகையா லதின்கதவை யடைத்திருக்கிறோமென்று ஜனங்கள் சொன்னார்கள். அப்போது காஜாமுன் இம் றஹிமஹு ல்லா அவர்கள் ஜனங்களைப்பார்த்து ஓய் ஜனங்களே அது பாம்பல்ல, அதான தென்னுடைய பணப்பை, ஆகையால் கதவைத்திறங்களென்று சொன்னார்கள். அதுபோல் கதவைத் திறக்கப்பட்டது உடனே காஜாமுன் இமவர்கள் தங்களுடைய பணப்பையைக் கையிலெடுத்துக் கொண்டு அந்த வூறணியைப் பார்த்து ஓ வூறணியே யுனக்கிந்தப் பட்டணத்தின் பாத்ஷாவுடைய கருமத்து வந்ததா நீயென்னுடைய பணத்தைப் பாதுகாத்துக்கொண் டிருந்தாயென்று கேட்டார்கள். அதற்கு அந்த வூறணியானது ஆம் நாயகமே தாங்கள் பணப்பையை வைத்துவிட்டுப்போய் மூன்றுவருஷமாய்விட்டது நானிதுவரையிலும் அதைக் காத்துக்கொண் டிருந்தேனென்று சொல்லினது நான் ஸியாறத்துச் செய்தேன்.

௬௪-வது, தப்ரேஸ்ப் பட்டணத்தின் காட்சி.

நான் தப்ரேஸ்ப்பட்டணத்திற்குப் போனேன் அவ்வூர் ஜனங்கள் இருபதுகாதத் தூரத்தி லிருந்து பாங்குச் சப்தத்தைக் கேட்கிறார்கள் அந்தவூர்ப்பள்ளிகளில் இமாமானவர்களெல்லாம் தொழுகையாளிகளின் வரவை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். அந்த அந்த பள்ளிகளிலும் அந்த அந்தப்பள்ளிகளின் மிஹ்றாபுகளிலும் ஆலீம்கள் உட்கார்ந்து ஜனங்களுக்கு ஹதீது நவீஹத்துகளைச் சொல்லுகிறார்கள். அவ்விடத்து ஜனங்களோ உலக காரியாதிகளில் நற் சுபாவமுடையவர்கள் இன்னம் அந்தப்பட்டணத்தில் எண்பதினாயிரம் ஞானிகளும், ஹாபிஸுகளு மிருக்கிறார்கள் மிகவும் மகிமைதங்கிய பட்டணமா யிருக்கிறது அதின் பறக்கத்தால்தான் சூன்யா நிலையாக யிருக்கிறது அந்தப் பட்டணத்தைப் பக்கீராகிய நான் ஸியாறத்துச் செய்தேன்.

௬௫-வது, இஸ்க்கந்தரியாப் பட்டணத்தின் காட்சி.

நான் இஸ்க்கந்தரியாப் பட்டணத்திற்குப்போனேன் அந்தப் பட்டணமானது இஸ்க்கந்தர் பாத்ஷா அவர்கள் பெயரா லுண்டானது இஸ்க்கந்தர் பாத்ஷாதான் அதைக் கட்டினார்கள் அந்தப்பட்டணத்தி னருகில் ஒரு சமுத்திரமிருக்கிறது அதில் இஸ்க்கந்தர் பாத்ஷா ஒரு மனாறாவைக் கட்டியிருக்கிறார்கள். அந்த மனாறாவில் உலகங்களைக் காட்டிய ஒரு கண்ணாடியைவைத்துப் பலமாய்ப் பதித்துக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கண்ணாடி யெப்படிப்பட்டதென்றால் நாலாபக்கமுமாக ஒருபக்கத்திற்கு நூற்றி முப்பதுகாதம் வரையிலும் அந்தக்கண்ணாடியி னொளிவு பிரகாசிக்கிறது நான் பார்த்தேன்.

௬௬-வது, மக்த்தஃ இஸ்க்கந்தர்ப் பட்டணத்தின் காட்சி.

மக்த்தஃ இஸ்க்கந்தரென்று ஒருபட்டணத்தின் பெயராயிருக்கும், அது, தாறாப்பாத்ஷாவால்க் கட்டப்பட்டது அந்தப்பட்டணத்தை தாறாப்பாத்ஷா வானவர், இஸ்க்கந்தர் பாத்ஷா அவர்களுக்குக் கொடையாகக் கொடுத்துவிட்டார் அந்தப்பட்டணம் இஸ்க்கந்தர் பாத்ஷாவுடைய தேசமாயிருந்தது. இப்போது மிஸ்று

பாத்ஷாவுடைய தேசமாயிருக்கிறது, முன்னே ஒருகாலத்தில் பரங்கிகளுடைய பட்டாளங்கள் அந்தப் பட்டணத்திற்குப்போ யிருந்தது. அந்தப் பட்டாளங்கள் மிஸ்று பாத்ஷாவிடத்தி லிருந்து அந்தப்பட்டணத்தையும் ஜெயித்து அதிலுள்ள அழகான பனிரண்டாயிரம் பெண்களையும் சிறைபிடித்துக் கொண்டுபோய் விட்டார்கள். இந்தச் சங்கதிகளை மிஸ்று பாத்ஷா கேள்விப்பட்டுக் காஹிருப்பட்டணத்தி லிருந்து புறப்பட்டுப் பரங்கிகளுடன் யுத்தம்செய்வதற்கு கப்பல் தயாறுசெய்துக் கொள்வதற்காக இஸ்க்கந்தரியாப் பட்டணத்திற்கு வந்தார். அப்போது அந்நகரில் பரங்கிகளுடைய மும்மரமதிகமாயிருந்தது அதுவுந்தவிர மிஸ்று பாத்ஷாவுக்குக் கப்பலுமில்லை, யுத்தஞ் செய்வதற்குச் சமயமு மில்லாமலிருந்தது ஆகையால் மிஸ்றுபாத்ஷாவானவர் திரும்பிவந்து தர்வேஷ்டிகளுடையசமுகத்தில் பிரார்த்தனைசெய்தார் அப்போதந்த தர்வேஷுகள் துஆச்செய்தார்கள். அவர்களுடைய துஆப் பறக்கத்தால் மகா அகோரமாயும், மும்மரமாயும், எதிர்காற்றடித்துப் பரங்கிகளுடைய் புகைக்கப்பல்களை குல்ஸும் என்கிற சமுத்திரத்தி லிழுத்துக்கொண்டு போய்விட்டது பிறகு பரங்கிகளில் ஒருவராவது மக்த்தஃ இஸ்க்கந்தரியாப் பட்டணத்தை நோக்க வில்லை இந்தப் பக்கீறும்போய் ஸியாறத்துச் செய்தேன் அந்த தர்வேஷுகளுட னிருந்து ஹக்த்தஆலாவை திக்றுஞ் செய்தேன் ஹக்த்தஆலாவை திக்றுச் செய்ததனுல் எதிர்காற்று எப்படி அடித்த தென்றல் அந்தப் பரங்கிகளுடைய கப்பல்களை யிந்தக் காற்றுனது பதினைந்துநாள் தூரத்திற்கப்பால் கொண்டுபோய்ப் போட்டுவிட்டது ஆகையால் அந்தப்பரங்கிகள் இந்த மக்த்தஃ இஸ்க்கந்தரியாப் பட்டணத்தில்வரச் சக்தியற்றவர்களாய்ப் போய்விட்டார்கள் அப்படியிருக்க குல்ஸும் சமுத்திரத்தி லவர்களுக்கு அமானமுண்டாச்சுது அப்பால் பரங்கிஜாதியார்கள் அந்தச் சமுத்திரத்தில்வந்து வியாபாரிகளுடைய கப்பல்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போய்க்கொண் டிருந்தார்கள் பிறகு தர்வேஷுகளுக்கு அந்த வியாபாரிகளிடமிருந்து அனேகவிதமான காணிக்கைகள் வந்தது. நான்பார்த்தேன்.

௬௭-வது, ஸாவாப் பட்டணத்தின்காட்சி.

ஸாவாப் பட்டணத்திலொரு பாத்ஷா இருந்தார் அவருடைய சமையலறையில் அறுபதுகூட்டத்தாருக்கும் சாதம் சமைத்துக் கொ

ண்டிருந்தார்கள். எல்லாஜனங்களுக்கும் சாப்பாடு கொடுப்பார்கள். இரவும், பகலும் சாதஞ் சமைக்கவும் சாப்பாடு பரிமாறவுமாக அறுபது பேர்கள் வேலையா யிருந்தார்கள். அந்தச் சமயல்ச் சத்திரத்தில் அன்னதானங்க ளெப்படி நடக்கிற தென்றால் ஒவ்வொரு பெருநாள்க்களிலும் இருநூற்றி அன்பது கிடாய்களும், ஐநூறு மணங்கு அரிசிகளும் சமைக்கப்படுகிறது-இன்னம்பானங்களென்ற ஷறுப்பத்துகள் நூற்றியிருபது குடங்கள் தயாருகிறது. அவ்விடத்தில் வருகிறவர்களுக்கு வஜீபனமுங் கொடுக்கிறார்கள் அந்தக்குடங்களிலிருக்கிற ஷறுப்பத்தையுங் கொடுக்கிறார்கள் அந்தஷறுப்பத்தைக் கொடுக்கிறதற்காக ஆயிரங்கிண்ணங்களைத் தயாருய்வைத்திருக்கிறார்கள். இனி அரை அரை மணங்கு மாவுகளில் ஒவ்வொரு பெரிய ரொட்டிகளாகச் சுட்டுப் பெரியோர்களின் வீடுகளுக்குமகா அலங்காரமாகக் கொடுத்தனுப்புகிறார்கள் மேற்படி ஸாவாப்பட்டணத்தின் பாத்ஷாவுடைய மக்பறுவொன்று கட்டியிருக்கிறது அந்த மக்பறுவுடைய ஷுக்ரியாவுக்காகத் தினந்தோறும் ஐம்பது மணங்கு மாவுகள் தயாறு செய்துவைத்துக் கொண்டு வருகிற ஜனங்களுக்குத் தினந்தோறுந் தருமமாகக் கொடுக்கிறார்கள் அவ்விடத்திலிப்படிப்பட்ட நடப்புகளும் அனேகனேகம் பெரியோர்களு மிருக்கிறார்கள் நான் வியாறத்துச் செய்தேன்.

௬அ-வது, காமூன்பட்டணத்தின் காட்சி.

:*:

காமூன்பட்டணத்தில் ஷெய்கு ஸைனுத்தீன் காமூனியவர்கள் நித்திரை செய்கிறார்கள் அந்த ஷெய்கானவர்கள் நாற்பது வருஷம் வ்ரையிலும் மலைக்குகையி லிருந்தார்கள் அவர்கள் சோறுமுதலிய தீன் யாதொன்றும் தின்னவுமில்லை, தண்ணீர்முதலிய குடிப்புகள் யாதொன்றுங் குடிக்கவுமில்லை எப்போதும் ஹக்த்த ஆலாவுடைய திக்றின்பேரிலேயே யிருந்தார்கள் அல்லாகுத் தஆலாவுடைய விருப்பத்தைத்தவிர வேறே யாதொரு வஸ்த்தையும் விரும்பவேயில்லை அவ்விதமாக நாற்பது வருஷம் சென்றதின்பிறகு யாதொரு வுருத்தோற்றமின்றியே ஓய் ஸைனுத்தீனே யிந்தக் குகையில் ஒருபொக்கிஷமிருக்கிறது நீர் மரணமடைந்ததின் பின்னால் அந்தப் பொக்கிஷத்திலிருந்து உம்முடைய அன்னதானச் சத்திரம் நடக்கும் அந்த அன்னதானத்திற்கு முடிவுமில்லை யென்று அல்லாஹுத் தஆலாவி னுத்தரவுப்படி மலாயிக்கத்துடைய சப்த முண்டாச்சுது.

அப்பால் ஷெய்கு ஸைனுத்தீன் காமூனியவர்கள் வபாத் தடைந்து விட்டார்கள். அவர்கள் வபாத்தாகி நூற்றிநாற்பது வருஷமாகிறது இந்த நூற்றிநாற்பது வருஷங்களும் தினந்தோறும் ஒவ்வொருநாளொன்றுக்கு ஆயிரம் பைகள்நிறையப் பணங்களை அந்தக் குகையிலிருந் தெடுத்துச் செலவுசெய்கிறார்கள். ஒவ்வொரு பக்கீறுகளின் முன்பிலும் உணவுகளை நிறைய நிறையவைத்த கலங்களைக் கொண்டுவந்து வைக்கிறார்கள். எல்லாஜனங்களும் அந்தப் பற்பலவிதமான மதுரங்களும், ருசிகளுமுள்ள உணவுகளை வைக்கப்பட்ட கலங்களடங்கிய பெரிய தட்டுகளைப்பார்த்து மிகவு மாச்சரியப்படுகிறார்கள் பெரியோர்களுடைய வீடுகளுக்கு அவ்விடத்திலுள்ள தபர்றுக்கை யனுப்புகிறார்கள். எல்லார்களும் அதைப் புசித்துக்கொள்கிறார்கள் ஷெய்கு ஸைனுத்தீன் காமூனியவர்கள் வபாத் தடைந்ததுமுத லிதுவரையிலும் அவர்களுடைய அன்னதானச் சத்திரத்தில் சமயலடுப்பின் நெருப் பணைந்திருப்பதில்லை. அவர்களுக்குப் பின்னுள்ள நல்லோர்கள் அவர்களுடைய பட்டத்தி லுட்காருகிறார்கள். அதாவது மேற்படி பொக்கிஷ மிருக்கப்பட்ட குகையி லுட்கார்ந்திருக்கிறார்கள். அதிலிருந்து தங்க நாணயங்களும், வெள்ளி நாணயங்களும் நிறைந்த பைகளை யெடுக்கிறார்கள். தினந்தினமுஞ் செலவுசெய்கிறார்கள். ஷெய்கு ஸைனுத்தீன் காமூனியவர்களுடைய கால்மாட்டில் நூறு அறபிக்குதிரைகள் கட்டியிருக்கிறது பக்கீறாகிய நான் ஸியாறத்துச் செய்தேன்.

சுகூ-வது, பகுத்தாதுப் பட்டணத்தின் காட்சி.

பகுதாதுப் பட்டணத்தில் ஷெய்கு மன்ஸூரில்ஹல்லாஜ் இருந்தார்கள் ஒருநாள் அவர்கள் பஞ்சைத் துப்புரசெய்துக்கொண்டிருக்கும்போது ஒரு பெண்பிள்ளையானவள் தானும் பஞ்சுதுப்புரவு செய்வதற்காக ஷெய் கவர்களிடத்தில் போனாள் அவ்விதம் பஞ்சு துப்புரசெய்துக்கொண் டிருக்கையில் அந்தப் பெண்பிள்ளைக்குத் தன்னையறியாமல் காற்றுப் பறிந்துவிட்டது. அப்போது ஷெய்கு காஜா மன்ஸூறவர்கள் அந்தக் காற்றின் சப்தத்தைக்கேட்டிருந்தும் தங்களுக்குக் கேளாததுபோல் பாவனைசெய்துவிட்டார்கள் அப்பாலந்தப் பெண்பிள்ளை மற்றப் பேச்சுகள் பேசிக்கொள்வதற்காக ஷெய்கு மன்ஸூறவர்களை யனேகந்தடவை கூப்பிட்டாள். அதற்கு

ஷெய்கு அவர்கள் காதுகேளாததுபோல் பாவித்துக்கொண்டு அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து சப்தமிட்டுச் சொல்லு, உரக்கச் சொன்னால்தான் எனக்குக் கேட்குமென்று சொன்னார்கள். அப்போதந்தப் பெண் பிள்ளையானவள் தன்னில் நடந்தவேலை ஷெய்கவர்களுக்குக் கேட்டிருக்கவில்லையென் றெண்ணிச் சந்தோஷமடைந்தாள் காஜா மன்ஸூறவர்க ளிப்படிக் குற்றத்தை மறைத்தது ஹக்த்த ஆலாவுடைய தறுக்காவி லொப்புக்கொள்ளப்பட்ட தாய் விட்டது ஷெய்கு மன்ஸூறவர்கள் இந்தக் குற்றத்தை மறைத்ததால் பெரிய பதவி யடைந்தார்கள். கடைசியாகத் தாங்கள் அனல் ஹக்கென்றுஞ் சொன்னார்கள். அந்த ஷெய்கு அவர்களுடைய விசேடங்க ளெல்லாம் ஜனங்களுக்குந் தெரியும் நான் வியாறத்துச் செய்தேன்.

எO-வது, இமாம் மஹ்தீ றலியல்லாஹு அன்ஹுடைய காட்சி.

பகுதாதி னருகில் ஒரு குகையிருக்கிறது அந்தக் குகையில் இமாம் முஹம்மது மஹ்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களிருக்கிறார்கள். அந்தக் குகையில் ஒரு அரண்மனை செய்யப்பட்டிருக்கிறது. அதில் தங்கமும், மரகதமும், வைடூரியமும், மாணிக்கமும், பவளமும், கோமேதகமும், பதுமராகமும், வயிரமும், நீலமும், முத்துமாகிய இரத்தினங்களைக் கொண்டு பதிக்கப்பட் டிருக்கிறது அந்தச் சிம்மாசனத்தில் மஹ்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இருக்கிறார்கள். தினந்தோறும் மஃரிபுத் தொழுகைக்குப் பிறகு குதிரைகளைச் சேணங்கட்டுகிறார்கள். அதில் இமாம் மஹ்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் பாதங்களில் ஒன்றை யந்தக் குதிரையினங் கபடியில்வைத்தும், மற்றொரு பாதத்தைப் பூமியின் மேல்வைத்தும், ஒரு கையைக் குதிரையின் சேணத்துமேல் வைத்தும், மற்றொருகையில் புறுக்கான் வேதத்தை வைத்தும் ஓதுகிறார்கள். அவ்விதம் ஓதிகத்தம் தமாம்செய்தவுடன். அவர்களுடைய ஊழியத்தில் நிற்கிற மலக்குகள் மஹ்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைநோக்கி நாயகமே யிப்போது வெளியே வாருங்கள் ஏனென்றால் இஸ்லாம் பலப்படுவதற்காகவும், இஸ்லாமுடைய கொடிநிலை நிற்பதற்காகவும், இன்னும் காபிறுகளுடைய தீன் பொய்யாவதற்காகவும், துன்யாவி லிருந்து அநீதிக ளெல்லா மொழிந்துபோவதற்

காகவும், நியாய முண்டாவதற்காகவு மென்று சொல்வார்கள். அப்போது இமாம் மஹதீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய மற்றொரு பாதத்தையும் மற்றொரு அங்கபடியில் வைக்க விரும்புகிறார்கள். உடனே வானத்திலிருந்து ஒரு மலக்குவந்து ஓய் மஹ்தீயே குர்ஆனை யின்னு மொருதடவை ஓதி கத்தம் செய்யுங்கள் உங்களுடைய பிரயாணத்தின்நேரம் கிட்டவருவதற் கென்று சொல்லுகிறார்கள். ஒவ்வொருநாளும் பல தடவையாக இப்படியே நடந்துக்கொண்டிருக்கிறது. இன்னம் மறுதானைகைப்அவர்களுக்கு விதவிதமான கனிவருக்கங்களும், பற்பல விதமாயுள்ள நேர்த்தியான போஜனங்கள் நிறைந்த பாசன்களும் அவ்விடத்தில் ஆஜற்செய்கிறார்கள். பக்கிருகிய நான்போய் ஸிபாறத்துச் செய்தேன்.

எக-வது, மதீனாவி லிருந்து பகுதாதுக்குப் போகிற காட்சி.

மதினாவிலிருந்து பகுதாது வனந்தரம் மூன்றுநாள் பயணமிருக்கிறது அந்தவிடத்தில் காஜா ஸரீயிஸ் ஸிக்த்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும்? நன்மைகளையுடைய காஜா ஹற்ஜான் புஸர்க் கென்பவர்களும் வசித்துக் கொண்டிருந்தார்கள் ஒவ்வொரு வருஷத்திலும்? போஜனம் நிறைந்த முன்னூற்றி யறுபது தட்டங்களையும்? அதற்குத் தகுந்த தண்ணீர்களையும்? ஹக்த்த ஆலாவின் பாதையில் தர்மம் செய்துக் கொண்டு வந்தார்கள்? இன்னம் ஹாஜிகளுக்கும் சாப்பாடு செய்துவைப்பார்கள். இன்னம் மக்கமாநகருக்குப் போகும் பிரயாணத்தால் அலுத்துச் சடைத்தவர்களை ஒட்டகத்தின் மீதேற்றிக் கஃபாவிற் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள். அந்தப் பிரயாணக்காரர்கள் மற்றவர்களிடத்தில் கேளாவிதமாகத் தக்கபடி செலவுக்கு முதலுங் கொடுப்பார்கள். இன்னும் எப்படிப்பட்ட மனுடரும்? எந்தமுஸாபறுகளும்?எந்தப்பெரியோர்களுடையமக்களும் அவர்களிடத்தில் சொன்னால்அவைகளைக்கேட்டங்கீகரித்து அவர்கள்மனம்போ லுதவிசெய்து அவரவர்க்ள் நாடிய இடங்களுக் கனுப்பி விடுவார்கள். இன்னம் ஹஜ்ஜு செய்து திரும்பிவருபவர்களில் ஸவாதாவும், வஸ்திரமு மில்லாதவர்களான சுமார் முப்பதினாயிரம் பேர்களுக்கு மதற் கதிகமானபேர்களுக்கும் போஜனமுதலிய ஸவாதாக்களும்,வஸ்திரங்களுங் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். மிகவும் உபசாரமும், உபகாரமுஞ்செய்வார்கள்.

பகுதாது நகரத்தில்வருகிற முஸாபற் ஜனங்களைப் பகுதாதுப்பள்ளியில் தங்கும்படிசெய்து பத்துநாள் வரையிலும் விருந்துசெய்து பிற்பாடவர்கள் போகும்போது தங்கமும்,வெள்ளியுங் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். சில மானுடர்களுக்கு நூறுபைப் பணமும், இன்னஞ் சிலபேர்களுக்கு அதற் கதிகமாகவுங் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். சில மானுடர்களுக்குத் தங்கள் கையா லெடுத்துக் கொடுப்பார்கள். சில மானுடர்களுக்கு வந்த முஸாபருன் அவர்களையே யெடுத்துக் கொள்ளும்படி சொல்வார்கள். அவர்களுடைய தருமமிவ்விதமாக எப்போதும் நடந்துக்கொண் டிருந்தது இன்னுமவர்கள் காலையில் குதிரையி லேறும்போது நூறுசவரங்களைத் தங்களுடன்கொண்டுபோய்ஒவ்வொருமிஸ்க்கின்களுக்கொவ்வொரு சவரமாகக் கொடுத்து விடுவார்கள். வெள்ளிக்கிழமை யிரவுகள் ஒவ்வொன்றிலும் தங்கள் சமய லறையில் நல்ல போஜனங்களைத் தயாறுசெய்து பெரியோர்கள், சிறியோர்கள் சகலர்களும் மிக்கருசியுடன்புசித்துப் பசிதீரும்படி யேராளமாப்க் கொடுப்பார்கள். அவர்களுடைய தருமம் மிகவும் பெரியதா யிருந்தது பக்கீருகிய நான் வியாறத்துச் செய்தேன்.

—*—

எ௨-வது, டில்லிநகரத்தின் சிறப்பு.

டில்லிநகரத்தில் ஒருகுகையில் ஒருபக்கிறு யிருந்தார் அந்தப் பக்கிறு தம்முடைய ஹிக்மத்தால் ஒரு பெரிய கட்டிடத்தைக்கட்டி அதிலவர் வசித்துக்கொண்டிருந்தார். அவர் ஒவ்வொருநாளும் பத்துமணங்கு ரொட்டிகள் சாப்பிடுவார். அந்தக் குகையில் பெரிய ஒரு மலைப்பாம்புமிருந்தது யாத்திரையான ஜனங்கள் அந்தப் பக்கீரிடத்தில் போனுல் அவரந்தக் குகையுள் மறைந்து போவார். அப்பால் போஜனம் நிறைந்த கலங்க ளடங்கிய ஒரு தட்டத்தை யந்த யாத்திரைக் காரர்களுக்குக் கொண்டுவந்து கொடுத்து அவைகளை யவர்கள புசித்துப் பசியாறும்படிசெய்வார் அந்தயாத்திரைக்காரர்கள் சாப்பிடுவார்கள் ஆனுல் அந்தயாத்திரைக்காரர்கள் அவ்விதஞ் சாப்பிட்டதின் பிறகு இனி யவர்கள் வயதுமுழுவதிலு மவர்களுக்குப் போசனம் சாப்பிடும்படியான ஹாஜத்துண்டாக மாட்டாது, பசியுமுண்டாக மாட்டாது. அந்தப் பக்கீறை நான் வியாறத்துச் செய்தேன்.

இன்னு மந்தப்பட்டணத்தில் காஜாக் குத்புத்தீன் பக்த்துயார்க் காஹிறு அஹ்மதுல்லாஹி அலைஹியவர்கள் நித்திரை செய்கிறார்கள் அவர்கள் மிகவும் பெரியவர்கள் அவர்கள் ஒருநாளொன்றுக்கு நாலுதரம், நாலுவிதமான சுரூபங்களை மாற்றிக்கொள்வார்கள் அதாவது காலையில் குழந்தைகளின் சுரூபமெடுத்து மற்றுங் குழந்தைகளுடன் விளையாடுவார்கள். அப்பால் ஒருச்சாமம் பொழுதேறினதின் பிறகு வாலிபருடைய வடிவும் சுரூபமுமாகி மற்றும் வாலிபர்களுடன் சேர்ந்து கல்விகளைச் சம்பாதிப்பார்கள் பின்பு மத்தியான நேரத்தில் விருத்தாபியமான வடிவெடுத்து மானுடர்களுக்கு நற்போதனையான வுபதேசஞ் செய்வார்கள். பிறகு சாயந்திரமானது முதல் காலைநேரம் வரையிலும் ஹக்த்த ஆலாவுடைய வணக்கத்திற் பராக்கா யிருப்பார்கள். அவர்களுக்கு அல்லாஹுத்த ஆலா இப்பேர்ப்பட்ட மகிமையைக் கொடுத்திருந்தான் நான்போய் ஸியாறத்துச் செய்தேன்.

இன்னும் மேற்படி டில்லிப்பட்டணத்தில் ஷெய்கு நிலாமுத்தீன் றஹ்மத்துல்லாஹி அலைஹியென்றொரு பெரியோர்க ளிருந்தார்கள். அவர்க ளிரவும்பகலு மிராகத்தின்பேரில் பராக்காயிருந்தார்கள். எவ்வேளையு மவர்களுக்குமுன்பில் நானூறிராகக்காரர்கள் பாடிக் கொண்டே யிருப்பார்கள் தாங்களும் பாடிக்கொண்டிருப்பார்கள். அப்படி நடந்துக்கொண்டு வருகையில் ஒருநா ளொருஜாஹிலான பக்கீறு அவர்களுடன் மனஸ்தாபஞ் செய்துக்கொண்டு அவர்களுடைய சபையைவிட்டு வெளியேவந்தான். அப்பா லவனுக்கே யவனுடைய அகக்கண்பிரகாச மாய்விட்டபடியால் பெரிய பெரிய தறஜாக்களையடைந்தான் நான்போய் ஸியாறத்துச்செய்தேன்.

௭௩-வது, அஜ்மீற் பட்டணத்தின் காட்சி.

அஜ்மீற் பட்டணத்தில் காஜா முஈனுத்தீன் றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் நித்திரைசெய்கிறார்கள் அவர்களுடையக் கபறின் கால்மாட்டில் ஒரு மாதளைமர மிருந்தது அதில் ஒவ்வொருநாளும் ஏழு ஏழுபழங்கள் பழுத்துக்கொண்டிருந்தன. அவைகளி லெந்த மனுடனாவது தன்வீட்டிற் குழந்தை யுண்டாகவேணுமென்ற எண்ணத்துடன் ஒருபழத்தைத் தின்றானே யானால் அவனுக்கு ஆண்குழந்தை பிறக்கும்.

இனியொருநாள் ஒரு தர்வேஷானவர், அவர்களுடைய கபறுக்கருகேபோய் நின்றுக்கொண்டு தன்னுடைய கையைநீட்டி அஸ்ஸலாமு அலைக் யாமுஈனுத்தீனென்று சொன்னார், அதற்கவர்கள் தங்களுடையக் கபறிலிருந்து மறைவாக ஒருகையை வெளியேநீட்டிக்கொண்டு அலைக்கு முஸ்ஸலாம் செய்யிதுல் முறுஸ்லீனுடைய குமாரரே யென்று சொன்னார்கள். பின்பந்த தர்வேஷானவர் பறக்கத்துப் பொருந்திய மேற்படி றவுலாவைவிட்டு வெளியில்வந்ததின் பிறகு காஜாமுஈனுத்தீன் நாயகமவர்கள் கபறிலிருந்து வெளியே நீட்டிய கையானது மேற்படிக் கபறுக்குள்ளேபோய் மறைந்துவிட்டது. அப்போ தவ்விடத்தி லுள்ள ஜனங்களெல்லா மந்த தர்வேஷுக்கு வணக்கஞ் செய்கிறவர்களாக ஆய்விட்டார்கள் அந்த தர்வேஷாகிய பக்கீறு நான்தான்.

மேற்படி அஜ்மீற் பட்டணத்தி னருகே யொருமலை யிருக்கிறது அந்தமலையில் அறபிக் குதிரையின் சவாரியராகிய செய்யிது ஹுசைன் றஹ்மத்துல்லாஹி அலைஹி யவர்கள் நித்திரை செய்கிறார்கள். அவர்களுடைய காலத்தி லவர்களுக்கு, றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களால் காபிறுகளுடன் யுத்தஞ் செய்யும் படிக் குத்தரவாச்சுது அந்த முபாறக்கான உத்தரவின் பிரகாரமாய்க் காபிறுகளுடன் யுத்தஞ் செய்வதற்காக வந்திருந்தார்கள் அதுபோல் யுத்தஞ்செய்து காபிறுகளைக்கொன்று ஜெயமடைந்தார்கள் அவர்களால் அவ்விடத்தில் இஸ்லாமுடைய வேரை யூன்றப்பட்டது, அப்பா லவர்களு மவ்விடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள் இன்ன மவ்விடத்திற்குச் சமீபத்தில் ஒரு ஊறணியிலிருந்து தண்ணீ ரோடிக்கொண் டிருக்கிறது. அதுமகா ஆழமாயிருப்பதால் அதினாழத்தினுடைய கணக்குத் தெரியவில்லை, அந்தவூறணிக்கருகி லவர்களுடைய அன்னதானச் சத்திரமொன்று தருமம் நடந்துக்கொண் டிருக்கிறது அவ்விடத்தில்போகிற மானுடர்க ளெல்லாம் அனேகவிதமான ருசிகளையும், இன்பங்களையு மடைகிறார்கள் நான்போய் வியாறத்துச் செய்தேன்.

௭௪-வது, மல்வாப்பட்டணத்தின் காட்சி.

—*—

மல்வாப்பட்டணத்தி லொருமலை யிருக்கிறது, அந்தமலையின் அருகே ஒரு நதியுமிருக்கிறது, அந்தமலையில் ஒருமலைப்பாம்பு மிருக்கிறது அவ்விடத்திற்குப் பசியுள்ள மானுடர்கள்போன லந்தமலை

ப்பாம்பானது மேற்கூறிய நதியிலிருந்து பற்பலவிதமான போஜன ங்களைக் கொண்டுவந்து இந்தப் பசியாளிகளுக்குக் கொடுக்கிறது மேற்படிபசியாளிகளெல்லா மவைகளைப்புசித்துப்பசியாறுகிறார்கள்.

இன்ன மந்தத்தேசத்தி லொரு குகையிருக்கிறது அந்தக்கு கையில் விக்கிரகமுள்ள கோவிலிருக்கிறது அதில் மூந்நூற்றித்தொண்ணூற்றென்பது விக்கிரகங்களை, அதாவது புத்துகளை வெள்ளி தங்க மிவைகளால் செய்யப்பட்டு மகா அலங்காரத்துடன் வைக்கப்பட்டிருக்கிறது அவ்விடத்தில் இஸ்லாமான் யாத்திரைக்காரர் போய் அந்த விக்கிரகங்களின்மேல் துப்பினார்களானால் அட்சணமே துப்பினவர்களுடைய தலையானது சரீரத்திலிருந்து வெட்டப் பட்டுப்போகிறது இவ்விதவழக்கமா யிருக்கையில் ஒரு இஸ்லாமான பிரயாணக்காரன் அவ்விடத்திற்குப் போனான். அந்த விக்கிரகமென்ற புத்துகளின்மேல் துப்பினான் வழக்கப்படிக் கந்த மனுடனுடைய தலை வெட்டுப்படவில்லை அப்போது காபிறுகள் வந்து அந்த மனுடனைப்பிடித்து அந்தப் புத்துகளுக் கெல்லாம் பெரிதாயிருக்கிற ஒரு புத்துக்கு முன்பிற் கொண்டுபோய் விட்டுக்கொண்டு காபிறுகள் அந்தப் புத்தைப்பார்த்து சுவாமியே யிந்தமனுடனைக் கொன்றுவிடுமென்று சொன்னார்கள். உடனே அந்த யாத்திரைக்காரனான துப்பின மனுடன் அஸ்மாவுல் ஹுஸ்னாவில்நின்று மொரு இஸ்மையெடுத்தோதி அந்தப் புத்தின்பேரில் ஊதினான் அவ்விதம் ஊதினமாத்திரமே யந்தப்புத்தானது தலையைக் கீழேதணித்து அடித்துவிழுந்து முறிந்துபோய்விட்டது. அப்போ தெல்லாக் காபிறுகளும் ஏகோபித்து அந்த மனுடனைச் சிரசாக்கினை செய்யத் தீர்மானித்தார்கள். அப்பா லதுபோ லவருடைய சிரசை யறுப்பதற்காக எந்தக்காபிறு அந்த மனுடன்பேரில் கையை நீட்டுவானோ அந்தக் காபிறுகை யுதவாமல் முடங்கிப்போகிறது இவ்விதமாகச் சிலகாபிறுகளுடைய செபலாய்விட்டபோது காபிறுகளெல்லா மந்தமனுடனைப்பார்த்து நீங்கள் யார் உண்மையைச் சொல்லுங்களென்று கேட்டார்கள் அதற்கந்த மனுடன் நான் முஃமினாக இருக்கிறேனென்று சொன்னான் உடனே யெல்லாக் காபிறுகளும் முஃமினாக யிருக்கிறதி லிவ்வளவு மகிமையிருக்கிறதே ஆகையால் நாமனைவர்களும் ஈமான்கொண்டு முஃமினாகி விடுகிறதே நன்மையென யூகித்தவர்களடங்கலும் அதாவது மூவாயிரத் தெழுநூறுகாபிறுகளும் ஈமான் கொண்டு முஃமினாகி விட்டார்கள் அதாவது முஹம்மதியதீனில் பிரவேசமானார்கள் அந்த யாத்திரைக்காரனாகிய பக்கிறு நான்தான்.

௭௫-வது, கூதின்மாகூதின் என்ற பட்டணத்தின் காட்சி.

கூதின்மா கூதினென்றுந் தேசத்தி லொரு சமுத்திரமிருக்கிற து அந்தச்சமுத்திரத்தின்கரை ஐம்பதுகாதமிருக்கிறது அதில் பெரிய ஒரு மலைப்பாம்பிருக்கிறது அதின்வாயிலிருந் தெழும்புகிற நெருப்பானது பனிரண்டுகாதம் வரையிலும் போகிறது அந்த நெருப்பின் சுவாலையானது மிகவும் பிரகாசமாய்த் தெரிகிறது இன்ன மந்தப்பாம்புக்கு ஒன்பது தலைகளும் ஒவ்வொரு தலையொன்றுக் கொன்பது கண்களு மிருக்கிறது இன்னு மதற் கொவ்வொரு தலையொன்றுக்கு ஒன்பதுவாய்களும் ஒவ்வொரு வாயொன்றுக்கு எண்பது நாவுகளும், பனிரண்டாயிரம் பற்களுமிருக்கிறது அந்தப் பாம்பிருக்கிற விடத்திலிருந்து பனிரண்டுகாத தூரத்திற் கப்பால் போகிற எந்த மனுடனும் அந்தப் பாம்பின்வாயி லகப்பட்டுக் கொள்கிறான் இன்ன மந்தப்பாம்பைச் சுற்றி நூறு நூறுகாததூரம் வரையிலு மனுடர்களுடைய சஞ்சாரங் கிடையாது நானந்தப் பாம்பைப்போய்ப் பார்த்தேன்.

௭௬-வது, பூரப்புக்குப் பின்னிருக்கிற தேசத்தின் காட்சி.

பூரப்புக்குப் பின்னால் ஒரு தேசமிருக்கிறது அந்தத் தேசத்தி லொருகோட்டையு மிருக்கிறது அதற்கு நூற்றித்தொண்ணூறு புறுஜென்ற பாகங்க ளிருக்கின்றது இன்ன மக்கோட்டையில் ஆயிரக்கணக்கானநீர்க்குமிழிகளிருக்கின்றன அதில் ஒவ்வொறுபுறுஜுக்கும் அனேக ஆறுகளினுடைய தண்ணீர்கள் பாய்கின்றது அந்தக் கோட்டைக் கெழுபத்தைந்து கதவுகளிருக்கிறது அதின் ஒவ்வொருகதவும் நாற்பது கெஜ வுயரமும் இருபத்தொருகெஜ அகலமுமுள்ளதாயிருக்கிறது அந்தக்கோட்டையில் ஒரு பெண்பிள்ளை யரசுபுரிந்துக்கொண் டிருக்கிறாள் அவள் மிகவும் சாமர்த்தியமா யுத்தஞ்செய்கிற நாற்ப தரசர்களை யுத்தஞ்செய்து ஜெயித்திருக்கிறாள் அவளுடைய சேனைகளடங்கலும் பெண்பிள்ளைகள்தான் இன்ன மவளிடத்தில் சேனையில் ஒரு இலட்சத்தி யெண்பதினாயிரம் பெண்களிருக்கிறார்கள் அவர்க ளொவ்வொரு பெண்களும் மகாவுறுதியான புலிகளைப்போ லிருக்கிறார்கள் எல்லா வொவ்வொருவர்களும்

அந்த அரசுப்பெண்ணுடைய குதிரைக்குப்பின்னு லோடுகிருர்கள், சாராயத்தைக் குடிக்கிருர்கள், பாட்டுமுதலிய இராகங்கள் பாடுகிருர்கள் புருஷர்களை மறைவாக கோஷாவாய் வைத்திருக்கிருர்கள். அவர்கள் எந்த மார்க்கத்தையாவது சேர்ந்தவர்களுமல்ல, அல்லது எந்தமார்க்கத்தையாவது அறிந்தவர்களுமல்ல, யாத்திரைக்காரர்களில் யாராவ தவ்விடத்திற்போனுல் அங்குள்ள படைவீரர்களாகிய பெண்களிவனைப்பிடித்து தங்களுடைய அரசிமுன்புக்குக் கொண்டுபோய் விடுகிருர்கள் அப்போது அந்த யாத்திரைக்காரன் அவ்வரசைச் சந்தோஷப்படுத்தினுல் அவ்வரசி தன்னிடம்வைத்துக்கொள்கிருள் அப்படிக்கில்லையானுல் அவ்விடத்திலுள்ள பிரபுகள் தங்களிடம் வைத்துக்கொள்கிருர்கள் பக்கீருகிய நான்போய்க் கண்காட்சியாய்க் கண்டேன்.

எஎ-வது, மத்யன் பட்டணத்தின் காட்சி.

நான் மத்யன்பட்டணத்திற்குப் போனேன் அது சூரியனுதயமாகிற விடத்தி னருகி லிருக்கிறது. அவ்விடத்தி லிரண்டுமலைக ளிருக்கின்றன அவைக ளிரண்டு மொன்றோ டொன்று சண்டைபோடுகின்றது. அவ் விருமலைகளின் நடுவிற்செல்ல வொருவராலுமுடியாது அந்தமலைகளைச் சுற்றியவைகளைப்போ லைந்துமலைக ளிருக்கிறது அதி லைந்தாவதுமலையின்மேல் ஒரு இராஜனிருக்கிருன் அவன்பெயராகிறது தகலென்று சொல்லப்படுகிறது இன்னமவனுடைய ரிக்காபில் எண்பதினுயிரம் பைல்வான்களோடுகிருர்கள் அவனுடைய பிரஜைகளும், செழிப்பானபூமியும் அதிலதிகமாயிருக்கிறது அதற் கெல்கையில்லை அந்த அரசனுடையவழக்க மென்ன வென்ருல் தினந்தோறும் இரண்டு பால்குடிக் குழந்தைகளை அறுத்துத் தான் சமயலறையுள் வைத்துச் சமைத்துச் சாப்பிடுகிருன் ஒருமனுடன் யாத்திரைசெய்துக் கொண்டு அந்தவிடத்திற்குப்போனுர், அங்குள்ள ஜனங்கள் அவனைப் பிடித்துத் தங்களுடைய அந்தயிராசனிடத்தில் கொண்டுபோனுர்கள் அந்த யிராசன் மேற்படி யாத்திரைக்காரரைக் கொல்லும்படிக் குத்தரவு கொடுத்தான். அந்த வுத்தரவுப்பிரகாரம் ஜனங்களெல்லாம் அந்த மனுடனைச் சிரசாக்கினை செய்வதற்காக வாளால் வெட்டினுர்கள். அந்த வாளான்து வெட்டவில்லை, ஆனுலந்தவாள் துண்டு துண்டாகத் தெறித்துப்போய்விடுகிறது அப்பால் வாளால் வெட்டுகிறதை விட்டுவிட்டு. அந்த யாத்தி

ளையாகிய மனுடன்மீது அம்பைக்கொண் டெய்தார்கள் துப்பாக்கியால்சுட்டார்கள் அதிலும் பலிக்கவில்லை அப்போதந்தக் காபிறுகளெல்லாம் ஏலாத்தன்மையாய் விட்டபடியால் அந்த மனுடனைப் பிடித்துத் தங்க ளரசன்முன்னுக்குக் கொண்டுபோனார்கள் அவ்வரசனோ ஒருமார்க்கமுங் கைக்கொள்ளாதவனா யிருக்கிறான் அப்போதந்தக் காபிறுகளைப் பார்த்து இராஜன் இந்த யாத்திரைக் காரருடைய சங்கதிக ளென்னவென்று கேட்டான் அதற் கந்தக்காபிறுகளவர்விஷயத்தில் நடத்திய சங்கதிகளையும், அவைகள் பலியாமல் போய்விட்ட சங்கதியையும் சொன்னார்கள். உடனே அவ்வரசனுச் சரியமுற்று யாத்திரைக்காரரை நோக்கி நீர்-யார், உமக் கெந்தவூர், நீரெங்கிருந்து வந்திருக்கிறீ ரென்றுகேட்டான். அதற் கந்தமனுடன் நானாகிறது முஃமீன் எனக் கிஸ்லாமான ஜனங்க ளிருக்கிறவூர், நானவ்விடத்தி லிருந்து வந்திருக்கிறே னென்று சொன்னார். அப்போ தந்த இராஜன் அவரைப்பார்த்து இஸ்லாமென்பதென்ன மகமதியமார்க்க மென்பதென்ன வஸ்தென்று கேட்டான் அதற் கவர் உண்மையாகிய நாயனொருவன், அந்த நாயனுடைய றசூலவர்களின் மார்க்கத்தி லுறுதியா யிருப்பது இஸ்லாமாகிய மார்க்கமென்று சொன்னார். அப்போதிராஜ னவரைப்பார்த்து நாயன்யார், நாயனுடைய றசூல் யாரென்று கேட்டான். அதற்கவர் நாயனென்பது உன்னை மண்ணால்படைத்து வுன்னுடைய மண்திரேகத்திலுயிரைக் கொடுத்து இவ்விதம் பேசவும், பார்க்கவு முனக்கு வல்லமையைக் கொடுத்த அல்லாஹுத் தஆலாவாயிருக்கும், இனி றசூலென்பதுமெய், பொய்யின் ஆராய்தலும், அறிவும் கற்பித்து நன்மையானதைச் செய்யவும், தின்மையானதை விட்டுவிடவும் உத்தரவு கொடுத்த நபியா யிருக்குமென்று சொன்னார். உடனே யந்த இராசன் நீர் ஓதுகிறதை யெனக்குங் கற்பியும், நானும் ஓதுகிறேனென்றுகேட்டான் அதற் கவர் கலிமாவை ஓதென்று சொல்லிக் கொடுத்தார் அதுபோ லந்த இராஜருங் கலிமாவை யோதினார் பின்னுமந்த மனுடனிடத்தில் இராஜரானவர் இஸ்லாமாகி யிஸ்லாத்தின் ஹுக்முகளையும், ஈமானுடைய விபரங்களையும், ஷரீஅத்துடைய பயான்களையும் கற்றுக்கொண்டார். இன்னமந்த இராசருடைய படை பௌசுகளும், அந்த வூரிலுள்ள மற்றும் ஆண் பெண்ணான ஜனங்களடங்கலும் இஸ்லாமாகி அந்த யாத்திரைக்காரரான மனுடனிடத்தில் முரீதாகிவிட்டார்கள் அந்த யாத்திரைக் காரராகிய மனுடனென்பது இந்த பக்கீரான நான்தான்.

எஅ-வது, நூஹு அலைஹிஸ்ஸலாமுடைய வம்மிசத்தின் காட்சி.

அதே பக்கத்திலெத்தனையோ மலைகளிருக்கின்றன அவ்விடத்தில் போகிறவர்கள் திரும்பிவருகிறதே யில்லை. அந்த மலைகளுக்குப் பிற்பக்கத்தில் ஓடுகிற வொருமணலாறு யிருக்கிறது அது தண்ணீரைப்போலோடிக்கொண் டிருக்கிறது. அலைகளும் பெரிதாயெழும்பிவருகிறது, அந்த மணலாற்றின் அகலமாகிறது நாற்பதுகாததூரமிருக்கிறது அதினக்கரையில் வினோத வினோதமாகிய விபரீதங்களெல்லா மிருக்கிறது அந்த மணலாற்றிற்கு ஒரு யாத்திரைக்காரமனுடர்போனார். அந்தமனுடரெப்படியாவது அந்த மணலாற்றைக்கடந்து போகவேணு மென்றும், ஹக்த்த ஆலாவுடைய வல்லமையைப்பார்க்கவேணுமென்று மெண்ணினவராக அதேகவலையி லிருந்தார். அப்போது ஆகாயத்தில் நின்றும் யாதொரு தோற்றரவின்றிகையிலிருந்து ஒய் என்னுடைய முலாக்காத்துக்கு ஆஷிக்கானவரே நீரிங்கேயிருநது திரும்பிச் செல்லும் இதற் கப்புறத்தில் நம்முடைய இரகசியங்க ளிருக்கின்றன அதை யொருவருந் தெரியார்கள், அது வொருவருக்குந் தெரியவுமாட்டாது என்று ஒரு சப்தம் வந்தது அப்போ தந்த யாத்திரைக்காரர் அல்லாஹுத் தஆலாவிடத்தில் முனாஜாத்துச் செய்தார். அதாவது, எல்லாத் தேசங்களுக்கு மரசனாகிய பாத்ஷாவே உன்னுடைய ஹிக்மத்தையும், உன்னுடைய குத்ரத்தையும் பார்க்க விரும்புகிறேனென் றிவ்விதமான முனாஜாத்து செய்துக்கொண் டிருக்கும்போது அந்த மணலாற்றில் நின்றும் யானையம்பாரியைபபோல ஒரு பலகையைப்போன்ற ஒரு கல்லானது வெளிப்பட்டது அப்போதந்த யாத்திரையான மனுடர் அதில் தன்னுடைய காலைவைக்க விரும்பினார். அப்போ தந்தக் கல்லில் வெள்ளைத்தாடியுள்ள ஒருமனிதனைக்காணப்பட்டது அந்தவெள்ளைத்தாடியுள்ள மனுட னிந்த யாத்திரைக் காரரைப்பார்த்து ஒய் தர்வேஷே யும்முடைய தலையை யென்னுடைய தலையின்பேரில்வையும், அப்படிக்கல்லா தந்தக் கல்லின்மேல் வைப்பீராகி லிந்த ஆற்றில் மூழ்கிப்போவீ ரென்று சொன்னான் அச்சொல்லை யாத்திரைக்காரரானமனுடர் யூகித்து இவனாகிறவன் இபுலீஸ் லயீனத்துல்லாவென் றறிந்து அவனுடையசொல்லை ஒப்புக்கொள்ளாமல் தன்னுடையுதலையை மேற்படிக் கல்லின்மேல் வைத்துவிட்டார். அந்தக் கல்லானது ஒரு வத்தையைப்போலோடி யந்த மணலாற்ன்றக் கடந்து

85835

ஒரு தலத்திற்போய்ச் சேர்ந்தார். அந்தத்தலத்தில் புலிகளும் ஓநாய்களும், கடுவாய்களும், பாம்புகளும், தேள்களும் கரடிகளும், சிங்கங்களும், குரங்குகளும், இன்ன மற்றுமுள்ள காட்டுமிருகங்களும் தரையில் செலலக்கூடிய மீன்களுமிருந்தன. அவைகளில் ஒவ்வொரு மிருகங்களுக்கும் காலும், கையும், தலையும், முகமும், மனுடருடைய அவயவங்களைப்போலிருக்கிறது இவைகள்மீபாக மீதித்திரேகமெல்லா மிருகத்துடைய திரேகமா யிருக்கிறது. அவைகளையெல்லாம் பார்த்துக்கொண் டந்த யாத்திரைக்காரர் அதைவிட்டும் ஸலாமத்தாகிக் கடந் தின்னொரு தலத்தில்போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தி லொருமனுடனைக் கண்டார். அம்மனுடனுக்கு ஐந்து தலைகளும், பத்துக்கால்களும், பத்துக்கைகளுமிருக்கிறது. அந்தப் பத்துக் கைகளிலும் பத்துவிதமான தொழில்களுக் குரிய ஆயுதங்களை வைத்திருக்கிறான். அதில் முதலாவதுகையில் நாவிதனுடைய ஆயுதமும், இரண்டாவதுகையில் தச்சனுடைய ஆயுதமும், மூன்றுவதுகையில் கொல்லனுடைய ஆயுதமும், நான்காவதுகையில் கொற்றனுடைய ஆயுதமும், ஐந்தாவதுகையில் போர்வீரருடைய ஆயுதமும், ஆறுவதுகையில் யேழுகவருள்ள கொடியும், எட்டாவதுகையில் முள்ளுகளுள்ள குதிரைச்சவுக்கும், ஒன்பதாவதுகையில் இராகம் படிப்பவர்களுடைய வீணைமுதலிய சங்கீதச்சாமான்களும், பத்தாவதுகையில் சிவப்புக்கற்களும் வைடூரிய முதலிய இரத்தினதிகளும் வைத்துக்கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட மனுடன் இந்த யாத்திரைக்காரரைக்கண்டு சந்தோஷப்பட்டுக்கொண்டு சலாம்சொன்னான். பிறகு கண்ணுடியைக்கொண்டுவந்துமுன்னேவைத்துவிட்டு அந்தயாத்திரைக் காரருக்குச் சௌரம் செய்தான். அப்பால்யாத்திரைக்காரர் முன்புக்கந்த நாவிதனுயுதமுற்றகையைக்கட்டிக்கொண்டு மகா அதபுடன்வாய் பொற்றிநின்றான். அப்போதந்த யாத்திரைக்காரர் அவனைப் பார்த்து நீ-யென்ன கேட்கிறு யென்று கேட்டார். அதற்கவன் நான் பணக்காரனுக வேணு மென்று விரும்புகிறேனென்று சொன்னான். அப்போதந்த யாத்திரைக்காரர் அவனை நோக்கி நீ-யிந்த சூறத்து இகுலாஸை மூன்று தடவையோதியந்த மரத்தின் பேரிலூது அப்பா லந்தமரத்தை யுதிர்ப்பு- அதிலிருந்து திர்கிறதைக் கொண்டு போவென்று சொன்னார் அம்மனுடனப்படியே செய்தான் உடனே அந்த மரத்தி லிருந்து சிவப்புக் கற்களும், பற்பல விதமான இரத்தினங்களு முதிர்ந்தது அவைகளை அம்மனுடன் தன்னால்ச் சுமக்கக் கூடிய மட்டிலு மள்ளிச் சுமந்துக் கொண்

டு தன்னுடைய வீட்டுக்குப் போனான் அப்படிப் போவதற் கிடை யில் அந்தமனுடனை நோக்கி நீ-யெவ்வளவுகாலமாக இந்த விடத்தி லிருக்கிறாய் நீ-யாரென்று கேட்டார். அதற்கவன் நூஹு அலைஹி ஸ்ஸலா மவர்களுடைய கப்பல்த் தூபானிலகப்பட்டலக் கழிந்துக் கொண்டிருக்கிறகாலத்தில் தறையைக் கண்டு தங்கினேன். அல்லா ஹுத்தஆலா என்னையிப்படிப்பட்ட ரூபமாக்கிவிட்டான். நானிவ் விடத்தில்க் கிழித்துத்தின்கிற மிருகங்களுக்கும், கடித்துத்தின்கிற மிருகங்களுக்கும், ஓடுகிற மிருகங்களுக்கும்? எல்லாத்துஷ்ட மிருக ங்களுக்கு மரசனா யிருக்கிறேன். நானிந்த விடத்தி லில்லாதிருந் தால்மேற்படி மிருகங்களெல்லாம் நபிநாயகம் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துகளுக்குக் கஷ்ட் டத்தையும், நஷ்ட்டத்தையுங்கொடுக்கிறதாக யிருக்கும். இன்னம் நான் இமாம் மஹ்தீ அலைஹிஸ்ஸலா மவர்கள் ஆகிறுசமானில்ப் பிறந்தவுடனே நான்மரணமடைவேன் மேற்படிமிருகங்களெல்லாம் இமாம் முஹம்மது மஹ்தீ யவர்களுடைய வுத்தரவுக்கு ளடங்கி யிருக்கு மென்று சொன்னான்.

எகூ-வது; பரிகளைப் போலுள்ள பெண்களைக் கண்ட காட்சி.

அப்பாலந்த யாத்திரைக் காரரந்த விடத்தை விட்டுங் கடந்து பற்பலவிதமான தோட்டங்களால் நிறம்பிய விடத்திற்குப் போனார் அவைகளில் நின்றுமொருதோட்டமிருந்தது அதின்நீளம் முந்நூறு காதத்ூரமும்; நூறுகாததூரம் அகலமுமிருந்தது. அதில் பரீயின் ரூபமுள்ள பெண்களும்; ஹுறுகளின் ஸிபத்தையுள்ள பெண்களு மிருப்பதுடனே நல்லவஸ்திரங்களும்? தடயங்களும்; பற்பலவித மான நகைகளையுமணிந்து அவர்களுடைய முகமான தலங்கரிக்கப் பட்டிருந்தது. இன்னமந்தத்தோட்டத்தில் மகா அழகுபொருந்திய ஒரு அரண்மனையுமிருக்கிறது. அந்தப் பெண்களுக்குச் சவாரிசெய் யவேண்டிய அவசரம் ஏற்பட்டால் நாய்களின் பேரிலும் பன்றிகளி ன்பேரிலு மேறிச் சவாரி செய்கிறார்கள். யாத்திரைக்காரர் அந்தப் பெண்களில் நின்றுமொரு பெண்ணிடத்தில் நீங்கள் யாரென்று கே ட்டார் அதற்கவள் இந்தச் சிம்மாசனத்திலிருக்கிற இந்தப் பெண் ணனவள் துன்யாவாயிருக்கும்; நாங்களெல்லா மவளுடைய சேனை

யாகிய பெண்கள்; இந்த நாய்களும் பன்றிகளுமாகிறது அவளுடையத்தாலீப் அதாவது துன்யாவைத் தேடுகிறவர்க ளென்று சொன்னாள்.

அ0-வது, தஜ்ஜாலைக் கண்டகாட்சி.

அதைக் கேட்டுக் கொண்டு யாத்திரைக் காரரந்தத்தலத்தையுங் கடந்து பெரிய வொருமர மிருக்கிற விடத்திற்குப்போய்ச் சேர்ந்தார் அந்த மரத்தின் நிழலாகிறது நூறுகாததூரம் வரையிலும் பரவியிருக்கிறது அந்த மரத்தின் கீழ்பெரிய பயங்கரத்தை யுண்டு பண்ணும்படியான ஒருமனுடன் விலங்குகளால்த் தளையப்பட்டும், கயறுகளால்க்கட்டப்பட்டுங்கிடக்கிறான். அந்தமனுடன் இந்தயாத்திரைக்காரறைப் பார்த்து நீயெவ்விடமிருந்து வந்திருக்கிறாய்; நீயாருடைய வும்மத்தென்றுகேட்டான் அதற்கவர் நான்மதீனாநகரத்திலிருந்து வீந்திருக்கிறேன் நானாகிறவன். முஹம்மது முஸ்த்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ல்ல மவர்களுடைய வும்மத்தைச் சேர்ந்தவனாயிருக்கிறே னென்றுசொன்னார். அப்போதந்தத் துஷ்ட்ட மனுடன் நபிநாயகமவர்கள் இப்போதுலகத்தில் ஹயாத்துட னிருக்கிறார்களா அல்லது உபாத்தாய் விட்டார்களா என்று கேட்டான் அதற்கவர் நபிநாயகமவர்கள் வபாத்தாய்விட்டார்களென்றுசொன்னார். பின்பு மந்தமனுடன் நபிநாயகத்தின் உம்மத்துகளுடைபஹாலசளெப்படி யிருக்கிறது அவர்கள் சாராயங் குடிக்கிறார்களா ஹறும் செய்கிறார்களா? என்று கேட்டான். அதற்கு யாத்திரைக் காரர் சிலமனுடர்கள் துரு அதிஷ்ட்ட முடையவர்க ளாய்க் கெட்ட நடக்கையி லிருக்கிறார்கள்; அனேகம் பேர்கள் நல்லவர்களா யிருக்கிறார்களென்றுசொன்னார். இப்படிச் சொன்ன சொல்லைக் கேட்டவுடனந்தத் துஷ்ட்டனாகிறவன் ஒரு சப்த்தம் போட்டுக்கொண்டு தன்னைத் தளைந்திருக்கப்பட்ட விலங்குகள் முதலியவைகளை யெல்லாம் மூறித் தெறிந்து விட்டான். அப்போது நாளொன்றுக்கு மூன்று சமுத்திரங்களின் தண்ணீர்களைக் குடித்து அச் சமுத்திரங்களை வற்ற வைக்கும்படியானதாயும், அதுபோல் எழுபது தோட்டங்களிலுள்ள சிறிய, பெரிய மரங்க ளடங்கலையுந் தின்றுவிடும்படியானதாயு முள்ள மகா பாரதூரமான ஒரு கழுதை வந்தது. அச்சமயத்தில் வானலோகத்தி லிருந்து ஒரு மலாயிக்கத் திறங்கிவந்து அந்தத் துஷ்ட்மனுடனை அக்கினி யீட்டிகளால் அடித்துச் சங்கி

லிகளா லவனை யிறுக்கிக் கட்டி விலங்குகளால் தளைந்துவிட்டு இந் தயாத்திரைக்காரரை நோக்கிக் கோபித்தார். அப்போ திந்த யாத் திரைக்காரர் மலாயிக்கத் தவர்களைப் பார்த்து நானென்ன செய்தே னென்று சொல்லி யாற்றுதல் செய்துக் கொண்டு நீங்கள், உண்மை யைக் சொல்லுங்கள் நீங்கள் யார், இந்த வலிமையுள்ள மனுடன் யார் இந்தக் கழுதையான தென்ன விபரியுங்க ளென்று கேட்டார் அதற்கவர் நானுகிறது மலக்கு, அந்த வலிமையுள்ள மனுடனுகிற வன் தஜ்ஜா லில்லயீன், இந்தக் கழுதையானது அவனுடைய வாக னமென்று சொன்னார்.

அக-வது, மூன்று மனுடர்களுடைய காட்சி.

அப்பா லிந்த யாத்திரைக்காரர் அவ்விடத்தை விட்டுங்கடந்து காலும் கையும் தலையு மில்லாமல் சில மாமிசத் துண்டங்களைப்போ லும், விக்கிரகங்களைப்போலு முள்ள மூன்று மனுடர்க ளிருக்கிற விடத்திற்குப் போனார். இவரைக் கண்டவுட னவர்கள் நீர் யார் நீ ரெதற்காக இங்கே வந்தீ ரென்று மகா பார தூரமான சப்தத்து டன் கேட்டார்கள். அதற் கிவர் நானுகிறது யாத்திரைக்காரனாயிரு க்கிறே னென்று சொல்லிவிட்டு நீங்கள் யார் உங்களுடைய வீடுக ளெங்கே யிருக்கிற தென்று கேட்டார். அப்போ தவர்கள் நாங்க ளாகிறது கன்னுசுகளா யிருக்கும் எங்கள் வீடுகளாகிறது காடுகள் தானென்றும், எந்த மனுடனுவது வழிதப்பிவந்தால் நாங்க ளவனு க்கு வழிகாட்டுவோ மென்றும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வசல்ல மவர்களுடைய வும்மத்துகளை நாங்கள் பாதுகாக்கிறோமெ ன்றுஞ் சொன்னார்கள் அந்த யாத்திரைக்கார மனுடனென்றது பக் கீருகிய நான்தான் எனது கண்களாற் கண்காட்சி செய்தேன்.

அஉ-வது, இஸ்க்கந்தர் அலைஹிஸ்ஸலாமுடைய மதிலின் காட்சி.

அதின் பிறகு இஸ்க்கந்தர் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம வர்களுடைய மதிலுக்குப் போவதற்காக முக நேர்க்கினேன் அந்த மதிலுக் கப்புறம் ஒருக் கவுமுக ளிருக்கிறார்கள். அந்தச் சாதியா ருக்குப் பெயர் யஃஜூஜு மஃஜூஜென்று சொல்லுகிறார்கள். அவ ர்கள் நூஹு அலைஹிஸ்ஸலா மவர்களுடைய வும்மத்தா யிருக்கி

ருர்கள் அவர்களிற் சிலர்கள் ஒருச்சாணுயரமுள்ளவர்களாயிருக்கிருர்கள். இன்னம் சிலர்கள் உலகத்தி லுள்ளவர்களுடைய வுயரத்தைப் பார்க்கிலு மதிகமான உயரமுள்ளவர்களா யிருக்கிருர்கள், அவர்களாகிறவர்கள் மிருகங்களைப்போ லிருக்கிருர்கள் அவர்கள் மனுடத் தன்மையிலுள்ள ஒருபேச்சுந் தெரியாதவர்களா யிருக்கிருர்கள் அவர்கள் காட்டிலுள்ள கனிவருக்கங்களைத் தின்னுகிருர்கள் குளங்களிலுள்ள தண்ணீரைக் குடிக்கிருர்கள் இன்ன மவர்களில் வேறொரு சாதியாரு மிருக்கிருர்கள் அவர்களுடைய இருகாதுகளு மவர்களுடைய குதிங்கால்வரையிலும் நீண்டிருக்கிறது அந்தக் காதுகளின் நிறமாகிறது இரத்தத்தில் முக்கிய வஸ்திரத்தைப் போலிருக்கிறது அவர்கள் இரவானபோது தங்களுடைய ஒருகாதைவிரித்துப் படுத்துக்கொண்டு மற்றொரு காதைவிரித்து மூடிக்கொள்கிருர்கள் இன்ன மவர்கள் ஆணும் பெண்ணும் மிருகங்களைப் போலவே மறைவின்றிச் சேர்க்கையும் புணர்ச்சியுஞ் செய்கிருர்கள் அவர்களில் அவுலாதுகள் பிறக்கிறதும் இறக்கிறதுமாகிறது ஆயிரம்பேர்கள் பிறந்தா லொருவ னிறக்குகிருன் இவ்விதமான ஸ்திதியி லிருக்கிருர்கள்.

இனி யந்த மதிலின் நீளமாகிறது முந்நூறுகாத துலைதூரமிருக்கிறது அதை சுல்தான் இஸ்க்கந்தர் துல்க்கற்னைன் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்கள் இரும்பையும் செம்பையும் மற்று மூலோகங்களையு முருக்கிச் சேர்த்து ஐம்பொன்னுல் கட்டினுர்கள் அப்பேர்ப்பட்ட சுவர் அவ்விடத்தி லில்லையானு லந்த யஃஜூஜு மஃஜூஜென்கிற கூட்டத்தார்கள் வந்து எல்லாவுலகத்தையு மழித்து நாசமாக்கி விடுவார்கள் அந்தச் சுவருக் கப்புறத்திலுள்ள நிலமெல்லாம் உப்பு நிலமாயிருக்கிறது சூரிய னுதயமாகிற விடம்வரையிலு மிந்தப் பக்கீருகிய நான்போய்க் கண்காட்சி புரிந்தேன்.

அ௩-வது, பசுக்களின் காட்சி.

அந்த இஸ்க்கந்தர் பாத்ஷாவுடைய மதிலுக் கப்புறத்தில் சில பசுக்க ளிருக்கிறது அவைகள் சாணம்போடும்போது அவைகள் அவையவைகளுடைய நாவைக்கொண் டவையவைகளுடைய யோனிகளை நக்குகின்றன அப்பால் ஒருவாரம் அதாவது ஏழுநாள்வரையிலும் புல்லுமுதல் யாதொன்று மருந்தாமல் வாயைமூடிக்கொ

ள்கிறது எழுநாளைக்குப் பிறகு புல்லுமுதலியவைகளை மேய்ந் தருந்துவதற்காக வாயைத்திறக்கும்போது அவையவைகளின் வாய்களிலிருந்து ஒவ்வொரு அன்பறுருண்டைகள் பூமியில் விழுகின்றது அதின்வாசனையானது காடெல்லாம் கமழ்கிறது இவ் வதிசயங்களையெல்லாம் பக்கிருகியநான் எனது கண்களால் தெரிசித்தேன்.

அச-வது, குல்ஸூம் சமுத்திரத்தின் காட்சி.

குல்ஸூம் சமுத்திரத்தில் ஒரு தீவுயிருக்கிறது அந்தத் தீவில் எழுகோட்டைக ளிருக்கின்றன அதில் ஒவ்வொரு கோட்டையும் பத்துக்காததூர நீளமும், எழுகாததூர அகலமுமிருக்கிறது அந்தக் கோட்டைகளில் செழிப்பு மதிகமாயிருக்கிறது. அந்தக் கோட்டைகளி லிரண்டு பெரிய இராசாக்க ளிருக்கிறார்கள் அவர்களெப்பொழுதும் ஒருவரோ டொருவர் சண்டை செய்துக்கொண் டிருக்கிறார்கள். இன்னமந்த எழு கோட்டைகளிலிருந்து ஒருகோட்டையில் ஹக்த்த ஆலாவுடைய குத்றத்தால் நாற்பது வருடத்திற்குப் பின் ஒரு பெண்ணுக் கொரு ஆண்குழந்தை பிறக்கிறது அப்போது ஜனசங்கையானபோது அந்தப்பையன் அங்குள்ள எல்லா சனங்களையு மழைப்பித்து ஓரிடத்திற் சேர்க்கிறான். அப்போதுநானுடைய வல்லமையில் குல்ஸூம் சமுத்திரத்தில் நின்றும் ஒரு அலையடிக்கிறது அந்த அலையானது கூடியிருக்கப்பட்ட ஆண், பெண், சிறியோர், பெரியோர்முதலிய எல்லாச் சனங்களையும் அரித்துக்கொண்டுபோய் விடுகிறது அவர்க ளெல்லாரும் குல்ஸூம். சமுத்திரத்தில் மூழ்கிப் போகிறார்கள். அப்பால் சிலகாலஞ் சென்றதின்பிறகு அந்தமனுடர்க ளடங்கலுடைய எலும்புகளை யெல்லா மந்தச் சமுத்திரத்தின்தீவில் போட்டுவிடும்படியாக அந்தச் சமுத்திரத்துக்கு அல்லாஹூத் தஆலாவுடைய வுத்தரவாகிறது உடனேயந்தச் சமுத்திரமானது அல்லாவுடைய வுத்தரவுப் பிரகாரம் அந்த எல்லாச் சனங்களுடைய எலும்படங்கலையும் அந்தத் தீவிற்போட்டு விடுகிறது பிறகு அந்த எலும்புகளால் அல்லாவுடைய உத்தரவுகொண்டு ஒரு ஆணும், ஒரு பெண்ணு முண்டாகிறார்கள். பின்பவ் விருவரில் நின்றும் நாள்வழியாப் முன்போல் ஜனங்கள் பெருகிவிடுகிறார்கள். பின்னுமந்த எழுகோட்டைகளும் அலையிறக்கத்தால்

முன்போ லாய்விடுகிறது இவ்விதமாகவே நடந்துக்கொண் டிருக்கிறது நான்போய்க் கண்காட்சி செய்தேன்.

அ௫-வது, இருளான பூமியின் காட்சி.

வடபூமியின் சமீபத்தில் ஒரு மலையிருக்கிறது, அதினுயரம், ஏழுகாதவழி தூர மிருக்கிறது, அந்தமலையின்மேல் ஒரு குகையிருக்கிறது, அதில் (மறுதானகைபு) அதாவது மறைவான மனுடர்களிருக்கிறார்கள், அந்த மறைவான மனுடர்கள் எப்போது முலகமுழுவதிலு முலாவுகிறார்கள். யாராவது பிரயாணம்போகிற மனுடன் அந்த மறுதான கைபென்கிறவர்களை ஞாபகஞ் செய்தால் உடனே அவனிடத்தி லவர்கள் ஆஜராகிறார்கள் இன்னும் அல்லாவுடைய உத்தரவால் அவனுடைய ஹாஜத்துகளையும் நிறைவேற்றுகிறார்கள். இன்னமவனுக் கவனுடைய ஒவ்வொரு வேலையிலு முதவிசெய்கிறார்கள். அப்பா லவர்கள் தங்களுடைய முக்காமிற்குப் போய்விடுகிறார்கள். பக்கீராகிய நான் வியாறத்துச் செய்தேன் மறுதான கைபென்ற மறைவான மனுடர்களுடன் முலாக்காத்துஞ் செய்தேன்.

அ௬-வது, இன்னொரு பட்டணத்தின் காட்சி.

மேற்படி பூமியில் ஒரு பட்டண மிருக்கிறது அந்தப் பட்டணத்தி லுள்ளவர்களுக்கு மரணமென்பது தெரியாது மனுடன் இவ்வித் மிறப்பானென்றுந்தெரியாது மேற்படிபட்டணத்தில் ஒருக்கபறுங் கூடவில்லை. அந்தப் பட்டணத்தினருகே ஏழுமலைக ளிருக்கிறது இன்ன மேழுசமுத்திரங்களு மிருக்கிறது அந்த மலைகளுக்கருகே பெரிய பெரிய குகைகளாகப் பதினாலு குகைக ளிருக்கிறது அவைகளுக்கு முடிவுகிடையாது அவைகளிற் கல்லாற் செய்யப்பட்ட நாலுவீடுக ளிருக்கிறது அந்த வீடுகளின் கீழ்புறத்துச் சுவருமட்டுங் கல்லாற் கட்டப்பட்டிருக்கிறது மற்று மூன்றுபக்கங்களுக்கு முறுதியான முந்நூற்றி யறுபது கற்றூண்களை நாட்டியிருக்கிறது கூரைக்குப் பதிலாக ஒருபலகையைப்போல் பெரிய ஒருமலையைத்தூக்கி மேலேவைத்து மூடியிருக்கிறது அங்குள்ளபூமிகள்வறண்டிருக்கிறது யாருக்காவது மரணம்வந்தால் அந்தமனுடனை மற்றவர்கள் சேர்ந்து கூடியமட்டிலுந் தடுத்து அடிக்கிறார்கள். அவன்த

டைபடுகிறதில்லை அப்பாலவ னந்த மலைகளையும், சமுத்திரங்களையு
ங்கடந்து கல்லாற் செய்யப்பட்ட மேற்கூறிய வீட்டிற்போய்ச் சே
ருகிறான் அந்தவிடத்தி லெந்தமனுடனும் ஒரு அடியெடுத்துவைக்
கமுடியாது, இன்ன மந்தவிடத்திற்போனா லெந்த மனுடனுந் திரு
ம்பவருகிறதுங் கிடையாது எவனாவது அந்தவிடத்தி லிருந்துதிரு
ம்பி ஸலாமத்தாக வந்துவிட்டா வனை மற்ற ஜனங்களெல்லாம்
மலக்கென்று சொல்லுகிறார்கள். உதாரணமாக அந்தப் பட்டணத்
திலுள்ள ஒருமனுடன் அந்த மலைகளுக்குப்போகப் புறப்பட்டான்
அவனுக்குப்பின் ஒரு யாத்திரைக்காரரும் அவனைத் தொடர்ந்து
நடந்தார் அவ்வித மவ்விருவர்களும் முதல்மலையில்போய்ச் சேர்ந்
தார்கள் அப்போ தவ்விடத்தில் ஒருமனுடன் வந்து அந்த யாத்தி
ரைக்காரரைப் பார்த்து நீர் இங்கேயிருந்து திரும்பிப் போய்விடும்,
இதற் கப்புறம்போக வுமக் குத்தரவில்லை யென்று சொன்னான் அ
தற் கந்த யாத்திரைக்காரர் நீ-போ, நானாகிறவன் அல்லாஹுத்த
ஆலாவுடைய உத்தரவைக் கொண்டுவந் திருக்கிறே னென்றி சொ
ல்லிவிட்டு நடந்தார்கள் அப்பால் ஒவ்வொருமலைகளிலும், ஒவ்வொ
ருசமுத்திரங்களிலும் முதல்மலையில் யாத்திரைக் காரரைத் தடை
சொல்லிய அதேமனுடனே வெளியாகி, வெளியாகியவந்து திரும்ப
த்திரும்ப மேற்கூறிய பேச்சையே சொல்லிக்கொண் டிருந்தான்.
அதற்கு அந்த யாத்திரைக்காரர்தான் மேற்கூறிய ஜவாபையேசொ
ல்லிவிட்டு நடந்து மேற்படி மலைகளையும், சமுத்திரங்களையும், கு
கைகளையுங் கடந்து அந்தக் கல்லாற் கட்டப்பட்ட வீட்டுக்குப்
போய்ச் சேர்ந்தார்கள்.

அவ்விதம்போய்ச் சேர்ந்தவுடன் அந்தயாத்திரைக்காரருக்கு
முன் புறப்பட்டானே அந்த மனுடன் கீழேபடுத்துத் தன் கால்க
ளைத் தென்றிசையில் நீட்டித் தலையை வடதிசையில் வைத்துக்கொ
ண்டு கலிமாத் தையிபை ஓதினான். இன்னம் ஒருபிடிமண்ணையள்ளி
த் தன்னுடைய தலையில் போட்டுக்கொண்டான் அதின்பிற கிறந்து
போய்விட்டான். அப்பாலந்த யாத்திரைக்காரர் அவ்விடத்தைவிட்
டுந் திரும்பி மேற்கூறிய பட்டணத்தில் வந்துசேர்ந்தார். அப்போ
தந்தப் பட்டணத்தி லுள்ளவர்க ளடங்கலும் அந்த யாத்திரைக்கா
ரருடைய காலில் விழுந்து கைகட்டி வாய்பொற்றிநின் றதபுகள்
செய்து அவர்க ளடங்கலு மிந்த யாத்திரைக் காரரிடத்தில் முரீதா
கிப்போனார்கள். அந்த யாத்திரைக்கார ரென்றது இந்தப் பக்கீரு
கிய நான்தான் நானென்னுடைய கண்களால்கண்டு தெரிசித்தேன்.

அஎ-வது, ஜாமிஆப் பள்ளியின் காட்சி.

மேற்படி பூமியில் ஒரு ஜாமிஆப் பள்ளியிருக்கிறது அதற்கு ஐம்பது மினாருக்களிருக்கின்றன அதின் ஒவ்வொரு மினாருக்களும் ஒவ்வொரு மலைகளைப்போற் பெரிதாயிருக்கிறது அந்தப்பள்ளியின் ஸஹனென்ற விஸ்தீரணம் மூன்றுகாத தூலதூர மிருக்கின்றது அதிலொரு ஹௌலிருக்கிறது அதற்குப் பூமியின்கீழிருந்து தண்ணீர்வந்து நிறம்புகிறது இன்னமந்தப் பள்ளியில் புதியகுடங்களும் புதிய விரிப்புகளும் மிகமிகவா யிருக்கிறது இன்னம் தங்கத்தால் செய்யப்பட்ட தோமுருக் கட்டில்களும் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. அவ்விடத்தில் ஒருமனுடர்களு மில்லை ஆனா லவ்விடத்தில் ஷஹீதுக ளிருக்கிறார்கள். மேற்கூறப்பட்ட ஹௌஉடைய தண்ணீரோ பாலைப்பார்க்கிலு மதிக மதுரமாகவும், உருசியாகவு மிருக்கிறது. அப்படிப்போலேயே பற்பலவிதமான மதுரங்களை யுடைய அனே கனேகவிதமான கனிவருக்கங்களு முண்டாயிருக்கிறது அவைகளை யந்தஷஹீதுக ளருந்திக்கொண்டும், காட்டுமிருகங்களின்பேரில் சவாரிசெய்துக் கொண்டு மிருக்கிறார்கள். அவ்விடத்திலெவ்விதப் பட்சிகளும் செல்லுகிறதில்லை பக்கீராகிய நான்போய் ஸியாறத்துச் செய்தேன்.

அஅ-வது, நிஹால் மந்துப்பட்டணத்தின் காட்சி.

மேற்படி வடபூமியில் நிஹால் மந்துப் பட்டணமென்று ஒரு தேசமிருக்கிறது அந்தத் தேசத்திலுள்ள ஜனங்க ளடங்கலும் காட்டு ஆடுகளுடைய பால்களையே யருந்துகிறார்கள் வேறே யொரு வஸ்தையு மருந்துகிறதே யில்லை அவ்விடத்தில் ஒருவஸ்துக்களுமுண்டாகிறது மில்லை அவர்கள் தோல்வஸ்திரங்களை யுடுத்திக்கொள்கிறார்கள். அவர்களுடைய அவுலாதுகளை தீனுடைய இல்மைத் தவிர வேறொன்றுங் கற்பிக்கிறதேயில்லை எல்லாஜனங்களும் ஷரீஅத்தின்பேரில்தான் நடக்கிறார்கள் நல்ல கருமங்களைக் கண்டால் விடுகிறதில்லை அவ்விடத்தில் பிறக்கிற ஜென்மங்க ளெல்லாம் நற்குணமுள்ளதாயும், நற்செய்கை யுள்ளதாயும், நன்மைபொருந்தினதாயுமே பிறக்கிறது எல்லாச்சனங்களும் அல்லாஹுத் தஆலாவைவண

ங்கி யவனுடன் முஹப்பத்துள்ளவர்களாக யிருக்கிறார்கள். ஆனால் சொற்பஜனமாத்திரம் துருஅதிஷ்டத்தால் கெட்டவர்களாகப் பிறந்து அவர்கள் கெட்டவர்களாக யிருக்கிறார்கள் அவ்வித மிருந்த போதிலும் எல்லாசனங்களும் இஸ்லா மானவர்களாகவும், உண்மையான தீனுடையவர்களாகவும், சுன்னத்து ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாகவு மிருக்கிறார்களே தவிர காபிறுகளில் நின்று மொருவனவது அவ்விடத்திற் கிடையாது இன்ன மவர்களில் யாராவது மௌத்தானால் காட்டாட்டுப் பால்களால் குளிப்பாட்டி, தோல்வஸ்திரங்களால் கபன்கிழித்துப் பொதிந்து பூமியில் தபன்செய்கிறார்கள் ஒரு ஜனங்களாவது மௌத்தானதைப் பற்றித் துக்கப்படுகிறதுமில்லை, அழுகிறதுமில்லை, ஒப்பாரிவைக்கிறது மில்லை இதற்குப் பதிலாகச் சந்தோஷப் படுகிறார்கள், ஆனந்தங்கொண் டாடுகிறார்கள். இறந்துபோன அந்த மனுடனுடைய றாஹுக்கு தவாபுகிடைக்கும்படிக்கு மேற்படி காட்டாட்டுப் பால்களையெல்லா ஜனங்களுக்கும் புசிக்கும்படி விருந்தளித்து ஸதக்காச் செய்கிறார்கள். அவர்களில் யாருக்காவது குழந்தைகள் பிறந்தா லதற்காகத் துக்கப்படுகிறார்கள், அழுகிறார்கள். இந்தப் பக்கீருகிய நானந்தப் பட்டணத்தில்போ யவ்விடத்திலுள்ள ஜனங்களைத் தெரிசித்தேன்.

அ௯ - வது, கனிவருக்கங்களுள்ள தோட்டங்களின் காட்சி.

—:※:—

இன்னம் வடதிசையில் ஒருபூமியிருக்கிறது அதில் மனுட்சஞ்சாரமே கிடையாது ஆனால் விநோத விநோதமான கனிவருக்கங்களுள்ள தோட்டங்களும், ஆச்சரியப்படத்தக்க மலைகளும், குகைகளும், நதிகளு மனேகமா யிருக்கின்றன அவ்விடத்தில் ஒருவனும் போகமுடியாது அவ்விடத்தில் குல்ஸூம் சமுத்திரத்தில் நாயனுடைய கிருபையால் ஒருதீ விருக்கிறது, அந்தத்தீவில் ஒருபெரிய மரமிருக்கிறது, அதின்நிழல் சுற்றுக்குப் பத்துக்காதவழித் தூலதூரம் பரவியிருக்கிறது, அந்தமரத்தில் அண்டரண்ட பட்சியின் கூடு மிருக்கிறது மேற்படி யண்டரண்ட பட்சியானது தன் கூட்டிலிருந் தெழுந்து நாள்தோறும் நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுடைய சன்னிதானத்திற்கு வந்துபோய்க்கொண்டிருந்தது. அப்படி யிருக்கையில் ஒருநா ளொரு அழகான பெண்

குழந்தையானது தன்னுடைய வீட்டின்மேடையி லிருந்து விளையாடிக்கொண் டிருந்தது அப்போது அந்த அண்டாண்ட பட்சியான தந்தப் பெண்குழந்தையைக் கண்டு மெத்தவு மிந்தப் பெண்குழந்தை யழகாயிருக்கிறதே ஆகையால் நம்மளுடைய கூட்டில் கொண்டுபோய் வைத்து வளர்ப்போமென் றுசைகூர்ந்து அந்தப் பெண்குழந்தையை யிருஞ்சிக் கொண்டுபோய்த் தன்னுடைய கூட்டில்வைத்து வளர்த்துக்கொண்டு வந்தது அப்பால் சிலகாலத்திலந்தப் பெண்குழந்தையானது பெரிய பெண்ணைப் விட்டபொழுது அவ்விடத்தில் மனுடர் சஞ்சாரமில்லா திருக்கிறபடியால் தன்னை அண்டரண்ட பட்சியுடைய மகளென்றே யெண்ணிக்கொண் டிருந்தது அந்தப் பெண்ணுக்கு அண்டரண்ட பட்சியானது பற்பலவிதமான கனிவருக்கங்களையும், பற்பலவிதமா போசனங்களையும் தேடிக்கொண்டுவந்து கொடுத்துக்கொண் டிருக்கும் அப்படி யிருக்கையில் ஒருநாள் ஷெய்கு ஆலமென்பவர்க ளந்தவிடத்திற்குப் போனார்கள் மேற்படி ஷெய்கவர்கள் காட்டிலுள்ள கனிவருக்கங்களைப் புசித்துப் பசியாறிக் கொண்டு காட்டுச் சஞ்சாரஞ் செய்துக்கொண்டிருந்தார்கள். அப்படியாகவுள்ள நடமாட்டத்தி லொருபோதந்த மரத்தின்கீழ் சென்றார்கள். அந்த மரமானது மிகவும்பெரியதாயும், நிழற் குளிர்ச்சியாயும், இடம் நேர்த்தியாயும், மகிழ்ச்சியுறத்தக்கூதாயு மிருப்பதைக்கண்டு அவ்விடத்திலேயே யுட்கார்ந்துக்கொண்டார்கள். அப்போ தொருநேரத்தி லந்தப் பட்சியானது நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுடைய சன்னிதானத்திற்குப்போ யிருந்தது அப்பொழு தந்தப் பெண்பிள்ளையானவள் ஷெய்கு ஆலமென்பவர்களைக் கண்டு அவளுக்கு அண்டரண்ட பட்சி கற்றுக்கொடுத்திருக்கிற பாஷையைக்கொண்டு ஷெய்கவர்களை நீர் யாரென்று கேட்டது. அப்போது ஷெய்கானவர்கள் அந்தப் பெண்ணைப் பார்த்து மிகவு மாச்சரிய மடைந்தவர்களாக அந்தப் பெண்ணின்பேரில் ஆஷிக்காய் விட்டார்கள். ஆனா லவர்களிருவர்களும் பேசிக்கொண் டிருந்தபோதிலும் ஒருவருடைய பாஷையை மற்றொருவ ரறிந்துக்கொள்ள முடியவில்லை. ஆகையால் ஷெய்கவர்கள் அல்லாஹுத் தஆலாவிடத்தில் என்னுடைய நாயனே எனக் கிந்தப் பெண்பிள்ளை யுடைய பாஷையைக் கற்பி, அல்லது அந்தப் பெண்பிள்ளைக் கென்னுடைய பாஷையைக் கற்பி. எனென்று லவளிங்கே யெப்படி வந்தாளென்று அறியவேணுமென்று துஆக் கேட்டார்கள் உடனே ஹக்கத்தஆலா அந்தப் பெண்பிள்ளை

யுடைய பாஷையை அறியும்படியான இல்மை ஷெய்கவர்களுக்குக் கொடுத்தான். அதின்பிறகு அந்தப் பெண்பிள்ளை ஷெய்கவர்களைப் பார்த்து இப்போது சொல்லும் நீர் யார் இவ்விடத்துக் கேன்வந்தீ ரென் றந்தப் பட்சிப்பாஷையைக் கொண்டு கேட்டாள். உடனே ஷெய்கவர்கள் நானுகிறது ஒருமானுடன் நான் எங்களூரி லிருந்து வந்திருக்கிறே னென்று சொன்னார்கள். அப்போ தந்தப் பெண்பி ள்ளை ஷெய்கவர்களைப் பார்த்து நீர் யிப்போது எவ்விடத்திலாவது ஒளித்திருந்துக் கொள்ளும் ஏனென்றால் அண்டரண்ட பட்சிவரு கிற நேரமாய்விட்டதென்று சொன்னாள். அதுபோல் ஷெய்கவர் ரிள் ஓரிடத்தில் ஒளித்திருந்துக் கொண்டார்கள். அப்பாற் சொற் பநேரத்தில் அந்தப் பட்சியானது வந்து இரவுமுழுதுந் தன்னு டைய கூட்டி லடைந்திருநதுவிட்டுக் காலையிலெழுந்து மேற்படி ப ட்சியானது வெளியிற் போய்விட்டது அப்பா லந்தப் பெண்பிள்ளை யானவள் கூட்டைவிட்டுக் கீழேயிறங்கி ஷெய்கவர்களிடம் வந்து அவளும், ஷெய்கவர்களுமாகச் சிலநேரம் பேசிக்கொண் டிருந்தவர் களுக்குள் ஒற்றுமையாகி விட்டார்கள். பின்பு அவ்விதமாக அனே கநா ளின்பமாய்க் கழித்தார்கள். அப்பாற் சிலநாளி லந்தப் பெண் பிள்ளைக் கர்ப்பசங்கையாகி விட்டாள். அப்படி யிருக்கையி லந் தப் பெண்பிள்ளையுடைய வயிறு பெரிதாயிருப்பதைக்கண் டந்த அண்டரண்ட பட்சியானது அப்பெண்ணை நோக்கி யுன்னுடைய வயிறு பெரிதாயிருக்கிறதே யிந்தக் கர்ப்ப முனக் கெப்படியுண்டா ச்சுதென்று கேட்டது. அதற்கவள் இது கர்ப்பமில்லை யெனக் கே தோ ஒரு வியாதி யுண்டாயிருக்கிற தென்று சொன்னாள். அதைக் கேட்டுக்கொண்டு மேற்படி பட்சியானது நபி சுலைமான் அலைஹிஸ் ஸலா மவர்களிடத்தில்போய்த் தெரியப்படுத்தினது அதற்கவர்கள் நீயொரு இரவு என்னிடத்தில் தங்கியிரு நானறிந்துக் கொள்கிறே னென்று சொன்னார்கள். அதுபோல் மேற்படி பட்சியானது சுலை மான் அலைஹிஸ்ஸலா மவர்களிடம் தங்கியிருந்துக் கொண்டது. அப்போ தந்தப் பெண்பிள்ளையானவள் கூட்டைவிட்டிறங்கி ஷெய் கவர்களிடம் வந்து நாயகமே யின்றையத்தினம் அண்டரண்ட பட் சியானது சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் தங்கியிருக் கிறது இன்றைக்கு வரமாட்டாது. ஆகையால் நாமிருவர்களு மிவ் விடமிருந்து புறப்பட்டு வேறெங்காவது ஓடிப்போய்விடுவோம் வா ருங்களென்று கூப்பிட்டாள். அப்படியே ஷெய்கவர்களும் அந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண் டவர்க ளிருவர்களுமாக் இரவுகாலங்க

ளில்நடக்கிறதும், பகல்முழுது மொழித்துக்கொள்கிறதுமாக நடந்தார்கள் பின்பு அந்தப்பட்சியானது சுலேமான் அலைஹிஸ்ஸலாமவர்களிடத்தில் அன்றிரவு தங்கியிருந்துவிட்டு மறுநாள்காலையில் தன்னுடையகூட்டினிடமாய்வந்தது அப்போது தன்னுடையகூட்டிலிருந்த பெண்ணைக் காணமல் தன்னுடையகூடு வெறுமையாயிருப்பதைக்கண்டுமேற்படிபட்சியானது வியாகுலமடைந்து பரதவித்துக் கிலேசமுற்று எங்கெங்கத்திசைகளிலு மதா லியன்றமட்டிலுந் தேடியலைந்தும் அவளைக் கண்டுபிடிக்க முடிந்ததில்லை ஆகையால் மேற்படிபட்சிமிகவும் வருத்தமடைந் தழுதுக் கொண்டு தன்னுடைய கூட்டில் வந்துட்கார்ந்து விட்டது. அப்பா லனேககாலத்திற்குப் பிறகு மேற்படி ஷெய்கவர்கள் அந்தப் பெண்பிள்ளையைக் கூட்டிக் கொண்டு நபி சுலேமான் அலைஹிஸ்ஸலா த்துவஸ்ஸலா மவர்கள் சமுகத்திற்சென்று மேற்படி பெண்பிள்ளையுடைய சங்கதிகளையும் மேற்படிபெண்பிள்ளைக்கும் ஷெய்கவர்கள் தங்களுக்கு மிடையிலுள்ள சங்கதிகளையும் தெரியப் படுத்தினுர்கள். அப்போது சுலேமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்த அண்டரண்ட பட்சிக்குத் தெரியப்படுத்தும்படிக் குத்தரவுசெய்துவிட்டு அந்தப் பெண்பிள்ளையினுடைய தாய்தந்தையர்களை யழைத்து மேற்படி தாய்தகப்பருடைய இக்ருறின் பேரிலும் பரீகளுடைய சாட்சியத்தின்பேரிலும் அந்தப் பெண்பிள்ளையை ஷெய்கு ஆலமென்பவர்களுக்கு நிக்காஹு முடித்து மேற்படி பெண்பிள்ளையை ஷெய்கவர்களிடத்தில் ஒப்புவித்திட்டார்கள் அதுமுதல் மேற்படி பெண்பிள்ளையைப்பற்றி அந்த அண்டரண்டபட்சியானதுகியாமபரியந்தமும் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும்படியாய்விட்டது. மேற்கூறிய சமுத்திரத்தைச் சுற்றியிருக்கிற பூமிகளெல்லாம் தரிசுநிலமாக யிருக்கிறது இந்தப் பக்கீருகிய நான்போய்க் கண்காட்சி செய்தேன் அந்த அண்டரண்டபட்சியானது துக்கப்பட் டிருப்பதையுங் கண்டேன்.

கூ0-வது, தென்றிசையிலுள்ள காட்சிகள்.

—:*:—

பிறகு நான் தென்றிசையிலுள்ள சீமைக்கு முகநோக்கினேன் அந்தப்பக்கத்தில் பாபல் என்றொரு பட்டணமிருக்கிறது அந்தப் பட்டணத்தின் சமீபத்தில் ஒரு குகையிருக்கிறது அதில் ஷெய்கு இஸ்மாயீலென்ற ஒரு பெரியோர்க ளிருக்கிறுர்கள். அவர்கள் ஐங்

துவக்த்தும் மக்குமாநகரில் கஃபாவில்போய் ஜமா அத்துடன் சேர்ந்து தொழுகிருர்கள். அவர்களோ அதிக இல்மை யுடையவர்கள் தெற்குத்தேசங்களிலுள்ள ஜனங்களெல்லா மவர்களிடத்தில்வந்து கல்வி கற்றுக் கொள்கிருர்கள். எல்லாவுலகத்தின் சமாச்சாரங்களு மவர்களுக்குத் தெரிந்துக்கொண்டிருக்கும் யாருக்காவது சங்கடம் ஏற்பட்டா லவனுக் குதவிசெய்துக்கொண் டிருந்தார்கள். இந்த யாத்திரைக்காரணுகிய நான் அவ்விடத்திற்குப் போகும்படி நேரிட்டது நான் அவ்விடத்திற்போய் அந்த ஷெய்குடன் முலாக்காத்துச்செய்தேன் அப்பா லிரவானபோது வானலோகத்தி லிருந்து பற்பலவிதமான போசனங்களால் நிறைந்த ஒருதட்டமானது கீழேயிறங்கி வந்தது அவ்விடத்தில் ஒரு தர்வேஷானவர் வசித்துக்கொண்டிருக்கிருர் அவரந்தப் போசனத்தைப் புசிக்கத் துடங்கினர் அந்த தர்வேஷு அவரால் கூடியமட்டிலு மந்தப் போசனத்தைப் ஆருவு மருந்திட முயன்ருர் அந்தப் போசனங குறையவில்லை அப்பாலந்த தர்வேஷானவ ரென்னைத் தன்னிடமழைத்து தன்னுடனிருந் தந்தப்போசனத்தைப் புசிக்கும்படி சொன்னர் நானு மவருமாகப் புசித்தோம் மேற்படி போஜன மெங்க ளிருவருக்கும் சரியாகிவிட்டது. அவ்விதம் போசனமெல்லாம் புசித்து முடிந்ததின்பிறகு அந்த தருவேஷானவரென்னை மிகவும் கனவானென்று பிரஸ்தாபித்தார். அப்பாலனேக ஜனங்க ளென்னிடத்தில் தீட்சை பெற்ருர்கள் எண்பதினுயிரம் ஜின்களும் முரீதாகி ஹக்த்த ஆலாவை ஷுக்றுச்செய்தார்கள் அப்பால் நானவ்விடத்தை விட்டு மீண்டு ஒருகோட்டையின் பேரில் முகநோக்கினேன்.

கூக-வது, கோட்டையின் காட்சி

மேற்படித் தெற்குத் திசையில் ஒரு பூமியிருக்கிறது அதில் ஒருபெரிய வனந்தரமும், அந்த வனந்தரத்திற் பல்மான ஒருகோட்டையு மிருக்கிறது. அந்தக் கோட்டையின்நீளம் எண்பதுகாத தூரமும், அதின் அகலம் ஐம்பதுகாத தூரமும், அதின் கதவுகள்

தங்கத்தாற் செய்யப்பட்டதாகவு மிருக்கிறது. இன்ன மந்தக் கதவில் ஏழுமணங்கு நிறையுள்ள ஒரு தங்கப்பூட்டுப் போட்டுப் பூட்டியிருக்கிறது அந்தப் பூட்டின்பேரில் எழுதியிருக்கிறதாவது எந்த மனுட்னுவ திந்தக் கதவினருகே வரவேணுமாகில் மூன்றுவருடம் நோன்புபிடித்து இரவும்பகலும் யாதொன்றுந் தின்னுமலும், குடியாமலும், எந்தப்பக்கமும் பாராமலும், அந்த மூன்றுவருடமும் ஹக்த்தஆலாவைத் தவிர வேறே யாதொருஞாபகஞ் செய்யாமலுமிருந்து அல்லாஹுத் தஆலாவை வணக்கஞ்செய்வ துடனே வருவானுகில் அப்படிப்பட்ட மனுடனுக் கிந்தப்பூட்டுத் தன்படியே திறக்கப்படுமென் றெழுதியிருக்கிறது. அப்போ தந்தவிடத்திற்குப்போய் இப்படி யெழுதியிருப்பதைக் கண்டு எப்படியாவ திந்தக் கோட்டைக்குள் போகவேணும், அங்கிருப்பவர்களைப் பார்க்கவேணு மென்று நாயனுடன் தீர்மானஞ்செய்தேன். அந்த நாயனுடைய கிருபையால் அந்த எழுத்தின் பிரகாரம் நான் மூன்று வருஷம்வரையிலும் அமல் செய்ததின்பிறகு அல்லாஹுத் தஆலாவினுத்தரவு கொண்டு அந்தப் பூட்டானது தன்படியே கீழேவிழுந்தது, அந்தக் கதவுந் திறந்துவிட்டது நானதற்குள் போனபோது கண்டதாவது ஒரு விருந்துச் சாலையைப்போல் கட்டப்பட்டிருக்கிறது அதில் ஒருலட்சத்தி எழுபதினுயிரம் அறைக ளிருக்கிறது. இன்ன மதிலிராசாக்களுக்கு வேண்டிய சாமான்களான யானைகளும், குதிரைகளும், கூடாரங்களும், கொடிகளும், நகராமுதலிய பலவாத்தியங்களுமான சாமான்களும் அரசாட்சிக் குரியவைகளெல்லாமவ்விடத்தில் தயாருயிருக்கின்றது. இன்ன மதில்பெரிய ஒருமரமிருக்கிறது அதிலுள்ள கொப்புகளெல்லாம் அந்தச் சத்திரத்திலுள்ள ஒவ்வொரு அறைகளின்மேலும், ஒவ்வொருகொப்புகள் சாய்ந்துக்கொண்டு சாய்ந்துக்கொண் டிருக்கிறது. அந்த ஒவ்வொருகொப்புகளிலும் ஒவ்வொரு பூசுணிக்காய்கள் தண்ணீர் நிறைந்த பெரிய குடங்களைப்போற் றெங்குகின்றன அவைகள் தங்களுக்கு ளொன்றுக்கொன் றசைந்துக்கொண் டிருக்கிறது. ஆனுலவ்விடத்திலொரு மனுடனையாவது நான் காணவில்லை. ஆகையால் நான் கவலையணைந்துக்கொண்டு ஒருமூலையி லுட்கார்ந்திருந்தேன் அப்பால் சூரிய னுஸ்தமித்த பொழுது அந்தப் பூசுணிக்காய்களெல்லா மசைந்தது

அப்போ தொவ்வொரு பூசுணிக்காய்களி லிருந்தும் ஒவ்வொருமனுடர்கள்வெளிப்பட்டுக்கீழேவிழுந்தார்கள் அவ்விதமாகஒருலட்சத்தியெழுபதினுயிரம்மனுடர்கள் பூசுணிக்காய்களிலிருந்துவரிசைக்கிரமமாகக் கீழேவிழுந்தார்கள். அதாவது தூர்ப்புக் காரர்களானகூட்ட முதலாவது கீழேவிழுந்தார்கள். அவர்கள் மாளிகைகளையெல்லாம் தூர்த்துப் பெருக்கி சுஸ்த்தப்படுத்தி விட்டார்கள். இரண்டாவ்து தண்ணீர் புழங்கிறவர்களான கூட்டங் கீழேவிழுந்தார்கள் அவர்கள் பூமியில் தண்ணீர் தெளித்தார்கள். மூன்ருவது விரிப்புடைய கூட்டத்தார்கள் கீழேவிழுந்தார்கள் அவர்கள் கூடாரங்களை நாட்டி விரிப்புகளை விரித்தார்கள் நாலாவது போர்ச்சேவகக் கூட்டத்தார்கள் ஆயுதபாணிகளுடன் கீழே விழுந்தார்கள் அப்பாற் சண்டாக்களும், நகராக்களும் விழுந்தன பிறகு அரசன் கிரீடத்தைச் சிரசி லணிந்துக் கொண்டும், வாளாயுதத்தை இடுப்பி லணிந்துக் கொண்டும், விலையுயர்ந்த நேர்த்தியான வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டும் பூசுணிக்காயி லிருந்து வெளிப்பட்டான். உடனேயெல்லாஜனங்களும் அவனுக் கெதிர்சென்று சங்கைசெய்து சிம்மாசனத்தின்பேரி லுட்காரவைத்தார்கள். இன்ன மனேகவிதமான போசனங்களையும், அனேகவிதமான கனிவருக்கங்களையும் அவ்வரசனுக்கு முன் கொண்டுவந்து வைத்தார்கள் அப்போ தந்த வகை வகையான உணவுகளை யெல்லா மருந்தினதின் பிறகு போர்ச்சேவகர்களெல்லா மிரர்சனுக்கு ஸலாம்சொன்னர்கள் அவ்விடத்தி லிரவுபெரிதாயும், பகல் சிறியதாயு மிருந்தது அவ்விதப் பெரிதான இரவு முடிந்து சூரியன் உதயமாகிற நேரமானபோது மலாயிக்கத்துமார்கள் மனுடவடிவாக வெளிப்பட்டு அந்த இராசனையும், மேற்கூறிய கூட்டக்காரர்கள் அடங்கலையும் அவரவர்க ளுடைய வஸ்திரங்களை யெல்லா முரிந்துரியானுக்கி அப்படியே ஒவ்வொருவனையும் ஒவ்வொரு பூசுணிக்காயில் மறைத்துவிட்டார்கள் இந்தச் சங்கதியைக் கண்டு நான் மிகவு மாச்சரியமுங் கிலேசமு மடைந்துக்கொண்டிருந்திதன் பின்பு பகலாகிப் பகல்முழுவதும்போயி மறுநாளிரவாய்விட்டபொழுது முதல்நாள் முறைப்படியே அன்றும் பூசுணிக்காய்களிலிருந்து மனுடர்கள் வெளியாகிக் கீழே விழுந்தார்கள் முன்போலவே யிராசனை சிம்மாசனத்தி லுட்காரவைத்தார்கள். போர்ச்சேவ

கர்முதலிய எல்லாச்சனங்களு மிராசனுக்கு சலாம்சொன்னார்கள். முன்போலவே விதவிதமான போசனங்களை யெல்லா மிராசனுக்கு முன் கொண்டுவந்து வைத்தார்கள் அவ்வரசன் போசனமெல்லாம் புசித்துப் பசியாறித் தீர்ந்ததின்பிறகு இராஜனானவன் போர்ச்சேவகர்களை நோக்கி ஓய் சேவகர்களே ஜோசியர்களை யழைத்து நம் முன்புக்குக் கொண்டுவாருங்களென் றுத்தரவு செய்தான் அவ்வுத்தரவின் பிரகாரம் ஜோசியர்களை யழைத்துக் கொண்டு வரப்பட்டது அப்போ திராஜன் ஜோசியர்களை நோக்கி ஓய் ஜோசியர்களே நம்முடைய காலத்தி னியர்க்கைகளையும், இயல்புகளையும் நீங்கள் நன்றாகக் கவனித்துக் கணித்துப் பாருங்கள். இந்த ஆபத்து நமக்கெவ்வளவு காலத்திற் கிருக்கும், எவ்வளவுநா ளிப்படிக் கஷ்டப்படவேண்டுமென்று பாருங்களென் றுத்தரவு செய்தான். அப்போது ஜோசியர்கள் ஜோசியம்பார்த்து அரசனைநோக்கி மகாராஜாவே நபி நாயகத்தின் அவுலாதி லிருந்து ஒரு பெரியோர்கள் வருவார்கள், அவர்களுடைய பெயர் செய்பிது ஜலாலுத்தீன் ஹுஸை னென்றிருக்கும், அவர்களுக்கு நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய றவுலாவை வபாறத்துச் செய்யப்போனதில் நபிநாயகத்தின் வாக்கால் மருதூம் ஜிஹானியான் ஜிஹாங்கஷ்தென்று பட்டம் கிடைத்திருக்கும் அப்படிப்பட்டவர்க ளிடத்தில் தாங்களும், தங்களுடைய சேனைகளும், மற்றும் யாபேர்களும்தௌபாச்செய்து, முஹம்மதியாவுடைய தீனில்சேர்ந்து தாங்க ளனைவர்களு மவர்களிடத்தில் முரீதாகிக் கொள்வீர்கள் அன்றுதா னிந்த அதாபுகள் உங்களையும், உங்களுடைய கூட்டங்களையும் விட்டு நீங்குமென்று சொன்னார்கள். உடனே யிராசன் ஜோசியர்களைப்பார்த்து இன்னம் நன்றாகப்பாருங்கள் அந்தப் பெரியோர்க ளெப்போது வருவார்களென்று திட்டமாய்ப் பாருங்களென் றுத்தரவுசெய்தான் அப்போது ஜோசியர்கள் அரசனுத்தரவுப்படி ஆரூடமுதலிய பலவிதமான கவனிப்புகளைக் கொண்டும நன்றாகப் பார்த்து ஓய் இராஜாவே யுங்களுக்குச் சந்தோஷ முண்டாகட்டும், அந்தப் பெரியோர்கள் இப்போ திவ்விடத்தில் வந்திருக்கிறார்கள், ஆனா லின்ன விடத்தி லிருக்கிறார்க ளென்பது தெரியவில்லை யென்று சொன்னார்கள்.

அப்படி யிருக்கையில் வல்லமையுள்ள மகா மாட்சிமைதங்கிய அல்லாஹுத் தஆலாவிடத்தி லிருந்து ஓய் ஜலாலுத்தீன் ஹுஸைனே உம்மை யிந்தவிடத்தில் வெளியாக்குமென் றுத்தரவாச்சுது உடனே ஹக்சுபுஹா னஹுவத் தஆலாவி னுத்தரவுப்பிரகாரம் நானெழுந்திருந் தந்தக் கூடாரத்துக்குட்போய் அந்த விராசனருகே சென்றேன் அப்போ தந்தவிராச னென்னைப் பார்த்து நீர் யார் உம்முடைய பெயரென்ன வென்று கேட்டான். அதற்கு நான் ஒரு முஃமீன் என்னுடைய பெயர் செய்யிது ஜலாலுத்தீன் ஹுஸைனென்று சொன்னேன். இந்தப் பெயரைக் கேட்டவுடனே அவ்வரசர் அதிக மரியாதையுடன் எழுந்திருந்தார், என்னுடைய காலில்விழுந்தார், மிகுந்த சந்தோஷப் பட்டார், நாயனுடைய வந்தனஞ் செலுத்தினர். இவ்வித மெல்லாம் செய்து என்னை நோக்கி என் நாயகமே எனக்குச் கலிமாச் சொல்லிக் கொடுங்களென்று கேட்டார். உடனே நான் கலிமாவைச் சொல்லிக் கொடுத்தேன். அப்போதவ்வரசரும், அவரைச் சேர்ந்த சேனைகளும், போர்ச் சேவகர்களும், மற்றுமுள்ள ஜனங்கள் யாவரும் கலிமாவைச் சொல்லி யீமான்கொண்டு இஸ்லாமாகி யீமான், இஸ்லா முடைய ஹுக் முகளையும், சட்டங்களையும் என்னிடத்திற் படித்துக் கொண்டார்கள்.

ஆனல் ஒரு லட்சத்தியெழுபதினுயிரம் ஜனஙகளிந்தப் பக்கீறு மூலமாக ஈமான் கொண்டு இஸ்லாமாய் விட்டார்கள் அப்பாலவர்களைப் பார்த்துநான் இவ்விடத்தை விட்டு மீண்டுபோவதற்குத் தரவு கொடுங்களென்று கேட்டேன் அதற்கவர்கள் என்னைப்பார்த்து-செய்யிது ஜலாலுத்தீன் ஹுஸைனென்ற சொந்தப்பெயரும் மருதூம் ஜிஹானியான் ஜிஹாங்கஷ்த் தென்ற பட்டப்பெயருந் தங்கிய எங்கள் நாயகமே, நாங்க ளெல்லோர்களு மிதுவரையிலும் லூத் அலைஹிஸ்ஸலாமுடைய கூட்டத்தார்களா யிருந்தோம் ஆகையாலெங்களுடைய பாவமுதலிய தீமையான செயல்களின் நிமித்தமெங்களுக்கிவ்விதமான அதாபுகளாகிக்கொண்டிருந்தது இப்போது நாங்களெல்லோர்களும் உங்களுடையமூலமாக இஸ்லாத்திலாய் விட்டோம் ஆகையால் எங்களுடைய ஆயுளின் றவணை யிதுவரையிலுந்தா தானிருந்தது இப்போ தெங்களுடைய ஜனுஸாத்தொழு

கையைத் தாங்கள்தான் தொழவேணுமென்று சொன்னார்கள் அப்போது நான் அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீனென்று சொல்லிக் கொண்டேன் அப்பாலவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு அறைகளிற்போய்ப் புகுந்து தனித்தனியே இரண்டிரண்டு றக்அத்து ஷுக்றுத் தொழுகையைத் தொழுது, நாவினல் கலிமாத்தையிபை ஓதிவிட்டு அவரவர்களும் படுத்துவிட்டார்கள். அப்பால் ஒவ்வொருபிடி மண்களை அள்ளி யவரவர் தலைகளில் போட்டுக் கொண்டார்கள். உடனே யவரவர்களும் ஹயாத்துநீங்கி மரணமடைந்தார்கள் அவர்களி லொருவரா துயிரோ டிருக்கவில்லை எல்லோர்களும் ஈமானுடன் மவுத்தானார்கள் அவர்கள் மவுத்தாயிருக்கிற ஒவ்வொரு அறைகளிலும்போய் அவரவர்களுக்கும் வெவ்வேறு கஜ்ஜனஸாத் தொழுகையைத் தொழுது முடித்துவிட்டு மேற்படி கோட்டையி லிருந்து நான் வெளியேவந்து அந்தக்கோட்டைக்கதவை முன்னிருந்ததுபோலவே பூட்டிவிட்டேன் ஹக்கதஆலாவுடைய குத்றத்தைத் தெரிசித்துவிட்டு அங்கிருந்துமீண்டேன்.

௯௨-வது, அரண்மனையின் காட்சி-

அப்பால் மேற்படி தெற்குத்திசையில் மூன்று மாதப்பயணத்தின் துலைதூரமான விஸ்தீரணமுள்ள ஒரு வனாந்தா மிருக்கிறது அதில் தங்கத்தாலும், வைடூரியத்தாலுங் கட்டப்பட்டவொரு அரண்மனையானது சுவர், கதவுமுதல் தங்கத்தால் செய்யப்பட்டதாயிருக்கிறது மேற்படி அரண்மனைக்கு ஏழு கதவுக ளிருக்கிறது அவ்வேழு கதவுகளும் ஒருகதவுக்கும் மற்றொருகதவுக்கு மிடையில் ஒவ்வொருகாதவழிதூர மிருக்கிறது ஒவ்வொரு கதவினுயரமும் அகலமும், ஐம்பதுகெஜம் சரிசரியாய்ச் சவுக்கமா யிருக்கிறது. அதில் ஆறுகதவுகளடைத்தும் ஒரு கதவுமாத்திரந் திறந்துமிருக்கிறது மேற்படி கதவின் பலகையானது சுத்தமான கட்டித்தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது அதில் இரத்தினாதிகளும், மாணிக்கங்களும் பதிந்திருக்கின்றன. நானந்த அரண்மனையின் கதவினருகேபோ

னபோது ஒருமனுடன் வெள்ளைத்தாடி யுள்ளவராயும், கையில்தஸ் பீஹ் மணிவைத்தவராயும், பாதங்களிற் பாதரட்சை யணிந்தவ ராயும், திரேகத்தில் ஜுப்பாவென்ற சட்டைபோட்டவராயும், என்னுடைய முன்பில்வந் தென்னேடு முலாக்காத்துச்செய்து என்னுடைய கைகளையு முத்தமிட்டார். அப்பால் நானந்த அரண்மனையில்போய்ப் பார்த்தேன் அதிலனேகப் பற்பலவிதமான தோட்டங்களிருக்கின்றது. அந்தத் தோட்டங்களில் சிறுவயதுள்ள பெண்குழந்தைகளும், சுந்தர சவுந்தர மிகுந்திடு முகந் தளதளப்புள்ள வாலிபப்பெண்களும் நேர்த்தியான ஆடையாபரணுதிகளுமணிந் தலங்கரித் ததிக இலட்சணமா யிருக்கிறுர்கள். அவர்க ளொன்றுக்கொன்று குதித்து விளையாடுகிறுர்கள், துதித்துச் சங்கீதம்பாடுகிறுர்கள். அப்படி யிருக்கையில் நான்போகவே யவர்க ளென்னைக்கண்டவுடனந்த வாலிபப் பெண்க ளெல்லாம் ஒடிப்போய்த் தங்கள் தங்களுடைய அறைகளில் புகுந் தொழித்துக் கொண்டார்கள் அந்த அறைகள் ஒவ்வொன்றிலும் சிவப்புக் கற்களையும், பற்பல இரத்தினுதிகளையும் பதித்துத் தங்கத்தாற் செய்யப்பட்ட ஒவ்வொரு சிம்மாசனங்களு மிருக்கிறது. அந்த அறைகளில்நின்றும் ஓரறையிலிருந்து சிவப்பான கண்களையுடைய ஹபஷியைப்போ லொத்த் ஒருமனுடன் நேர்த்தியான வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டு வெளியில்வந்து என்னை அவன் மகாக்கோபத்துடன் பார்க்கத் துடங்கினுன். இன்னம் நானிருக்கப்பட்டவிடத்திற்குவந்து மேற்படி சிம்மாசனத்தின் கானினருகே யெனக்குச் சமீபத்தி லுட்கார்ந்துகொண்டு என்பேரில் கோபத்துடனே ஒருநாளிகை வரையிலும் முழித்துக்கொண்டேயிருந்தான் அப்பா லெழுந்து நின்றுக்கொண்டு மகா ஆச்சரியமாயிருக்கிறது இந்தமனுடன் கல்லாற் செய்யப்பட்டவனு, அவனுக் கென்னுடைய கோபத்தைப்பற்றிக் கொஞ்சமுங் கவனமில்லையே யென்று சொல்லிவிட்டு தானிருந்துவந்த அறையிற்போய்ப் புகுந்துக்கொண்டான் அப்பால் நானந்த விடத்தைவிட் டெழுந்து வெளியில் வந்தேன் அப்போது மேற்கூறிய வெள்ளைத்தாடியுள்ள மனுடரெனக்கு சலாஞ்சொன்னுர். நானுமவருடைய சலாமுக்கு ஜவாபு சொன்னேன் அப்பாலவ ரெனக்கு மிகவுமுபசாரமான வார்த்தைக

ளைக்கொண்டு மரியாதைசெய்து என்னைப்பார்த்து நீரவ்விடத்திலெ ன்னகண்டீர் சொல்லுமென்று கேட்டார். அதற்கு நானவ்விடத்தில் நடந்த விபரங்களை யெல்லாம் சொல்லிவிட்டு நானவரைப் பார்த்து நானும்மிடத்திற் கேட்கிறேன் நீ ருண்மையைச் சொல்லவேண்டும் நீர் யார், அந்தச் சிவப்புக்கண்ணுள்ள ஹபஷியைப் போலொத்த மனுடன்யார், அவ்விடத்தி லாடிப் பாடிக்கொண்டிருந்த அந்த வாலிபப் பெண்கள் யாரென்று கேட்டேன். அதற்கவர் ஹக்த்தஆலாவின்பேரிற் சத்தியமாய்ச் சொல்லுகிறேன் நானுகிறது கிஜுறுநபியாயிருக்கும், அந்தச் சிவப்புக்கண்களையுடைய ஹபஷிபோலொத்த மனுடனுகிறது மகாக் கெட்ட செயல்களை யுள்ள ஒருமனுடன் அந்தப் பெண்களெல்லா மவனுடைய வேலைக்காரிகள், அவர்கள் எண்ணிக்கையால் ஆயிரத்தித் தொண்ணூறுபேர்க ளிருக்கிறுர்கள் அவர்கள் நாற்பதுநாள்வரையிலும் அவ்வித மாடிப்பாடிச் சிற்றின்ப் கொண் டாடுகிறுர்கள். நாற்பது நாளைக்குப் பிறகு ஹக்த்தஆலாவுடைய வல்லமையா லவர்களெல்லோர்களும் நாற்பதுநாளைக்கு மறைந்துபோய் விடுகிறுர்கள் இவ்விதமாக மாறிமாறி நடந்துக்கொண்டிருக்கிறது ஆகையால் இன்னம் முப்பதுவருஷங் கழிந்ததின் பிறகு அந்தச் சிம்மாசனத்தி லென்னுடைய அஸாவாலடித்து அந்தச் சிம்மாசனத்தி லிருந்து அந்தச் சிவப்புக்கண்களையுடைய ஹபஷியையும், அவனுடைய வேலைக்காரிகளாகிய அந்த வாலிபப்பெண்களையும் வெளியில் துறத்தும்படிக்கு ஹக்த்த ஆலாவிடத்தி லிருந்தெனக் குத்தரவா யிருக்கிறதென்று சொன்னுர். இந்தப் பக்கீருகிய நான் ஹக்த்தஆலாவின் வல்லமையின் காட்சியைக்கண்டு திரும்பிவந்தேன்.

கூ௫-வது; முபாஜாத்தென்னு மிடத்தின்காட்சி.

—*—

பின்பு ஹிந்துஸ்த்தானி லுள்ளவர்கள் முபாஜாத் தென்று சொல்லுகிறுர்களே அந்தவிடத்திற்குப் போனேன் அந்தயிடத்தில் புலி, கரடி, ஓநாய், பாம்பு, தேள்முதலியவைகளின் அரசானது அவ்விடத்தி லிருக்கிறது ஆனு லவ்விடத்திற்குப்போக மனுடர்களு

க்கு வல்லமையில்லை அப்படி யாராவது அவ்விடத்தில் போய்விட்டால் அம்மனுடனே யந்த மிருகமுதலியவைகள் கொன்று சாப்பிட்டுவிடுகின்றன அவனைத் திரும்பவிடுகிறதே யில்லை ஆனால் மற்தானைகைபென்கிற முறைவான மகாத்துமாக்களை நினைப்பவர்கள் மாத்திரந் தப்பிவரலாம் இந்தப் பக்கிருகிய நான் அவ்விடத்திற்போய்ப் பார்த் ததைவிட்டு மீண்டேன்.

கூச-வது, பெருஞ்சிரிப்பு மதிலின் காட்சி.

அதின் பிற்பக்கத்தில் ஒரு மதில் யிருக்கிறது அதைப் பெருஞ்சிரிப்பு மதிலென்று சொல்லுகிறார்கள். அந்த மதிலி லேறி அந்தமதிலி னப்புறத்தைப் பார்க்கிறவன் அதிகமான பெருஞ் சிரிப்பாகச் சிரித்து மதிமயங்கி அப்புறத்தில் விழுந்து மௌதத்தாய்ப்போகிறான் அப்புறத்தில் நடக்கிற இரகசியங்களைச் சொல்லுகிறதில்லை இவ்விதமாய் நடந்துக்கொண்டிருக்கிற சமாச்சாரமானது நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுக்குவந் தெட்டினபோது அவர்கள் சிலதேவுகளை நோக்கி யாராவது ஒருதேவு அந்தப் பெருஞ்சிரிப்பு மதிலிலேறி யந்தப்புறத்தில் நடக்கிற இரகசியங்களையும் நடப்புகளையுந் தெரிந்துவந் தெனக்குச் சொல்லவேணுமென். றுத்தரவு செய்தார்கள். உடனே யந்தத்தேவுகளி லனேகதேவுகள் நபியவர்களி னுத்தரவுப்பிரகாரம் பெருஞ்சிரிப்பு மதிலிடமாய்ப்போய் அந்த தேவுகளில் நின்றும் ஒரு தேவானது அந்தப் பெருஞ்சிரிப்பு மதிலி லேறினது அது எல்லோருக்குமுள்ள முறைபோலவே பெருஞ்சிரிப்பாகச் சிரித்து அந்தப்புறத்தில் விழுந்துவிட்டது பிறகு மீண்டுவரவில்லை அப்பால் மற்றத் தேவுகளெல்லாம் கூடி யோசித்து இன்ன மொருதேவுடைய இடுப்பிலும் தலையிலும் இரும்புச்சங்கிலிகளைக் கொண்டு தளைந்து அச்சங்கிலியை மற்றத் தேவுகளெல்லாம் கையில்பிடித்துக் கொண்டு தளைப்பட்டதேவை யந்த மதிலின்மீ தேற்றினார்கள். அந்தத்தேவு மப்புறத்தைப் பார்த்

து முன் தேவைப்போலவே பெருஞ்சிரிப்பாகச் சிரித்து திரேகத்துடனே அப்புறத்தில் விழுந்தது அப்போது மற்றத் தேவுகளெல்லாம் அவைகள் கைவசம் பிடித்த சங்கிலியைப் பெலவந்தமாய்ப்பிடித்திழுத்து அப்புறம்விழுந்ததேவை வெளியிலெடுத்து சுலைமான் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுடைய சன்னிதானத்திற்கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன அந்தத்தேவு உயிரோ டிருக்கிறது. ஆனல் மயக்கமாயும், கண்களைத்திறக்காமலு மிருப்பதுடன் ஒருவரிடத்திலும் பேசவுமில்லை ஆகையால் மேற்படி தேவுக்குக் கூடியமட்டிலும் மருந்துகளைக் கொடுத்துங் குணப்படவில்லை அப்பாலொருவைத்தியன் நபிஸுலைமான் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களுடைய சமுகத்திலிருந்தவன் சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய சன்னிதானத்தை நோக்கி சன்னிதானத்திலிருந் துத்தரவானல் நானிந்தத்தேவைப் பேசும்படி செய்கிறே னென்று மிகவு மன்றுடினன். அப்போது சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்க ளந்தப்படிக் குத்தரவு கொடுத்தார்கள். உடனே அந்தப் புத்திசாலியான வைத்தியன் ஒருதோட்டத்தை யலங்கரித்து அதில் வெள்ளிகளாலும், தங்கங்களாலும் செங்கல்களைப்பதித்து மேற்படி தோட்டத்தில் எல்லாவிதமான மரங்களையும் சேர்ப்பித்து அதில் சில ஹவுலுகளையுண்டாக்கி யவைகளில் தேன், பால், சாராயமுதலியவைகளை விட்டு நிரப்பி அழகான திரேகவடிவுள்ள ஆயிரம் வாலிபப்பெண்களைப்பற்பலவிதமான உயர்ந்த ஆடையாபரணதிகளைக்கொண் டலங்கரித்து அவ்வாயிரம் வாலிபப்பெண்களையு மந்தத் தோட்டத்திற் கனுப்பி அப்பா லந்தத் தேவையும் அந்தவிடத்திற் கொண்டுபோய் விட்டுக் கொண்டு அந்தத்தேவை நோக்கி யிந்தவைத்தியன் ஓ தேவேநீகண்ணைத்திறந்துபார் நீ யெதைக்கண்டு மோகப்பட்டாயோ அந்தஇடந்தான் இது என்றுசொன்னன் உடனே அந்தத்தேவு கண்ணைத்திறந்து அந்தத் தோட்டத்திலுள்ள அலங்காரங்களை யெல்லாம்பார்த்துவிட்டு ஆஹ் என்றொரு ஆங்காரச்சப்தம் போட்டுக்கொண்டு யிது எங்கே, அது எங்கேயென்று சொல்லிவிட்டு உடனே யிறந்து போய்விட்டது.

ஆகையால் அல்லாஹுத் தஆலாவுடைய குத்றத்தா லவ்விடத்தி லிருக்கப்பட்ட அற்புதங்களை நாவினற் சொன்னல் நாவு சுட்டெரிந்து போய்விடும் அப்படிச் சொன்னவனும் செத்துப்போய்வி

டுவான் இந்தப் பக்கீருகிய நானும்போய் அந்த மதிலின்பேரி லப்புறமெட்டிப்பார்த்துச் சிரித்தேன் ஹக்த்த ஆலாவுடைய வல்லமையைக் கண்காட்சி செய்துவிட்டு அவ்விடமிருந்து திரும்பிவந்தேன் அவ்விடத்தி லுள்ள பூமிகளெல்லாம் உப்புநீருள்ளதா யிருக்கிறது எல்லாக்காரியங்களையும் அல்லாஹுத் தஆலா மெத்த அறிந்தவனுயிருக்கிறான்.

கூ௬-வது ஹிக்காயத்து.

இதிற் சொல்லப்பட்டவைக ளெல்லாம் மேற்படி ஷெய்கு மகுதூம் ஜிஹானியான் ஜிஹாங்கஷ்த் தென்னும் செய்யிது ஜலாலுத்தீன் ஹுஸைன் றஹமத்துல்லாஹி அலைஹியவர்கள் யாத்திரை செய்து அவர்கள் திருக்கண்களால் கண்டு அவர்கள்வாயால் அருளிய சரித்திரமா யிருக்கும் மேற்படி ஷெய்கவர்கள். முகவுரையிற் கூறியபடி ஹிஜுறத்து எழுநூற்றி யேழாம்வருஷம் ஷஃபான்மாதம் பதினேந்தாம் திகதிபற அத்திரவன்று பிறந்து வளர்ந்து ஜீவித்திருந்து ஹிஜுறத்து எழுநூற்றிஐம்பதாம் வருஷம் துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பதாம் திகதி புதன்கிழமை சூரியனஸ்தமிக்கிற சமயத்தில் வபாத்தானார்களென்றும், இன்னமொருசொல்லில் ஹிஜுறத்து எழுநூற்றி யெழுபத்திமூன்றும் வருஷத்தில் வபாத்தானார்களென்றும், பின்னும் ஒரு வுறுதியானசொல்லில் ஹிஜுறத்து எண்ணூறும் வருஷத்தில் வபாத்தாகிச் சுவர்க்கப்பதி யடைந்தார்களென்றுமெழுதப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கப்ருகிறது இந்தியாவில் முல்தான் சரகத்தில் உஸ்ஸாவென்னும் பட்டணத்தில் யிருக்கிறது.

மேற்படி ஷெய்குநாயகமவர்கள் ஜீவித்திருந்த காலங்களில் இதிலடங்கிய யாத்திரைச் சரித்திரத்தைத் தவிர இன்ன மனேகங் கருமாத்துகள் செய்திருக்கிறார்கள் ஆகிலும் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி அவைகளில்நின்றும் ஒரு சிறிய காரணத்தையெடுத் தெழுதப்படுகிறது அதென்னவெனில்.

ஒருநாள் நாயகமவர்கள் தங்கள் வீட்டினிடத்தி லுட்கார்ந்திருந்தார்கள் அப்போ தொருவிடத்தில் நெருப்புப்பிடித் தெரிந்தது உடனே நாயகமவர்களுக்குத் தெரிந்து மற்றுஞ் சனங்கள்பேரிற்

கிருபையாகித் தங்களுடைய கையில் ஒருபிடி மண்ணையள்ளி யா ஷெய்கு முஹ்யியத்தீன் அப்துல் காதிறென்று உரக்கச் சொல்லிக் கொண்டு மேற்படி மண்ணை எரிந்துக்கொண் டிருக்கிற நெருப்பின் பேரில் தூவினார்கள். அந்தவுடனே மேற்படி நெருப்பானது பூருவு மணைந்துவிட்டது மற்றும் சனங்களெல்லாம் இந்த மகுதூம் ஜிஹானியான் ஜிஹாங்கஷ்த் தென்னும் நாயகமவர்களின் பொருட்டால் நெருப்புறு ஈடேற்றம்பெற்றுச் சிறப்பாக வாழ்ந்திருந்தார்கள்.

ஆகையால் இந்த ஜிஹாங்கஷ்த் தற்புதப் புத்தகத்தை வாங்கி யின்புற்று வாசித்தறியும் சகல முஃமீன்களையும் அல்லாஹுத்த ஆலா இருபதியிலு மீடேற்றி வைப்பானாகவும் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

அல்லா றசூலுதவியைக் கொண்டும் முஹ்யித்தீன் அப்துல்க் காதிருண்டவர்களுடைய கிருபையைக்கொண்டும் இந்தச் சரித்திரத்துக் குடையவர்களாகிய செய்யிதுனா ஜலாலுத்தீன் ஹஸன ன், மகுதூம் ஜிஹானியான் ஜிஹாங்கஷ்த்து றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய துஆப் பறக்கத்தைக்கொண்டும் அச்சிட்டு நிறைவேறினது.

ஜிஹாங்கஷ்த் தற்புதம்

முற்றிற்று.

—✱—